வசந்தம்

மலர் 5 | விய, ஐப்பசி. | இதழ் 7

பொருளடக்கம்

மலர் மணம்

பரிசுபெற்ற மிருகம் — ஏ. ஷண்முகம் பி. ஏ. ... 2

வைத்தியம் பலவிதம் — ரா. நா. ... 4

மகிழுலகம் — செந்தாமரை ... 7

மல்லிகை மொக்கு — தா. நாகலிங்கம் ... 9

விருந்தினருக்கு — ப. தனுஷ்கோடி ... 15

பூமியும் சுவர்க்கமும் — எச். விஜயகுமார் ... 25

புத்தக ஆராய்ச்சி — 'உமாபதி' ... 37

ஏழு பருவங்கள் — அ. கிருஷ்ணசாமி நாயுடு ... 38

சகினு — கே. சி. எஸ். அருணுசலம் ... 41

சூட்டோட்டம் — ஆர். கே. விசுவநாதன் ... 48

சோகம் — மு. பெரியசாமி ... 53

அஞ்சனம் — ஜெயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன் ... 54

நடிகை — கோமதி சுவாமிநாதன் ... 65

மண்ணுசை — 'சுகி' ... 71

சுசிலாவின் பை — 'தனம்' ... 76

கன்றுக் குட்டி — பெ. தூரன் ... 79

செல்வம் பயல் — 'சேது' ... 80

வாழ்க்கைச் சுழல்

(சொந்த நாவல்)

ஆசிரியர்:

ஏ. ஷண்முகம் பி. ஏ.

★

வாழ்கையைப் படம் பிடித்துக் காட்டும் அதி அற்புதமான நாவல். இனிய கதைப் போக்கு. அரிய கருத்துக்கள். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மறக்க முடியாத கதா பாத்திரங்கள். தெவிட்டாத தேன் நடையில் ஆசிரியர் எழுதியிருக்கிருர். சொந்த நாவல் உலகில் இதை ஒரு ஜோதி என்று சொல்லலாம்.

விவரங்களுக்கு:

புதுமலர் நிலேயம்,

கோயமுத்தூர்.

★

தற்கால கட்டிட நிர்மாணம்

பள்ளிக்கூடங்கள்.

சமூகத்தின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பல திட்டங்களில் கல்விக்கு நியாயமாக முக்கியஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சிறுவர்கள் பகற்பொழுதில் பெரும்பாகத்தைப் பள்ளிக்கூடத்தில் கழிப்பதால் அக்கட்டிடம் சிறுவர்களின் ஆரோக்கியத்துக் கேற்றதாகவும், அழகாகவும், நற்சுவைக்கு உதாரணமான அந்தஸ்துடனும் அமைக்கப்பட வேண்டும்.

சிமின் போர்ஸ்ட் கான்கிரீட் நான்பட உழைக்கும், சிக்கனமானது, பல உபயோகத்துக்கும் ஆகும், நெருப்பினல் பாதிக்கப் படாத்து, சுத்தமானது, ஆதலால் பள்ளிக்கூடங்களும், அவற்றிற்கனுசரணையான பிரசங்கமண்டபம், சாப்பாட்டுக்கூடம், விஞ்ஞான ஆராய்ச்சியிடம், நீந்தல் தொட்டி, பட்டறை, தேகப்பயிற்சிசாலை முதலியன கட்டுவதற்கு அதுவே மிகவும் ஏற்றசாதனம்.

கான்கிரீட்டை நன்கு பயன்படுத்திக் கொள்ள கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் (199, மவுன்டு ரோடு, மதராஸ்) உதவி எப்பொழுதும் கிடைக்கும்.

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

ஸி.எம்.ஐ.

இலவச ஸிமெ சேவை

ஜே 108

கௌரவ ஆசிரியர்கள்:
டி. கே. சிதம்பரநாத முதலியார். சர். ஆர். கே. சண்முகம் செட்டியா

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

மலர் மணம்

ஆசிரியர்

உழைப்பின் பலனை அனுபவிப்பதே தீபாவளி. அத்தகைய தீபாவளிக் கொண்டாட்டக் காட்சிகளில் ஒன்று, இம்மாத 'வசந்தத்'தின் மேலட்டையில் விளங்குகிறது.

நல்ல கருத்தும், உயர்ந்த நகைச் சுவையும் அமைந்த அரிய சிந்தனைக் கதை யொன்றை தொழில் துறையில் புகழ் பெற்ற, ஏ. ஷண்முகம் பி. ஏ. அவர்கள் இந்த இதழுக்கு உதவியிருக்கிறார்கள். அவரது இந்த முதல்க் கதையே விரைவில் அவர் எழுத்துலகிலும் பரந்த புகழ் பெறுவார் என்பதற்கு நல்ல உதாரணமாக விளங்குகிறது. ஷண்முகம் அவர்களின் அரிய விஷயதானங்கள் இனி அடிக்கடி 'வசந்த'த்தில் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய தொடர்கதை இந்த இதழில் ஆரம்பமாகியிருப்பது வாசகர்களுக்குத் திருப்தியளிக்கும். வழக்கமான மற்ற அம்சங்களையும் சுவைத்துப்பாருங்கள்.

பரிசுபெற்ற மிருகம்

[ஏ. ஷண்முகம், பி. ஏ.]

13225

ஹிம்சாபுரி என்பது தமிழ் நாட்டின் ஒரு கோடியிலுள்ள கிராமம். இக்கிராமத்தில் அஹிம்சா தர்மத்தைப் பரவச் செய்ய ஒரு சங்கமிருந்தது. இச்சங்கத்தின் முக்கிய நோக்க மென்னவெனில் பகுத்தறிவில்லாப் பிராணிகளுக்குப் பகுத்தறிவுள்ள பிராணிகளால் ஏற்படும் சங்கடங்களைத் தீர்த்து, துஷ்டர்களை நிக்ரஹம் செய்து, சிஷ்டர்களாகிய மிருக இனங்களைப் பரிபாலனம் செய்வதே.

மனிதர்கள் மாதத்திற்கு ஒரு முறை பண்டிகை என்னும் பெயரால் தங்கள் சுற்றத்தோடு ஒன்று கூடி பலகாரபக்ஷணங்கள் செய்து உண்டு அனுபவிக்கிறார்களே, மிருகங்களுக்கு இவ்விதச் சந்தர்ப்பத்தை வருஷத்தில் ஒரு முறையேனும் அளிக்க வேண்டுமெனத் தீர்மானித்து, அதற்கு வேண்டிய செலவுத் தொகையைப் பொது மக்களிடமிருந்து அச்சங்கத்தார் வசூல் செய்தார்கள்.

பண்டிகை நாளும் வந்தது. விரிந்ததோர் கிராம மைதானத்தில் ஜனங்கள் திரள் திரளாகக் கூடினார்கள். ஜலத்தையே வருஷக்கணக்காகக் கண்டிராத மிருகங்கள் பல, கிராமக் குளம் குட்டைகளில் துவக்கி எடுக்கப்பட்டு, வண்ணான் சலவைத் துணி போல், தூய்மையாகக் கண்காக்ஷி சாலைக்குக் கொண்டு வரப்பட்டன. எங்கு பார்த்தாலும் நாலுகால் மிருகங்கள் ஒரே கூட்டமாக நின்று கொண்டு, மிகவும் கம்பீரமாகத் தங்கள் எழிலை, இரண்டு கால் மிருகங்கள் மெச்சத்தக்க முறையில் காட்டிக் கொண்டிருந்தன.

இம்மிருகங்களைப் படைத்த பிரமதேவன் பேசும் வன்மையோடு சிருஷ்டி செய்திருந்தால், இம்மிருகங்கள் நிச்சயமாகத் தங்கள் நன்றியை அவ்வூர் வாசிகளுக்குப் பிரசங்கமாரிகளாகப் பொழிந்து தள்ளியிருக்கும். எனவே பேசும் தன்மையில்லாத மிருகங்கள் தங்கள் தலையை ஆட்டி தம் நன்றியறிதலைப் படாடோபமின்றித் தெரிவித்துக் கொண்டன.

மிருகங்கள் ஆடும் ஓடும் பந்தயங்களில் தங்கள் கை வரிசைகளைக் காட்ட, ஓர் ஓட்டப் பந்தயத்தை ஏற்படுத்தி, அதில் முதல், இரண்டாவது, மூன்றாவதாக ஓடி வரும் மிருகங்களுக்குப் பரிசுகளும் கொடுக்கத் தீர்மானித்தனர். நாலுகால் மிருகங்களின் ஓட்டப் பந்தயம் ஆரம்பமாயிற்று.

இம்மிருகங்களில் முதல், இரண்டாவது, மூன்றாவதாக ஓடிவருபவற்றைத் தேர்ந்தெடுக்க, மனிதர்களாகிய நான்கு மத்தியஸ்தர்கள் – நீதிபதிகள் – நிர்ணயிக்கப் பட்டனர்.

மிருகங்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு ஓடிவரும் விந்தைதான் குழுமியிருந்தவர்களுக்கு குதூகலத்தைக் கொடுத்தது. குதிரைப் பந்தயங்களும், சிறு காளை மாடுகளின் பந்தயங்களும், நாய்களின் பந்த

யங்களும், நாய்ப் பந்தயங்களும் முடிவடையவே, கடைசியாகக் கழுதைகள் ஓடும் பந்தயம் வந்தது.

கழுதைகள் தங்கள் எஜமானர்களுடன் வரிசையாக அணிவகுத்து ஓடுவதற்குத் தயாராயிருந்த காட்சி, மிகவும் ருசிகரமாயிருந்தது. பந்தயத்தில் பங்கெடுத்துக் கொண்ட கழுதைகளில் ஒன்று தன் எஜமானனுக்குத் தன் பின்னங்காலால், ஒரு உதை கொடுத்துக் கனைக்கவே, மற்ற கழுதைகள் பந்தயம் ஆரம்பமாய் விட்டதென்று, தங்கள் எஜமானர்களைத் தங்களுடன் இழுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தன.

பந்தயத்திற்குச் சமிக்கை செய்த கழுதை மாத்திரம், மத்தியஸ்தர்கள் நிர்வாகத்தைத் தன் தலைமேற்கொண்டு இன்று தான் தான் எஜமானன் என்னும் பாவனையில், தன் முதலாளியை உதைத்து வெளியேற்ற முயற்சிகள் செய்து கொண்டிருந்தது.

கழுதைகளும், அவைகளின் எஜமானர்களாகிய ஜாக்கிகளும் வாயுவேகம் மனோவேகமாக வந்து கொண்டிருந்தனர். முதலாவது, இரண்டாவது வந்த கழுதைகள் பந்தயத்தை, சங்கத்தாரின் விதிப்படியும், சட்ட திட்டப்படியும் நிறைவேற்றிப் பரிசுகள் பெற்றன. மூன்றுவதாக வந்த கழுதை, நன்றுகவே ஓடி வந்து, பந்தய இறுதி ஸ்தலத்தை அடைந்தது. ஆனல் இக்கழுதையின் ஜாக்கி இதனேடுகூட ஓடிவரவில்லை. இது கழுதையின் குற்றமல்ல. எஜமானனுக்கு ஓடச் சக்தி இல்லையென்றுல் அதற்குக் கழுதை எங்ஙனம் பொறுப்பாளி? மத்தியஸ்தர்கள், சட்டப்படி இக்கழுதைக்குப் பரிசு கொடுப்பதற்கில்லை யென்று தீர்மானம் செய்தனர். சட்ட திட்டங்களுக்குச் சட்டை செய்யாத மத்தியஸ்தர்களில் இருவர், மூன்றுவது வந்த கழுதைக்கு, மூன்றுவது ஸ்தானம் கொடுத்தே தீரவேண்டும் என்று வாதாடினர்கள். மத்தியஸ்தர்கள் இருதிறத்தாருக்கும் வாக்கு வாதம் பலமாயிற்று. இதைக் கண்டு சகியாத ஆங்கிலேயர் ஒருவர், மத்தியஸ்தம் செய்து, இக்கழுதைக்குப் ஸ்பெஷல் பரிசு கொடுப்பதே உசிதம் என்றுர்.

'சட்டம் ஒரு கழுதை' என்பார்கள். இந்த இடத்தில் ஷை சட்டம், மூன்றுவது பரிசு பெற்றிருக்க வேண்டிய கழுதையின் விஷயத்தில் இடக்கு செய்து விட்டது. கடைசியில் மத்தியஸ்தர் தீர்ப்பின்படி அக்கழுதைக்கு ஒரு விசேஷப் பரிசு கொடுக்கப் பட்டது. ஆனந்தத்தினல் பலமாக ஒரு கனைப்புக் கனைத்தது அந்தப் பரிசு பெற்ற மிருகம்!

★

வைத்தியம் பலவிதம்

ரா.கா.

மானிடராகப் பிறத்தல் அரிது என்று பெரியோர் கூறுகின்றார்கள். கிடைத்தற்கரிய இந்த மானிட உடலை தற்கால வைத்தியர்கள் பங்கு போட்டுக் கொண்டு விட்டனர். மூளை வைத்தியர், கண், காது, மூக்கு வைத்தியர், தொண்டை டாக்டர், ரண சிகிச்சை நிபுணர், குடல் கோளாறுகள் தீர்ப்பவர், ஹிருதய நோய் குணப்படுத்துபவர் இப்படியாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு அங்கத்தைப் பங்கு போட்டுக் கொண்டு விட்டனர். எல்லாம் நமது நன்மைக்காகத்தான் இந்த பாகப் பிரிவினை செய்து கொண்டு விட்டதாகச் சாதிக்கின்றனர்.

இது மட்டுமல்ல; இந்த டாக்டர்களுக்குள் இருக்கும் ஒற்றுமை உணர்ச்சி பிற தொழில் நிபுணர்களிடம் காண்பது அரிது. தலைவலி என்று ஒரு டாக்டரிடம் சென்றால் அவர் சில காலம் வைத்தியம் செய்வார். அதில் குணப்படாவிட்டால் "உங்கள் கண்ணில் ஏதோ கோளாறு இருக்கிறது" என்று கூறி தனது நண்பர் கண் வைத்தியரிடம் அனுப்புவார். அவர் செய்ய வேண்டியதைச் செய்து கண்ணாடி வியாபாரிக்கு சிபார்சு செய்வார். இதற்கும் தீராவிட்டால் பல் வைத்தியர் உதவியை நாட வைப்பார். இவ்வாறு ஐக்கிய பாவத்துடன் பலவகை டாக்டர்களும், அவர்களுடைய கூட்டாளிகளான மருந்து வியாபாரிகளும் நம்மை - இல்லை நம் வியாதிகளை - நம்பி வாழ்கின்றனர்.

இந்த டாக்டர்களிடம் மற்றொரு அதிசயத்தையும் காணலாம். பணம் சம்பாதிப்பதில் ஒற்றுமையாயிருக்கிறார்களே தவிர சிகிச்சை முறையில், நோய்களின் அடிப்படையை ஆராய்வதில் மாறுபட்ட கருத்துக்களையே வெளியிடுவார்கள்.

'டான்ஸில்' 'டான்ஸில்' என்ற வார்த்தை அடிபடுவதைக் கேட்டிருப்பீர்கள். அதாவது உள் நாக்கு வளர்வதனால் ஏற்படும் கோளாறு. சென்னைக்கு வந்து ஏதாவது ஒரு ஆஸ்பத்திரியில் நுழைந்தீர்களானால் ஒரு நாளைக்கு டஜன் கணக்கில் உள் நாக்கு ஆபரேஷன் நடக்கும். இந்த சிகிச்சை பிரபலமாக நடக்கும் ஆஸ்பத்திரி ஒன்றிற்கெதிரில் ஒரு டாக்டர் "உள் நாக்கை வெட்டாமலே வியாதி குணம் செய்யப்படும்" என்று விளம்

பரம் செய்திருப்பதைக் காண லாம்.

உள் நாக்கு வளர்வதனுலோ, புண் ஆவதனுலோ ஜீரண சக்தி கெட்டு விடுகிறது, அதை நீக்கா விட்டால் மூளைக் கோளாறு கூட ஏற்பட்டு விடும் என்று டான்ஸில் டாக்டர்கள் கூறுவார்கள். இந்த டான்ஸில் ஆபரேஷன் விசேஷமாக நடந்து கொண்டு வருகையில் உள் நாக்கைக் கத்தரித்து விடுவதால் பேராபத்து ஏற்படுகிறது என்று ஒரு லண்டன் டாக்டர் கூறுகிருர். உள் நாக்கு மனித சரீரம் ஆரோக்கியமாக இருப்பதற்கு இன்றியமையாதது. அதை எடுத்து விட்டால் அதனுல் தான் மூளைக் கோளாறு ஏற்படும் என்று அவர் எழுதுகிருர். உள் நாக்கு வளர்வதாலோ, அல்லது புண் எற்படுவதனுலோ கஷ்டம் ஏற்பட்டால் ஒரு நாள் பட்டினியிருந்தால் குணமாகிவிடும் என்று அவர் அபிப்பிராயப்படுகிருர்.

'டி. பி' என்று சொல்லும் காசநோய்க்கு ஒரு விசித்திர சிகிச்ஸை செய்கிருர்கள். காசக் கிருமிகள் சுவாசப் பையில் இருக்குமானல், சுவாசப் பைக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் ஒரு நரம்பைக் கத்தரித்து விட்டால் ரத்த ஓட்டமில்லாமல் கிருமிகள் செத்துவிடும். நரம்பு சில நாட்களில் ஒட்டிக் கொள்ளுமாதலால் மறுபடியும் சுவாசப் பைக்கு ரத்தம் சேர்ந்து ஆரோக்கியமாயிருக்கலாம் என்பது இவர்கள் கருத்து. ஆனல் இந்த முறையில் குணமடைந்தவர்கள் கிடையாது என்று கூறுகின்றனர் மற்றும் சில டாக்டர்கள். கிருமிகள் சுவாசப் பையில் மட்டும் இருந்தால் ஒரு வேளை இந்த நரம்பு சிகிச்சை பயனளிக்கக் கூடும்.

ஒவ்வொரு நோய்க்கும் மருந்து கண்டு பிடிப்பவர்கள் முதலில் இந்த மருந்துகளை எலிகளுக்குக் கொடுத்துச் சோதனை செய்து பார்த்து அதனுல் குணம் ஏற்பட்டால் தான் அதை மனிதர்களிடம் பிரயோகிக்கிருர்கள். ஆனல் எலியும் மனிதனும் ஒன்ரு என்று கேட்கிருர் பகுத்தறிவு வாதி. மனிதனுக்கு விஷமானது சில மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் ஆரோக்கியமாயிருக்கின்றது. உதாரணமாக காக்கைகள் கேவலம் அசுத்த பதார்த்தங்களையே உட்கொள்கின்றன. எலிகளும் அப்படியேதான் வாழ்கின்றன. ஆகையால் எதைப் பற்றியும் வைத்தியர்கள் செய்யும் சோதனைகள் பெரும்பாலும் பயனற்றதாகவே போகின்றன.

சர்வ நிவாரண சஞ்சீவினிகளைப் பற்றி ஒரு வார்த்தை. சில வருஷங்களுக்கு முன் ஒரு டாக்டரால் தயார் செய்யப்பட்ட ஒரு திராவகம் ஏராளமாகப் பிராபல்யம் பெற்று அதன் கர்த்தாவுக்கு அளவற்ற தனத்தை அளித்தது. அதைப் பற்றி என் நண்பர் ஒருவர் 'இந்த திராகவத்தில்

ஒரு சொட்டு சாப்பிட்டால் மலப்பிரவர்த்தி யாகும்; அதே திராவகத்தில் ஒரு சொட்டு பேதியாவதை உடனே நிறுத்தும். விசித்திரமான மருந்தப்பா இது" என்று தமாஷாகச் சொல்வார்.

இதே மாதிரி இன்று பென்ஸிலின் மாத்திரை அடிபடுகிறது. க்ஷயம், காசம், கபஜ்வரம் எல்லாவற்றிற்கும் பென்ஸிலின் என்று ஜபம் செய்கிறார்கள். ஆனால் பென்ஸிலின் கிடைத்தற்கரியதாயிருந்த நிலையிலிருந்து புட்டியில் கடைக்குக் கடை விற்பனைக்கு வந்து விட்டாலும் தர்மராஜன் வேலை குறைந்ததாகத் தெரியவில்லை. வைத்தியர்கள் பெருகி வருகிறார்கள்; வைத்திய முறைகள் பெருகி வருகின்றன; மருந்துகளின் ரகம் சொல்லத் தரமன்று. ஆனால் நோய் குறையவில்லை, மரண விகிதம் குறையவில்லை. இந்த விசித்திரத்திற்கு என்ன காரணம்? வைத்தியர்களைத்தான் கேட்கின்றேன்.

விரிகின்ற மென்மலரை
விரல்கொண்டு முறித்தெடுத்து
கரியநிறக் கூந்தலிலே
குந்தவைத் தழகுபார்த்துச்

சிரித்துள்ளம் மகிழ்கின்ற
சனங்கள்வாழ் உலகமிது !

வால்விரித்து வனப்பேறும்
மணிக்கழுத்தில் பொன்நெளியக்
கால்பாவி வட்டமிட்டுக்
காதலியைத் தழுவவரும்
சிலமிகு புருவதனைச்
சிறைப்படுத்தி மேயவிட்டுச்

சிரித்துள்ளம் மகிழ்கின்ற
சனங்கள்வாழ் உலகமிது !

உருண்டோடி வரும் நதியில்
உடல்தேய்த்துக் குளித் துமிழ்ந்து
திருநடனம் புரிநதியின்
திருமுகத்தைப் புண்ணாக்கிச்

சிரித்துள்ளம் மகிழ்கின்ற
சனங்கள்வாழ் உலகமிது !

மேல்விலைக்குக் காளைவரின்
மோகமுடன் வாங்கிப்பின்
காலடியில் இரும்படித்து
கழுத்தினுக்கு மணிபூட்டி
வால்முறுக்கி அடித்துவண்டி
வேகமுடன் செல்லுகையில்,

சிரித்துள்ளம் மகிழ்கின்ற
சனங்கள்வாழ் உலகமிது!

இருள் தூங்கும் கானகத்தில்
எழுந்துயர்ந்து வான்நோக்கும்
மரக்கிளையில் கண்ணுறங்கும்
மணிக்குயிலைச் சுட்டங்கு
வரும்புள்ளி மான்கொன்று
வெள்ளை நிற முயல்கொன்று

சிரித்துள்ளம் மகிழ்கின்ற
ஜனங்கள்வாழ் உலகமிது!



மல்லிகை மொக்கு

தா. நாகலிங்கம்

"வீடு பிடித்ததா, புவனா? சின்ன வீடுதான். இருந்தாலும் நல்ல காற்றுக்கும், வெளிச்சத்திற்கும் பஞ்சமில்லை..." என்றான் சந்திர சேகரன்.

"பிடிக்காமலென்ன? பிடித்துத் தான் இருக்கிறது. ஆனால்....." என்று சற்று பேச்சின் ஸ்வரத்தை இறக்கினாள் புவனேஸ்வரி.

"ஆனால் என்ன?"

"ஒன்றும் இல்லை. குளிப்பதற்கும் யாராவது வந்தால் உட்கார்ந்து பேசுவதற்குந்தான் சௌகரியம் அவ்வளவாக இல்லை என்று நினைத்தேன்."

"என், அதோ அந்தத்தொட்டிக் கருகில் குளிக்கலாமே! வருபவர்கள் என்ன படைதிரண்டா வரப்போகிறார்கள்? அப்படி வந்தால்தான் என்ன, வீதித் திண்ணை இருந்தே இருக்கிறது."

"ஆமாம், வீடுதேடி வருகிறவர்களை நாடோடிகள்போல் திண்ணையில் உட்கார வைப்பதுதான் உங்கள் பரம்பரை வழக்கமாக்கும்?"

இதைச் சொல்லிவிட்டு புவனேஸ்வரி உதட்டைக் கடித்துக்கொண்டாள். இப்படிச் சொல்லியிருக்கக் கூடாது என்று அவளுக்கே பட்டது. சேகரனின் முகத்தைப் பார்த்தாள். அவன் முகம் கறுத்து விட்டது.

படபடப்பான குரலில், "என், உட்கார வைத்தால் என்ன? அந்தஸ்து குறைந்து விடுமா? உன் தகப்பனார்தான் பெரிய தாசில்தார். யார் தலையிலோ கை வைத்து மூவாயிரம் நாலாயிரம் என்று பணத்தை வாரியிறைத்து வீடு கட்டி விடுகிறார். அதில் நீ சொல்லுவது போல் ஸ்நான அறை, வரவேற்பு அறை, விருந்தினர் தங்கும் அறை, உடுப்பு அறை, படுக்கை அறை, உக்கிராண அறை இப்படியெல்லாம் பல தனி அறைகள் இருப்பது சாத்தியம், சகஜம். ஆனால் கலெக்டர் ஆபீஸில் எல்லா படியும் உள்ப்பட ஐம்பத்தைத்து ரூபாய் சம்பளம் வாங்கும் ஏழைக் குமாஸ்தாவாகிய நான் தனி ஸ்நான அறைக்கும், உடுப்பு அறைக்கும் எங்கே போகமுடி

யும்? எல்லாம் உள்ளதுக்குள் சரிசெய்துகொள்ள வேண்டியது தான்'' என்ருன்.

சேகரனின் வார்த்தைகள் புவனேஸ்வரியின் மனதில் சுருக்கென்று தைத்தன. சுடச்சுட அதற்குப் பதில் சொல்லத் துடித்தது அவள் வாய். தொண்டை வரையில் வந்த பேச்சை மென்று விழுங்கிக்கொண்டாள். அந்த வீட்டிற்குத் தான் இன்னும் புது மருமகள் என்ற நினைவு அவள் துடிப்பை அடக்கி விட்டது.

புவனேஸ்வரியின் முகத்தை ஏறிட்டுப்பார்த்தான் சேகரன்.

பட்டும் படாமலும் மைதீட்டியிருந்த நீண்ட கரிய கண்கள். அக்கண்களுக்கு அழகு செய்யும் வளைந்த புருவம். ஒரு புறத்தில் மூக்குத்தியையும் மறு புறத்தில் ஏழு கல் பதித்த பேஸரியையும் ஏந்திய எடுப்பான மூக்கு. நிழலோடும் சிறு சாந்துப்பொட்டை மையத்தில் தாங்கிய பரந்த நெற்றி. ரோஜாக் கன்னம். நொடிக்கு நூறுதரம் அசைந்தாடி டால் வீசும் வைர டோலக். இத்தனையும் கூடிய ஒரு அழகுத் தெய்வத்தின் முகம் தன்முன் நிற்பது போல் ஒரு பிரமை ஏற்பட்டது சேகரனுக்கு. வைத்த கண்ணை வாங்காமல் அந்த இன்ப போதையில் சற்று லயித்திருந்தான் அவன்.

லயம் திடீரென்று கலைந்தது. புவனேஸ்வரி முகத்தைத் திருப்பிக்கொண்டு சரேலென அந்த இடத்தை விட்டு மறைந்தாள், நாடகத்தில் டர்னிங் ஸீனில் தோன்றி மறையும் கதா பாத்திரம் போல.

கரு கருவென்று நீண்டு தொங்கிய பின்னலுக்குமேல் வைத்திருந்த மல்லிகைச் செண்டு அவள் திரும்பின போது மின் வெட்டியது. சேகரனின் பார்வை அதன் மேல் விழுந்தது. அத்தனையும் மொக்குகள். அதில் ஒன்றுகூட மலர்ந்திருக்கவில்லை!

வீட்டின் பின்புறத் தோட்டத்தில் இரண்டு நாட்களுக்குமுன் நிகழ்ந்த சிறு சம்பவம் அவனுக்கு மீண்டும் நினைவிற்கு வந்தது.

பூவாடை விரித்ததுபோல் தோட்டின் ஒருபுறத்தில் கிடந்த பவழ மல்லிகை மலர்களை வாரி ஒருபுரமாகச் சேர்த்துக் கொண்டிருந்தாள் புவனேஸ்வரி. இருந்தாற்போலிருந்து பூமாரி பொழிந்தது போல் புவனேஸ்வரியின் மேலெல்லாம் மலர்கள் உதிர்ந்தன. தலைமேலிருந்த மலர்களைத் தட்டிவிட்டுக்கொண்டே நிமிர்ந்து பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. காற்றினால் மரம் குலுங்கியிருக்கும் என்று நினைத்துக் கொண்டு முன்போலவே குனிந்து தன்வேலையில் ஈடுபட்டாள். சற்று நேரத்திற்குள் மீண்டும் ஒரு முறை பூமாரி பொழிந்தது. இம்முறை யாரோ மரத்தை உலுக்குகிருர்கள் என்பது நன்ருகத் தெரிந்தது அவளுக்கு. எழுந்து காலில் மிதிபட்டுத் துவண்ட பவழ மல்லி மலர்களைத் துளியும் லட்சியம் செய்யாமல் மெதுவாக மரத்தின் பின்புறம் சென்ருள். மூன்ருவது முறையாக மரத்தை உலுக்க சேகரன் ஆயத்தம் செய்து கொண்டிருந்தான்.

"போதும்! இனி மலர்மாரி பெய்வதற்கு அங்கே ஆள் ஒருவரும் கிடையாது'' என்ருள் புவனேஸ்வரி புன்னகையுடன்.

"அடடா, அதற்குள் நீ வந்துவிட்டாயா?'' என்று சிரித்தபடி

கேட்டுக்கொண்டே புவனேஸ்வரியை நோக்கி வந்தான் சேகரன்.

"ஏது உங்களுக்குக்கூட பூ வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசையா என்ன?"

"அப்படி ஒன்றும் இல்லை. அந்த உரிமையை ஏகபோகமாக உனக்கே அளித்து விட்டேன்!"

"அப்படியானால் உங்கள் தலையிலிருக்கும் பூக்கள் விஷயத்தில் மட்டும் இந்த உரிமை விதிவிலக்கோ?"

சேகரனுக்கு விஷயம் விளங்கியது. தலையை லேசாகத் தட்டினான். இரண்டு மூன்று பவழமல்லி மலர்கள் தூரத்தில் போய் விழுந்தன. இருவரும் சிரித்துவிட்டார்கள்.

புவனாவின் தோளின்மேல் கையைப் போட்டபடி அவளை முன்னால் தள்ளிக் கொண்டு சென்றான் சேகரன்.

செழித்து வளர்ந்திருந்த ஜாதி மல்லிகைக்கொடியில் நான்கைந்து பெரிய மொக்குகள் தலைதூக்கி நின்றன. வெள்ளை வெளேரென்று பிரகாசித்த அந்த மல்லிகை மொக்குகள் புவனாவின் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகளைப் பரப்பியது.

"அதோ, மல்லிகை மொக்குகள்!" என்று சேகரன் பிடியிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டு செடியை நோக்கி ஓடினாள் புவனா. "இரு, இரு" என்று சொல்லிக்கொண்டே அவளைத் தொடர்ந்து ஓடுவதற்குள் அந்தச் செடியிலிருந்த அத்தனை மொக்குகளையும் புவனா பறித்து விட்டாள்.

"இரு, இரு என்று சொல்வதற்குள் ஓடி அத்தனை மொக்குகளையும் பறித்துவிட்டாயே! அந்த மொக்குகள் அந்தச் செடிக்கு எத்தனை அழகையும், கம்பீரத்தையும் கொடுத்தன! நாளைக்கு அந்த மொக்குகள் விரிந்தால் எத்தனை அழகாக இருக்கும் என்று கொஞ்சமாவது நினைத்திருந்தாயானால் கண்ணைப் பிடுங்குவதைப் போல் அந்த மொக்குகளைப் பிடுங்கி இருக்கமாட்டாய்" என்று வருத்தத்துடன் சொன்னான் சேகரன்.

"இன்னும் கொஞ்ச நேரம் போனால் அழுது விடுவீர்கள் போலிருக்கிறது. பறித்துத் தலையில் வைத்துக்கொள்ளாமல் அவற்றின் அழகை அள்ளிப் பருகுவதற்கா செடி கொடிகளை வளர்க்கிறீர்கள்? அதற்கு வீட்டில் செடி வைப்பானேன்? விலைக்கே வாங்கிக் கொள்ளலாமே! அதெல்லாம் முடியாது. மல்லிகை மொக்கு என்றால் எனக்கு உயிர். நான் பறிக்கத்தான் பறிப்பேன்" என்று சொல்லிக்கொண்டே கையிலிருந்த மொக்குகளில் ஒன்றை எடுத்து 'டப்' பென்று நெற்றியில் குத்தினாள். அந்தப் பலவந்தமான குத்தினால் அந்த மல்லிகை மொக்கின் இதழ்கள் லேசாய் விரிந்தன. அதை முகர்ந்து பார்த்தாள் புவனா. கசங்கியதினால் கசிந்த சிறு துளிகளின் ஒருவிதமான 'நெடி' அந்தமொக்கிலிருந்து கிளம்பியதாலோ, என்னவோ, புவனா முகத்தைச் சுளித்துக்கொண்டாள்.

"தானாக மலராத மலரை, பலவந்தமாகக் கசக்கி முகர்வதால் பலன் என்ன? தாசில்தாரின் மகளாய்த்தான் இருந்தாலும், இந்த அற்ப விஷயம் கூடத் தெரியாமலா போய்விடும்?" என்றான் சேகரன் ஆத்திரத்துடன்.

"அடுத்த நேர ஆகாரத்திற்கு வழியில்லாத கவிகளும், கலைஞர்களும் கவலைப்பட வேண்டிய விஷயமல்லவா அது. அதைப் பற்றி நீங்கள் அனாவஸ்யமாக மனதைக் குழப்பிக் கொள்கிறீர்கள்!" என்றாள் புவனா சாவதானமாக.

ஏற்கெனவே சிவந்திருந்த புவனாவின் கன்னத்தில் இன்னும் சிவப்பு ஏறியது. கையில் இருந்த மல்லிகை மொக்குகளை வீசி எறிந்து விட்டுச் சரேலென வீட்டிற்குள் சென்று விட்டாள்.

புவனாவை மட்டம் தட்டியதில்

"கவிகளும், கலைஞர்களும் அடுத்த நேர ஆகாரத்திற்கு வழியில்லாதிருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் அவர்கள் உன்னைப்போல் மடத்தனமாக மொக்குகளைப் பறித்துக் கசக்கி ரசிக்க மாட்டார்கள்" என்றான் சேகரன், வெறுப்புடன்.

சேகரன் ஓரளவு திருப்தியடைந்தாலும், அவள் கோபித்துக் கொண்டு மொக்குகளை வீசி எறிந்துவிட்டுச் சென்றது மனதை வாட்டியது. மௌனமாய் அவனும் வீட்டிற்குள் நுழைந்தான்.

"சேகரா!" என்ற பரிவுக்குரல்

சேகரனின் சிந்தனை ஓட்டத்தைத் தடை செய்து ஒரு நிதான நிலைக்குக் கொண்டு வந்தது. திரும்பிப் பார்த்தான். அவன் தாயார் ராஜம்மாள் கையில் ஒரு டம்ளர் காப்பியுடன் வந்து "இந்தா" என்று அவனிடம் நீட்டினாள்.

கையில் அதை வாங்கிக் கொண்டு, "நீ இன்னும் குடிக்கலையாம்மா?" என்று கேட்டான் சேகரன்.

"இதோ நான் போய்க் குடிக்கிறேன். நீ குடி. புவனத்துக்கும் இப்பத்தான் கொடுத்து விட்டு வந்தேன்" என்றாள் ராஜம்மாள்.

நின்றபடியே காப்பி டம்ளரைக் காலி செய்து விட்டு டம்ளரைத் தாயாரிடம் நீட்டினான்.

அதைக் கையில் வாங்கியபடி "ஏனப்பா, ராத்திரிக்கு ஒரு சாம்பார் வெச்சு, அப்பளம் வடகம் வறுத்தால் போதுமல்லவா?" என்றாள் ராஜம்மாள்.

"ஓ, போதும் போதும். அது சரி, புவனா என்ன இன்னும் புதுப் பெண் என்றும்மா நினைத்துக் கொண்டிருக்கிறாய்?"

"ஏன்?"

"அவளைச் சமையல் செய்யச் சொல்வது தானே? இன்னும் புது மணப்பெண் போலவே சுற்றித் திரிந்து கொண்டு தானே இருக்கிறாள்? உனக்கு உதவியாக கூடமாட மேல் வேலை கூடச் செய்ய வருவதில்லை போலிருக்கிறதே!"

"சரி தான், புவனா சொன்னாலும் சொல்லா விட்டாலும் இன்னும் புதுப் பெண் தான். இப்பொழுதென்ன உங்கள் இருவருக்கும் கலியாணம் ஆகி இரண்டு மூன்று வருஷங்களா ஆகிவிட்டன. அவள் உடனே சமையல் செய்யத் தொடங்க வேண்டியது தான்! போ. தம்பி, இங்கு என்ன பத்துப் பதினைந்து பேர் இருக்கிறார்களா சமையல், சமையல் என்று பிரமாதப் படுத்தவும், ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் ஆக்கி, அரித்து, நிமித்தி இறக்கவும்? மீறி மீறிப் பார்த்தாலும் மூன்றே மூன்று ஜீவன்கள். இதற்குச் சமைக்க எத்தனை பேர் வேண்டும்?"

"மூன்று பேருக்குத் தான் சமையல் என்றாலும் அதில் கூட ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்யக் கூடாது என்று ஏதாவது தடைகிடை இருக்கிறதா? இல்லை. அதனால் தன் உடம்பு தேய்ந்து போய் விடும் என்று அவள் நினைக்கிறாளோ என்னவோ?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை சேகரா. இன்னும் கொஞ்ச நாளைக்கு புவனம் அடுப்பு வேலையைக் கவனிக்க வேண்டியதில்லை. என்னமோ இந்தக் கட்டை இருக்கிற வரையில் நான் என் சக்தியனுசாரம் பார்த்துக் கொள்கிறேன். பிறகு நீங்கள் என்னவோ செய்து கொள்ளுங்கள். என் கண் முன்னால் நீயோ அல்லது அவளோ கஷ்டப்பட நான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன்."

"ஏம்மா, சமையல் செய்வது பெண்களுக்கு ஒரு கஷ்டமா? அப்படியானால் நீயும் இத்தனை நாளாக அந்தக் கஷ்டத்தைத் தானே பட்டிருக்கிறாய், ஏன்? இன்னும் பட்டுக்கொண்டு வருகிறாய்? முன்புதான் வேறு வழியில்லை ஒத்தாசைக்கும் ஆள் இல்லை. நீயே செய்து கொண்டிருந்தாய்; இப்போது தான் ஆள் வந்து விட்டதே! இன்னும் நீ ஏன் கஷ்டப்

பட்டுக் கொண்டிருக்க வேண்டும்? ''

''இதென்ன விதண்டாவாதம் சேகரா? புவனம் சமையல் செய்வதும், எனக்கு ஒத்தாசை செய்வதும் என் சம்மதத்தைப் பொறுத்த விஷயம். உனக்குப் பசித்தால் சாப்பிட்டு விட்டு ஆபீசுக்குப் போ. மற்ற விஷயங்களை நாங்கள் எப்படியோ எங்களுக்குள் சரி செய்து கொள்கிறோம். இதிலெல்லாம் நீ தலையிடாதே!'' என்று சற்று துடியாகவே பதிலளித்தாள் ராஜம்மாள்.

சேகரனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. உடனே ''உத்தரவு'' என்று ஒரு கையை மடக்கி, ஒரு கையை முகவாயின் மேல் வைத்துத் தலை குனிந்தான்.

ராஜம்மாள் கடகடவென்று சிரித்து விட்டாள். சேகரன் வாய் விட்டுச் சிரித்த சிரிப்பும் அந்தச் சிரிப்பொலியில் ஒன்று கலந்தது! ராஜம்மாள் அடுக்களையை நோக்கிச் சென்றாள்.

தாசில்தாரின் செல்லப்பெண், செல்வத்திலேயே பிறந்து வளர்ந்தவள்; வேலை செய்வதே சிரம சாத்தியமாயிருக்கும் என்ற எண்ணத்தினாலேயே ராஜம்மாள் பெரும்பாலும் தன் மருமகள் புவனத்தை சமையல் வீட்டிற்குள் விடுவதில்லை. ஏதோ ஆரம்பத்தில் ஒன்றிரண்டு நாட்கள் சேகரனுக்குப் பரிமாறினாள். பிற்பாடு அதற்கும் வருவதில்லை. தலையின்னி, பூவைத்து, முகம் கழுவி, பொட்டு வைப்பதற்கும், தெருவுக்கும் வீட்டுக்கும் நடப்பதற்கும் புவனாவிற்குப் பொழுது சரியாக இருந்தது. மீறினால் பின்புறத் தோட்டத்திற்குள் சென்று உட்கார்ந்து விடுவாள் கவலையின்றி.

இதை மூன்று நான்கு முறை கவனித்தான் சேகரன். இது பற்றித் தன் தாயாரிடம் பேசவேண்டும் என்று நினைத்து அதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தான். சந்தர்ப்பம் இப்போதுதான் வாய்த்ததாகையால் பேசித்தீர்த்து விட்டான் ஒரு வழியாக.

காப்பி குடித்து விட்டு வெளியே வந்த புவனேஸ்வரியின் காதில் தாயாரும் மகனும் தன்னைப் பற்றிப் பேசிய பேச்சுக்கள் விழுந்தன. நின்று முழுவதும் கேட்டாள். தன் மாமியார் தனக்கு இவ்வளவு தூரம் மதிப்புக் கொடுத்து தன்னை உயர்த்திப் பேசுவாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

கருநாகம் போன்ற அவளுடைய சடை முன்புறம் மார்பின் மீது விழுந்து கிடந்தது. சடையின் நுனியைப் பிடித்துத் திருகிக் கொண்டே அசையாது நின்று கொண்டிருந்த அவள் கண்களில் நீர் அரும்பியது. நீண்டதொரு பெருமூச்சு விட்டு விட்டு அப்புறம் சென்றாள்.

(தொடரும்)

★

விருந்தினருக்கு...

ப. தனுஷ்கோடி

"விருந்து..." என்று சொல்ல வரும் போதே வாய் பிளந்து, நாக்கில் ஜலம் வடிய ஆரம்பிக்கிறது. விருந்தில் கிடைக்கும் வெல்ல வடை, கார வடை, நெளிந்து கொடுத்து இனிக்கும் சேமியா பாயசம், தித்திக்கும் தேன் கதலி, ரத்தச் சிவப்பாகக் கண்ணைக் கவரும் மாம்பழத் துண்டங்கள், எல்லாம் அகன்ற வாழை இலையில் எதிரில் பரிமாறி இருப்பதுபோல் தோன்றுகிறது. எவ்வளவு ஏழை வீட்டு விருந்தாயிருந்தாலும், தும்பைப் பூபோல் பளிச்சென்று பசியைக் கவரும் பச்சரிசிச் சாதமும், வெண்மை கலந்த பொன்னிற அப்பளாமும், இலையில் இல்லாமலிருப்பதில்லை. எவ்வளவு அகாலத்தில் – அவசரத்தில் செய்யப்படும் விருந்தாயிருந்தாலும், நாகரீக வசதிகள் மிகுந்த இக்காலத்தில், எந்த ஊரிலிலும், காப்பிக்கடை பலகாரங்கள் இலையில் வந்து குதித்து விடுகின்றன. வயிறு நிரம்பி மூக்கில் சாதம் சிந்தும் அளவுக்கு உபசாரம் செய்வதிலும் நமது புராதன நாரீமணிகள் சளைத்தவர்களல்ல. ஆகவே விருந்து சாப்பாட்டை விரும்பாதவர்கள் இல்லை. விருந்தினால் மனம் புளகாங்கித மடையாதவர்கள் கிடையாது. வீட்டுச் சாப்பாட்டைவிட, விருந்துச் சோற்றுக்குச் சக்தி அதிகம். ஆகவே தான் அது ஒவ்வொருவரையும் கவர்ந்து விடுகிறது.

ஆனால் பேணி, பூரி, பூந்தி' மசாலா, அவியல், துவையல் எப்படி எப்படியிருந்தால் விருந்து, சிறப்பாக மிளிரும் என்பதல்ல என் ஆராய்ச்சி. நள – பீம பாக சாஸ்திரம் படிப்பதுமல்ல என் நோக்கம். எனக்கு அவை தெரியவும் தெரியாது. அதனால்தான் "விருந்து" என்பதைப் பற்றி எழுதாமல் "விருந்தினருக்கு" என்று எழுத முற்பட்டேன். விருந்தினர் என்றால் விருந்து சாப்பிடுபவரை மட்டும் சொல்வதாக எண்ணிவிடக் கூடாது. ஏனெனில் அப்படி ஒரு ஜாதி சமூகத்தில் இல்லை. இன்று விருந்தினராயிருப்பவர், நாளையே விருந்தளிப்பவராக மாறுதல் அடைகிறார். ஆகவே, சாப்பிடுபவர், சாப்பாடு போடுபவர் யாவரும், ஆண் – பெண் அடங்கலாக, அடைய வேண்டிய மனப் பண்புகள் – சீர்திருத்தங்கள் – குறை பாடுகள் – நிறை முறைகள் ஆகியவை பற்றித்தான் இக்கட்டுரை.

ஆய கலைகள் அறுபத்தினன்கு என்று வரையறுக்கப்பட்ட அக்காலத்திலேயே 'விருந்தோம்பல்' என்பதும் ஒரு கலையாக அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இன்னும் பார்க்கப் போனால், ஆதி மனிதன் பச்சைக் காய்கறிகளையும், பச்சை மாமிசங்களையும் அப்படியே புசித்துப் பசியாறும் போது, பக்கத்தில் நின்றவனுக்குப் பகிர்ந்து கொடுத்தானே, அதைப் பரோபகாரம் என்று மட்டும் சொல்லிவிட முடியாது; அதுவும் விருந்தோம்பலின் பகுதிதான். காலப்போக்கில் வளர்ச்சி பெற்ற மாறுதலுடன், அந்த அடிப்படை உணர்ச்சிதான், உயரிய கலை என்ற ஸ்தானத்திற்கு அருகதையாகி இருக்க முடியும்.

"உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்" என்ற விதி இயற்றிய காலை, சுய தேவையுடன் திருப்தியுறவில்லை; மிகுந்ததை நாளை என்று வைத்திராமல் மற்றவர்க்கும் உபயோகப்பட வேண்டும் என்ற விரிந்த மனோபாவமுடன் வாழ்ந்தனர். தன் கையில் உள்ள உணவுப் பொருள்களைப் பக்கத்திலிருப்பவருக்குக் கொடுப்பதில் பரம திருப்தியடைந்தனர். பிறர் சாப்பிடும் அழகு ஒன்றைப் பார்த்து ஆனந்தமடைவதற்காகவே, விருந்து உபசரிப்பு நடத்தும் குலப்பெண்மணிகள் இருந்து வருவதை சில இடங்களில் இன்னும் காணலாம்.

இப்படி இயற்கையாகச் சமுதாய ஒற்றுமையில், அன்பின் ஆதரவில் கிளை பரவி விருக்ஷமானதுதான் விருந்தோம்பல் என்ற கலை. மனித குலம் கட்டுக்கோப்படைந்து, ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தி, விதிகளை வகுத்து, வாழத் தொடங்கியதும், அறிவின் துணையுடன் அறுபத்து நான்கு பிரிவுகளாக, சட்டங்கள் இயற்றினார்கள். உலகில் உள்ள யாவும் இவற்றுக்குள் அடங்கி விட்டன. ஆகவே அதன் இலக்கணமும் இயற்கையோடிசைந்து பரிமளித்தது. ஆதியில், அவ்வளவாக ஜனங்களின் போக்கு வரத்தும் இருந்ததில்லை. ஊர் விட்டு ஊர் சம்பந்தமும் கிடையாது. ஆகவே புதிதாக எப்போதோ ஒருவன் ஏதோ ஒரு ஊருக்குச் சென்றால் அவனை ஆதரிப்பவர் யார்? அவனுக்கு உணவு அளிப்பவர் யார்? அதுவும் அன்பும், கனிவும் அதில் இருக்க வேண்டாமா? அது இல்லாத வரட்டுச் சாப்பாடு செறிக்குமா? இதையெல்லாம் உத்தேசித்தே "யாத்ரீகர்களுக்கும், பிராமணர்களுக்கும் மூன்று நாள் இலவச அன்னமளிக்கும் சத்திரங்களும், விருந்தோம்பல் கலையும் அமைக்கப்பட்டன" என்று ஸ்ரீ சத்தியமூர்த்தி கூறுகிறார். இந்த மரியாதை வழக்கம், சர்வாதிகாரம் செலுத்திய சக்கரவர்த்திகளின் அரண்மனைகளிலும் ஒழுங்காக அநுசரிக்கப்பட்டன, என்பதை சரித்திரங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இம்மாதிரி நிர்ணயம் செய்யப்பட்டு சிறப்புப் பெற்ற விருந்தோம்பல், கால நாகரீகத்தின் கோளாறால் சிதைவுண்டு சின்னபின்னம் அடைந்து விட்டதே என்பதை எண்ணும் போது துக்கம்தான் தோன்றுகிறது. மன்னாதி மன்னர்களும், மகுட சாம்ராஜ்யங்களும், அசைக்க முடியாத சிலா சாஸனங்களும், அழிந்து உருத்தெரியாமல் போயிருக்கையில், மனித உள்ளத்தில் மட்டுமே பதிவான கலை ஒழுங்கங்கள் மாறுதல் அடைந்ததில் வியப்பில்லை. ஆனால் அம் மாற்றம் மனிதஅறிவிற்குத் தர்மமானதாயிருத்தல் வேண்டும். மாம்பழத்தின் ருசியை தோலுடன் உரிஞ்சிச் சாப்பிடுவது பழங்காலப் பக்குவமாய் இருந்திருக்கலாம். வளர்ச்சியடையும் விஞ்ஞானத்துடன் ஒட்டிச் செல்வதுதான் முறை என்றாலும், மாங்கனியைத் தோல் நீக்கி, துண்டுகளாக்கி ஐஸ் பெட்டியில் வைத்து எடுத்தாவது சாப்பிடத் தெரிந்திருக்க வேண்டாமா? இல்லை; இன்றைய நிலை "ரிப்ரிஜரேடர்" பழங்களைச் சாப்பிடத்தான் தெரிகிறதே ஒழிய, எப்படிச் சாப்பிடுவது என்பது தெரியவில்லை.

மேற்கொண்டு பரிசீலனைக்கு வருவோம். இது பகுத்தறிவு

கொண்டு நடத்தப் படுவது. அதனால் இதில் எவ்வித பாரபக்ஷமும் ஏற்பட நியாயமில்லை. தராசின் தட்டு வெகுன்களை மட்டும் கவனிப்பதுடன் நாம் நிற்க மாட்டோம். ஒரு தட்டில் விழும் பொருள்களின் எடையைப் போலவே, மற்றொருபுறம் உள்ள படிக்கல்லின் தரத்தையும் சரியாக இருக்கிறதா என்பதைக் கவனித்தே தீருவோம். தேய்மானத்தால் வீசைக்கல் குறைந்திருப்பதை உணராமல், சரக்கு குறைகிறதே என்று குற்றம் சுமத்த மாட்டோம். சமூகத்தின் பழி, பாவங்கள் இப்படித்தான் சரியான காரணத்தை அறியாமல் அநியாயமாய் ஒரு சார்பிலேயே சுமத்தப்படுகின்றன என்பதை அறிவோம். அதே குருட்டுத்தனமான தீர்ப்பை நாமும் செய்யப் போவதில்லை. இந்த எச்சரிக்கை மனப்பான்மை கவனத்தில், எப்போதும் இருந்தே வரும்.

சரி; விருந்தினர் என்றால் இரு பிரிவு; விருந்துண்பவர்—விருந்தளிப்பவர். விருந்தில் இருவகை; ஒன்று வீட்டுக்கு வந்த தனி ,'ஒரம்பரை'' மற்றொன்று பந்தி விருந்து. இன்னும் இதில் இரண்டு தன்மை; நாமாக விரும்பி வரவழைக்கும் விருந்தினர்—தாமாக வந்து உண்ணும் விருந்தினர். நாகரீக வளர்ச்சியில் நேர்மையாகப் பிரித்துப் பார்க்க வேண்டிய முறை இதுதான். என்னதான் பழைய சம்பிரதாயங்கள் மனித சமுதாயத்திலே உடும்புப் பிடியாக ஒட்டிக் கொண்டு வந்தாலும், புது முறைகள், புது வழக்கங்கள், புது சம்பிரதாயங்கள் பரவிப் பெருகிக் கொண்டுதான் போகின்றன. ''பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல கால வகையினனே!'' என்ற பெரியார் கூற்றிரப்படி எவராலும், எந்தத் துறையில் ஏற்படும் சலனங்களையும் தடை செய்ய முடிவதே இல்லை. ஆகவே புரட்சியைக் கண்டு மிரட்சி கொள்ளாமல், தன் வழிப் படுத்தி அணைத்துக்கொள்ள முயல்வதே புத்திசாலியின் பொறுப்பாகும்.

''தங்கள் அன்புக்கு மிகவும் நன்றி. ஓய்வு உள்ள போது தாங்கள் இங்கு வந்து சில நாள் அதிதியாக இருக்க விரும்புகிறேன்'' என்று, பிறரை நாள், நேரம் குறித்துக் கட்டுப்படுத்தாமல் கலாரஸனையை முன்னிருத்தி எழுதுவது, இன்றைய அபிவிருத்தி. வரப்போகிறவரின் உசிதா உசிதம் எப்படி இருக்குமோ, அவ்வழிக்கு வளைந்து கொடுத்து அவரின் அன்பையும் நன்மதிப்பையும் பெற அந் நண்பர் தயாராக இருக்கிறார். அதிலேதான் உண்மையான இன்பம் தமக்குக் கிடைக்கும் என்பதும் அவர் நம்பிக்கை. 'அவசரக் கோலம் அள்ளித் தெளி' என்பது போல், வந்ததும் வராததுமாக, ''ஊரில் ஏகப்பட்ட வேலைகளை அப்படியப்படியே விட்டு விட்டு வந்தேன். என்ன வாயிற்றோ?'' என்று கூறி அலறிப் புடைத்து ஓடும் விருந்தாளியினால் அவருக்கு நன்மையில்லை; துன்பமேதான்.

''இங்கு வேலை அலைச்சல் மிக அதிகம். கொஞ்சம் விச்ராந்தியாக ஓய்வு பெறுதல் நலம் என்று நினைக்கிறேன். தங்கள் புனித இல்லம் எனக்கு ஆச்சரமமாக அமையக் கூடுமானால் மிகமிக நலம்.''—என்று முன்னதாக—ஆனால் அவர் குறிப்பறியும்படியாக தன் வருகையைத் தெரியப்

படுத்துகிறார் மற்றொரு நண்பர். அதற்கு வரும் பதிலின் தன்மையைக் கொண்டு தன் பிரயாணத்தை நிர்ணயிக்கிறார். அதோடு அங்கு தான் எவ்விதம் இருக்க விரும்புகிறார் என்பதையும், தன்னை எவ்விதம் பாவிக்க வேண்டும் என்பதையும் சூசகமாக வெளிப்படுத்துகிறார். நண்பரின் அன்புள்ளமும், ஆதரவுணர்ச்சியும், சமயாசந்தர்ப்பங்களும் நன்முறையில் தற்சமயம் இருக்கிறதா என்பதையும் அறிந்து கொள்கிறார். ஆகவே விவேகமுடன் — கருத்தறிந்து கூடும் இவ்விருந்தினர்கள் மனப் பண்பாட்டிலும், அறிவின் ஐக்கியத்திலும், விருந்தின் உயர்விலும், ஒரு நாளும் வீழ்ச்சியுறுவதில்லை. மறுமலர்ச்சி பெற்ற வசன இலக்கியம் போல், சமவெளிப் பிரதேசத்தில் பாயும் சிந்து நதி போல் இனிய இன்பமுடன் மணம் கமழ்கின்றது, விருந்தினர் உள்ளம்.

தானாக வருவதோ, அழைத்த பின் வருவதோ கல்வி, அறிவு, முற்போக்கு, சிந்தனை உள்ளவர்களினால்தான் திறமையாக நிர்வகிக்க முடியும். வாயு வேக மனோ வேகத்தில் திடீரென்று வந்து குதித்து அல்லல் படுத்தும் மூடசிகாமணிகள் சமுதாயத்திலே நிறையக் காணப்படுகிறார்கள். ''அவசரக் கேஸ்'' என்று டாக்டரை அழைப்பது போன்ற பதட்டமுடன், ''தந்திபோல் பாவித்து உடனே வரவும்'' என்று ஒரு காரணமும் இல்லாமல் வரவழைத்து விட்டுத் திண்டாடுபவர்களும் உண்டு. 'நாம் நாலைந்து தடவை அவர்கள் வீட்டில் சாப்பிட்டிருக்கிறோம்; நம் வீட்டுக்கு அவர்கள் வருவதே இல்லை. அவர்கள் சாப்பாட்டைச் சாப்பிட நாம் என்ன கடன்காரரா?' என்ற மூட மனப் பான்மைதான் இத்தகைய விபரீதங்களுக்குக் காரணம். இந்த எண்ணமின்றி உண்மையான அன்பு, பக்தி, விஸ்வாஸத்துடன் அழைத்திருந்தால், வந்தவர்கள் போக மாட்டேன் என்கிறார்களே என்பது போன்ற சலிப்பு-குறை, எந்நாளும் தோன்றாது.

''விருந்தும் – மருந்தும் மூன்று வேளை; மீறினால் மூன்று நாள்!'' என்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால் இதை விடாமல் மனதில் உறுதிக் கொண்டே இருக்கும் நபர்கள், விருந்தளிக்கும் வீட்டுக்காரர்கள்தான். ஒவ்வொரு ஊரிலும் மாரியம்மன் பண்டிகை முடிந்த கடைசி நாள் தோட்டி வேஷம் போடுபவன் தமாஷாக, ''விருந்தாளிகள் எல்லாம் நாளை புறப்பட்டு விடுங்கள்'' என்று தமுக்கடிக்கிறானே, அது வாவது அவர்கள் காதில் விழும் என்கிறீர்களோ? உம்! ஏது ஸார்! விருந்தின் மயக்கத்திலே — இரை விழுங்கிய நாகம் போல், அன்றுதானே அயர்ந்து கீழே படுக்கிறார்கள்! அதற்குள்ளாகவா போவது?

முனிகள், ரிஷீஸ்வரர்கள், தபஸ்விகள், யோகிகள் மிகுந்திருந்த காலத்திலே ''அதிதி ஸத்காரம்'' என்பது புனிதமான கைங்கரியமாகக் கருதப்பட்டது. ஆனால் அதற்கும், இப்போதைய நிலைக்கும் எவ்வளவு வித்தியாசம்? விருந்தளிப்பவர்கள் பூரண சிரத்தையுடன் நமக்குப் பணிவிடை புரிய வேண்டும் என எதிர்பார்த்தோமானால், சுருங்கிய கால அளவுக்குள் நம் விருந்தாசையை ஒடுக்கிக் கொள்ள வேண்டும். மேலும் ஒரு இடத்திற்கு விருந்தினராக நாம் செல்லுமுன், அவர்

கள் நம்மை விரும்புகிறார்களா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அல்லது அங்கே சென்ற பிறகாவது அவர்கள் எவ்வளவு தூரம் நம்மை இச்சிக்கிறார்கள் என்பதைச் சந்தேகமற தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நெருங்கிய உறவினர்—அத்யந்த நண்பர்தானே என்று நினைத்து யாரையும் கவனிக்க வேண்டிய அவசியமில்லை என்று எண்ணி விடக் கூடாது. எவ்வளவு பிடிப்பு, பாசம், பொருத்தம் ஏற்கெனவே இருந்தாலும், அப்போதைய சந்தர்ப்பங்களின் விளைவால், அவை பாதிக்கப்படக் கூடும். அநியாயமாக—நமது ஞான சூன்யத்தின் விளைவாக நல்ல தொடர்பை இற்றுப் போகும்படிச் செய்யலாமா?

விருந்தாளிகளைத் திருப்தி படுத்துவதில் வீட்டார் எடுத்துக் கொள்ளும் சிரத்தையைவிட, விருந்தளிப்பவர்களிடம், விருந்தாளிகள் அநுசரிக்கும் விதிமுறைகளின் தன்மைக்கேற்ப அக்கலை சிறப்பான ஒளி தரும். விருந்துபசரிப்பில் அதிக சிரமம்—வழக்கத்திற்கு மேலான சிரமம் அவர்களுக்கு ஏற்படா வண்ணம் அன்பான முறையில் தெரிவித்துவிட வேண்டும். யாராயிருந்தாலும், "கடன்காரன்; சோற்றுக்கு வந்து விட்டான்!" என்று நினைக்கும்படி நடந்து கொள்ளக் கூடாது. எப்போதுமே, விருந்தாளிகள் என்று வீட்டுக்கு வந்து விட்டால், தானாக சில பக்ஷணங்களைத் தயாரித்து மகிழ்விக்கும் குணம் பெண்களுக்கு உண்டு. "எனக்காகவா இதை எல்லாம் செய்தீர்கள்? எதற்கு இத்தனை சிரமம்?" என்று கேட்டுப் பாருங்கள். பத்மினி ஜாதிப் பெண் கூறும் பதில், "என்ன சிரமம்? நீங்கள் வந்த சாக்கிலாவது வீட்டில் ஆளுக்கு நாலு பலகாரம் சாப்பிடுகிறோமே! அவ்வளவையும் நீங்கள் ஒருவரா சாப்பிட்டு விடப் போகிறீர்கள்?" என்று இருக்கும். இந்தப் பேச்சு ரீதி பரஸ்பரம் நன்றி யறிதலையும், அன்பு வளர்ச்சியையும் கொடுக்கும். ஆனால் விருந்தினர் முறையில் வந்துவிட்டு, கேலிச் சுவை என்று கருதி, விஷ பாணங்களைச் சொரிவர் சிலர். "இந்த வீட்டிலே அடுப்பே எரியாது போலிருக்கு. யாராவது என்னைப் போல் வந்தன்றைக்குத்தான் குழந்தைகளுக்கு ரெண்டு போண்டா கிடைக்கும். இல்லாட்டி அதுவுமில்லை!" இப்படிக் குத்தலும், ஹாஸ்யம் என்ற பெயரில் வெளிவரும் போது, வெளிப் பார்வைக்குச் சிரித்துக் கொண்டே, "எங்கள் வீட்டிலே கஞ்சிக்கே லாட்ரிதான்; கரைச்சு ஊற்றினா குடிக்கவா போகிறீங்க!" என்று வீட்டு எஜமானி பதில் கூறினாலும், விருந்தினரின் மீது தோன்றும் எரிச்சல், அடுப்பில் எரியும் புளியம் விறகைவிட படு மோசமாக இருக்கும்.

விருந்தளித்தல் புராதனமாக உபாஸிக்கும் உயரிய கலை என்று கூற வரும் போது, விருந்துண்பவர் பண்பும் கலையாக மெருகிட வேண்டியதே! அன்பும், அஹிம்சையும் இரு சார்பிலும் ஊறித் தேறியிருப்பது அவசியம். அப்போதுதான் அதில் கலையின்பம் பூரணமாகப் பரிமளிக்கும்.

சாப்பாட்டு ராமனாக இருப்பதைவிட சங்கோஜியாக இருப்பது ரொம்பவும் நல்லது என்று விருந்தினர் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது சொல்லத் தோன்றுகிறது. ஏனென்றால், வயிற்றுக்கு

வஞ்சனை செய்யலாமா? வேண்டியதைக் கேட்டுச் சாப்பிடுவது தவறல்ல'' என்று நவீன வேதாந்தம் பேசிக்கொண்டு பல நாகரீக மனிதர்கள் பகாசுர வேட்டையாடுகிறார்கள். அர்த்த ராத்திரியில் ''பாலைக் கொண்டா!'' என்பதும், பட்டப் பகலில் ''சோடா வேண்டும்!'' என்பதும், கொஞ்சங்கூட சுய மரியாதையற்ற—சுரணையற்ற கேள்விகள். சகஜமானவர்கள் என்று என்னதான் ''சோஷியல்'' விளம்பரம் செய்து கொண்டாலும், தன் அற்ப திருப்திக்காக, மற்றவர்களை இருட்டிலும், வெய்யலிலும் அலைய வைப்பது அவர்களின் சமத்துவக் கண்களுக்கே புரையோடிய செய்கை. அப்படித்தான் விருந்துச் சாப்பாட்டைப் பற்றி ஆயிரம் குறை கூறும் பிரகஸ்பதிகளும்! சூடு, சொரணையில்லாமல் வாய் பொத்தி, மெய்யடக்கி, சொந்த வீட்டில் போட்டதைச் சாப்பிடும் சூரப்புலிகள் தான், வந்த இடத்தில், ''உப்பில்லை; பருப்பில்லை; புளி ஜாஸ்தி'' என்று தொந்தரவு கொடுப்பார்கள். தினம் சமையலாகாத வீடு இல்லை. தினசரி தெரியாத பக்குவத்தில் அவருக்கென்று சமைப்பதும் இல்லை. அப்படி, இருக்கும்போது குறை எப்படி விழும்? அப்படியே சாதக, பாதகம் இருந்தாலும் பிறருக்குப் போடுமுன் அவர்கள் அதைக் கவனித்திருக்க மாட்டார்களா? அப்படியே இருந்தாலும் இலேசாக மனம் புண்படும்படியில்லாமல் கூற முடியாதா?

நாகரீகத்தின் பெயரைச் சொல்லி விருந்தினர் அமைப்புகளைச் சீர்குலைப்பதில் பலர் அறியாமை மிகுந்து காணப்படுகின்றனர். உபசாரம், வற்புறுத்தல், என்பவைகள் அவசியமற்ற கர்நாடக வழக்கம் என்று ஒதுக்கப்படுகின்றன. ஒரு சுய மரியாதைத் தோழரை, மற்றொரு தேசீய நண்பர் சந்தித்தார். பேச வேண்டிய விஷயங்கள் எல்லாம் பேசினார்கள். பகல் சாப்பாடு வேளையாகி விட்டது. வந்தவர் விடை பெற்றுக்கொள்ள முயன்றார். அப்போது மற்றவர் சொன்னார்: ''சாப்பாட்டு வேளையாகி விட்டது; வீட்டுக்குப் போய் உணவருந்திய பின் செல்லலாம்'' என்று. இதை உண்மையானதென்று ஊகிப்பதா? உபசார வார்த்தை என்று விட்டு விடுவதா? வந்தவர் சொன்னார்: ''பரவாயில்லை; வழியில் ஹோட்டல் இருக்கிறது. சாப்பிட்டு விட்டுப் போகிறேன்'' என்று. திரும்பவும் முதல் தோழர் பேசுகிறார்: ''நான் பிறர் மனை பாவம் அறியாது வற்புறுத்துவதில்லை. சிலருக்கு பிறர் வீட்டில் சாப்பிடப் பிடிக்கும்; சிலருக்குப் பிடிக்காது. என் வீட்டில் சாப்பிடுவதுபற்றி ஆக்ஷேபமில்லை. பிறகு உங்கள் உசிதப்படிச் செய்யலாம்.'' ஆனாலும் இரண்டாமவருக்கு அவர் கருத்து இன்னும் தெளிவாகவில்லை. அவர் வீட்டின் சௌகர்யங்கள் எப்படியோ? திடீரென்று ஒருவரை வீட்டுக்கழைத்துப் போனால் இடையூறாக இருக்குமோ என்னவோ? ஆகவே அதை அறிந்து கொள்ள மறுபடியும் முயன்றார்.

''நானும் அப்படித்தான். பிறர் வீட்டில் சாப்பிடக் கூடாது என்ற விரதம் ஒன்றுமில்லை. ஆனாலும் எதற்கு வீண் சிரமம்? போகிற போக்கில் பார்த்துக் கொள்ளுகிறேன்.'' பிறகும் அவர் பதில் புரிந்து கொள்ள முடியாதபடிதான் இருந்தது. ''இஷ்டம்

இருந்தால் வாருங்கள். சாப்பிட்டு விட்டே செல்லலாம்!'' கடைசி வரை சீர்திருத்தச் சமுதாயத்தை உருவகப்படுத்தும் அவ்விரு தோழர்களும் இப்படியே பேசிக் கொண்டார்கள். பிறருக்குப் பிடிக்காத காரியத்தை வற்புறுத் தக்கூடாது என்பது சிறந்த கொள்கையே. ஆனால் பிறருக்கு நம்பிக்கையூட்டும் வகையில் தன் அபிலாஷைகளை வற்புறுத்துவது மூடப் பிடிவாதமாகாது. உண்மையில் உணவளிக்கும் எண்ணத்துடன்தான் கூறுகிறார் என்பதை உணர்த்துவது அவசியமில்லையா? என்னதான் வெறும் வேஷத்திற்காகச் சொல்லவில்லை. என்றாலும், பசியைத் தணித்துக் கொள்ள பிறருக்குத் தொந்தரவளிக்க முடியுமா? யாராயிருந்தாலும், என்ன முற்போக்காயிருந்தாலும், அன்பை வெளிப்படுத்துவதில் – கருத்தைக் கூறுவதில் தயக்கம் கூடாது. ஒளிமறைவு கூடாது. ஓரளவு சந்தேகமற நிரூபிக்கவும் வேண்டும்.

காந்திஜியும், டாக்டர் அன்னி பெஸண்ட் அம்மையாரும் மிருதுவான சம்பாஷணைக்குச் சிறந்தவர்கள் என்று அனேக அறிஞர்களிடம் பெயர் பெற்றிருக்கிறார்கள். அடிக்கடி சந்திக்க முடியாத விருந்தினர், சந்தர்ப்பம் வாய்க்கும்போது கடந்து போன பல விஷயங்களைப் பரிமாறிக் கொள்ள நேரிடும். மறுபடி எப்போதோ சந்திக்கப் போகும் காலம் வரையிலும் கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள வேண்டும். விருந்தினராக வந்தவரிடம் பேசுவதற்குக் கூட அவகாசமின்றி இரவு பதினொரு மணி வரையில் தன் வேலையே பெரிதென்று இருப்பவர்களும் உண்டு. வந்தவர் சாப்பாட்டுக்காக வரவில்லை என்பதைக் கொஞ்சங்கூட அவர்கள் உணருவதே இல்லை. இன்னும் சிலரோ இதற்கு நேர் மாறானவர்கள். தான் எங்கு சென்றாலும், விருந்தினரை தன் கூடவே இழுத்துக் கொண்டு செல்வர். ஓயாமல் எதைப் பற்றியாவது வம்பளந்து கொண்டே இருப்பர். சாப்பாட்டு வேளையில் போஜனம் அருந்துவது கூட இவர்களுக்கு இரண்டாம் பக்ஷம்தான். ''இன்றோ, நாளையோ ஊருக்குப் போய்விடுவார். அப்புறம் இப்படிப் பேசவா போகிறேன்'' என்று தன் நடத்தைக்கு நல்லெண்ணமும் கற்பித்துக் கொள்வர். விருந்தினர் என்று வந்தால் தன் ஒருவனிடம்தான் பேசக்கூடிய விஷயம் இருக்கும் என்று நினைப்பது தவறு. வயது முதிர்ந்த பெரியம்மாக்கள், பாட்டிகள் ஆகியோருக்கு எதையாவது பேசிப் பொழுது போக்க யாராவது வேண்டி இருக்கலாம். ஆனால் ஒவ்வொருவரும் அந்தச் 'சள சள' சுபாவத்திற்கு இரையாகிவிடக் கூடாது. வந்த விருந்தினரும் இதைக் கவனிக்க வேண்டும்.

நாம் சொல்வதைப் பிறர் சிரத்தையுடன் கேட்கிறார்கள் – புரிந்து கொள்கிறார்கள் என்று நமக்கு நம்பிக்கை ஏற்பட்டால்தான் மேலே மேலே சொல்லிக் கொண்டு போகலாம். அப்படி கவனமுடன் கேட்பவர்கள் மீது தான் நமது அன்பும் சுரந்து வரும். அப்படி இல்லாத மூட ஜன்மங்கள் நமக்கு எவ்வளவு தான் வேண்டியவர்களாயிருப்பினும், அவர்கள் மேல் அலட்சியம்தான் தோன்றும். ஆகவே தான் மேனாட்டு அறிஞர் ஒருவர், ''மற்றவர் கூறுவதை அதிகம் கேட்பது நல்ல குணமல்லவா?''

என்று கேட்கிறார். ஆனால் அதற்காக பொருளின்றி, ரஸமின்றி வழவழவென்று வம்பளக்கும் வாயாடிகளை விருத்தி செய்து விடக்கூடாது. உபயோகமற்ற —விஷய ஞானமற்ற பேச்சுகள் போன்ற, தீய சுபாவம் வளருவதற்கு இடம் தருவது இருவரையுமே முட்டாளாக்கி விடும்.

விருந்தினராகச் செல்லும் போது ஆணாயினும், பெண்ணாயினும், இளவயதுடையவர்களாயினும், முதிர்ந்தவர்களாயினும், தனிமையில் பேச ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பமிருக்க வேண்டும். யாராவது இருவர் தனிமையில் உரையாடிக் கொண்டிருக்கும் போது, "என்ன இரகசியம் இருக்கப் போகிறது?" என்று நினைத்து இடையில் கலந்து கொள்வது முதல்தர அறிவீனம். பத்து நாள் ஒரே வீட்டில் சேர்ந்தாற் போல் எல்லோரிடமும் பழகினாலும், பிரிந்து ஊருக்குச் செல்லும் போது வெறிச் சென்ற நிலையே தோன்றக் காணலாம். இது ஓடியாடி உழலும் உடலைப் பற்றிய விஷயம் என்று மட்டும் எண்ணுவது முழுப் பிசகு. பிரிந்து செல்லும் தனி மனிதரின் உள்ளத்திலும் வெறிச் சென்ற சூன்ய நிலை ஏற்படக் காரணம் என்ன? பத்து நாளாக, பத்துப் பேரிடம், பக்குவமாகப் பழகிச் செல்கிறோம் என்ற சந்தோஷம் தான் நியாயமாக உதிக்க வேண்டும். அதற்கு வெளிப்படையாக எவ்வளவு அன்பும், நேசமும் கலந்து உரையாடி யிருந்தாலும், தனித்துப் பேசாத நேசம் பூரணத்துவம் பெறுவதில்லை. பக்கத்தில் மற்றொருவர் இருக்கப் பேசுவதில், எல்லா சந்தர்ப்பங்களிலும் அமைதி படுவதில்லை. அதனால் தான் பெரிய அறிவாளிகளும், தலைவர்களும், நிபுணர்களும், ஞானிகளும் கூட தமது காரிய தரிசிகளைக் கூட அப்புறப்படுத்தி விட்டு, தனிமையில் சில நிமிஷமேனும் பேசுகின்றனர். ஒருவரையொருவர் சந்திக்கும் போது உடனிருக்கும் மற்றவர் இயற்கையாக ஒதுங்கிக் கொள்ளுவது உயர்ந்த குணம். ஆம்; அதற்குச் காரணமில்லாமலில்லை. அந்தச் சில நிமிஷங்கள்தான் ஆந்திரீகமாக அன்பை வெளிப்படுத்தும் சக்தி உடையது. அப்போது தான் பொங்கிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் அன்புணர்ச்சி சாந்தி பெறும்.

விருந்தினர், விருந்தளிப்பவர்களின் கடமைகள், பொறுப்புகள், சிரத்தைகள் எப்படிப் பரிணமிக்க வேண்டும் என்பதை ஓரளவு பார்த்தோம். தனி விருந்தினர்; தானாக வரும் விருந்தினர்; அழைத்து வரும் விருந்தினர் ஆகியவை நமது சிந்தனையில் உழன்றன. இதிலே அறிமுகமானவர்களும் உண்டு; அடிக்கடி வருபவரும் உண்டு. ஆனால் எப்போதோ ஒரு தடவை சில விசேஷ காலங்களில் நடக்கும் பந்தி விருந்துகளைப் பற்றி, எழுதுவதும் மகா சிரமம். ஏனெனில் பந்திக்கு முந்திக் கொள்; படைக்குப் பிந்திக் கொள்!" என்ற நீதி ஒன்றுதான் விருந்தாளிகளின் புத்தியில் ஓயாது ரீங்காரமிட்ட வண்ணமிருக்கும். கோஷ்டி விருந்தாளிகளானபடியால் ஒரு சிலரைத் தவிர, மற்றவர் அனைவரும் ஒரே பொது ரீதியில்தான் நடத்தப்படுவார்கள்; ஆகவே குப்பைமேட்டில்கண்டதெல்லாம் கிடக்கும் என்பது போல் ஒழுங்கு முறைகள் சீர்கெட்டு மிகமிக மலிந்து காணப்படும்.

ஆனாலும், பந்தியில் முந்தி உட்கார்ந்தவர்கள், சாப்பிட்ட பின் முந்தி எழக் கூடாதென்றும் விதிமுறை கட்டாயமாக அநுசரிக்கப்படுகிறது. மத்தியில் சிலர் எழுந்தால் மற்றவர் சாப்பிடுவதை அவமதித்ததாகி விடுமாம்! மற்றவர் இலையில் எச்சில் விழுமாம்! அதற்காக சாப்பிட்ட கையை உலரப் போட்டு உட்கார்ந்திருக்க வற்புறுத்துவது உண்மையில் நல்லதல்ல. மேலும் நமக்காக பலர் காத்திருக்கிறார்கள், என்ற சங்கடத்தைப் பார்த்துக் கொண்டு யார்தான் மணிக்கணக்கில் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்? சாப்பிடுவது சிலருக்குச் சீக்கிரமாக முடியும். சிலர் ஆர, அமரத்தான் உண்பார்கள். ஆனால் பொதுச் சாப்பாட்டில், இந்த உரிமையைக்கூட இழந்துவிட வேண்டுமா? துரிதமாக உண்பவன் மெள்ளவும், மெதுவாகப் புசிப்பவன் வேகமாகவும் தின்று சமப்படுத்திக் கொள்ள வேண்டுமா? அது சாத்தியமா?

பந்தி விருந்திலே சேதாரம் அடையும் பொருள் அதிகமே! பஞ்சகாலமல்லாத காலமாகத்தானிருக்கட்டும், பிடிக்காத பதார்த்தங்களையோ, தேவைக்கதிகமான பண்டங்களையோ, வழங்குவதில்தான் நமது பந்துக்கள் பெருமை கொள்கிறார்கள். நன்றாக உபசரித்து விட்டதாக உள்ளம் பூரிக்கிறார்கள். காய், கறிகளில் ஒன்று முழுவதையும் சாப்பிட்டு விட்டால் அவருக்குப் பிடித்த வஸ்து அது என்று, உடனே ஏராளமாய் வந்து விழும். சாப்பாடு போடுபவரும்சரி, சாப்பிடுபவரும் சரி, ஒன்றை நன்றாகக் கவனிக்க வேண்டும். "எது நமக்கு ரொம்பப் பிரியமான பதார்த்தமோ, அதை ரொம்பக் குறைவாக உண்ணும் விரதம் வைத்துக் கொள்ள வேண்டும்." ஆம்; அந்த சங்கல்பம் நிறைவேறும் வகையைக் கொண்டுதான் நமது உடல் நலம் தேறுவதும், மாறுவதும் இருக்கும். பிடித்தமானதை நிறையச் சாப்பிடுவதில் ஏற்படும் சபலத்திற்கு இடம் கொடுத்து விட்டால், ஒன்று அதன் முடிவு உடல் சீர் கேடாயிருக்கும் அல்லது அது வெகு சீக்கிரத்தில் சலித்து வெறுப்புத் தட்டிவிடும். இதில் எதையும் விருப்பமுள்ளவைகளின் மீது ஏற்பட யாரும் விரும்ப மாட்டார்கள். வீட்டிலும் சரி; விருந்திலும் சரி; இதை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பொருளின் மீது ஆசை ஏற்படுவது சகஜம்தான். காப்பிக் கடையில் ஒரு அணா கொடுத்து ஒரு மசால் வடையை வாங்கிச் சாப்பிட்டு விடுவதால் தேகாரோக்கியம் கெடுவதில்லை. அதன் மீதுள்ள பற்றும் மாறுவதில்லை. ஆனால் வெளியே பணத்தைத் தொலைப்பானேன்? என்று கருதிக் கொண்டு, நாலைந்து பேர் உள்ள வீட்டில், சுமார் நூறு பஜ்ஜிகளைத் தயார் செய்து "ஆசையாற" சாப்பிட்டு விட்டால் சரிப்படுமா? உடல் உருப்படுமா? உண்மையில் மனிதனுக்கு ருசியும், ஆசையும் அநுபவிப்பதற்காக ஏற்பட்டதே தவிர, அருவருத்துக் கொள்ளவல்ல. முரட்டுத்தனமாக, முயன்று, இனிக்கிற கரும்பை வேருடன் புசிப்பவன் வாயைத்தான் கெடுத்துக் கொள்வான்.

தேசமெங்கும் ஒரே பாஷை, ஒரே வித உடை, ஒரே விதமான உணவு, சுதந்திர இந்தியாவுக்காக, தேசீய உருவில் நிர்மாணிக்கப்படு

வது, அவசியம்'' என்று காலஞ் சென்ற தமிழ் நாட்டு அரசியல் தலைவர் ஒருவர் வற்புறுத்திக் கொண்டிருந்தார். உணவு வேறு பாடுகளினால், நமக்கு வேண்டிய பதார்த்தங்கள் நாட்டின் சில பகுதிகளில் கிடைப்பதே இல்லை.

இக்கஷ்டத்தை உணர்ந்திருந்த அவர் அம்மாதிரி கூறியதில் வியப்பில்லை. நமக்கு வரும் விருந்தினர் மட்டுமென்ன? எல்லோருக்கும் ஒரே விதமாகச் செய்து விட்டால் திருப்தியடைகிறார்களா? விருந்தினராக வந்துவிட்டு, விதவிதமான ஆகாரங்களை எதிர்பார்ப்பவரும் அது ஏமாற்றமளித்தால் கடிந்து கொள்பவரும் எவ்வளவு பேர்? தமிழ் நாட்டிலே விருந்தினர் உபசரிப்புக்களைக் கவனிக்கும் போது, சைவ போஜனம் அளிக்கும் முறையே பாராட்டத்தோன்றுகிறது. நல்ல குணமும், நல்ல அநுசரிப்பும், வரிசைக் கிரமமாக அமைந்துள்ள சாப்பாட்டுப் பகுதிகளும், விருந்துக்குரிய உபகரணங்களும் ஏறக்குறைய ஒரே மாதிரி எல்லோர் இல்லத்திலும் பின்பற்றப்படுகின்றன. ஆனால், மாமிச உணவு உண்ணும் விருந்துகள் அப்படி சோபிப்பதில்லை. ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு முறை காணப்படுகின்றது. ஒழுங்கு என்பதே காண முடியாத பொருளாகி விடுகிறது. அவற்றிலே நல்ல பேச்சுகள், நல்ல நடவடிக்கைகள் தோன்றுவதும் அபூர்வமே! எல்லோரும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளக் கூடிய விருந்து முறைகளை, வகுத்துக் கொள்வது நலம். விருந்தினராகச் சென்றால், முதல் தினம் இன்னின்ன கிடைக்கும். மற்ற தினங்களில் இன்னவை, வரிசைக் கிரமமாக வரும். அவற்றைத் தவிர கண்டபடி சமைப்பதெல்லாம் விருந்தல்ல. அது ராக, தாள, கட்டுக்கடங்காத பித்தனின் ராகம்! இப்படி ஒருமனப்பட்டு அங்கீகரித்த பாதை விருந், தோம்பலுக்கு அவசியம். பழைய சட்டங்களைப் புதிய திருத்தங்கள் செய்து நமக்கெல்லாம் பயன் படும் தன்மையில், விருந்தினர் கலையை வளர்ப்போமாக!

மூல ஆசிரியர்: "தூமகேது"
மொழி பெயர்ப்பு: எச். விஜயகுமார்

புனிதமான கங்கை நதி இமாலயத்தை விட்டுசமவெளியில் பிரவேசிக்கும் இடத்தில் வானமளாவும் மலைகள் வரிசையாக நின்று இந்தியாவைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன. அம்மலைகளின் அடிவாரத்திலுள்ள அகண்ட வெளிகள் கை கோர்த்துக் கொண்டு நடம்புரிவதைப் போல விளங்கிக் கொண்டிருக்கின்றன.

உலகம் குழந்தைப் பருவத்திலிருந்தபோது அத்திறந்த வெளிகளில் மானினங்கள் கணக்கின்றி நிர்ப்பயமாக வாழ்ந்து வந்தன. கன்னங்கரிய மேகங்களின் நிழலுக்கடியில் முனிவர்களின் பசுக்கள் அங்குள்ள சமவெளிகளில் எப்பொழுதும் மேய்ந்து கொண்டே இருக்கும். அவைகளின் கன்றுகள் தங்கள் சின்னஞ்சிறிய தலைகளை இங்குமங்கும் அசைத்துக் கொண்டே அச்சமின்றித் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கும். தர்ப்பைகளை அறுத்துக் கொண்டு வரும் முனிகுமாரர்கள் மலைகளின்மேல் அலைகளைப் போல் படுத்துக் கொண்டிருக்கும் மேகங்களைக் கண்டு வியந்து கொண்டே செல்வார்கள். எங்கு பார்த்தாலும், எங்கு திரும்பினாலும் புத்துயிரும் புத்துணர்ச்சியுமே காணப்பட்டன. அமிர்தமயமான திருப்திகரமான வாழ்க்கையே எங்கும் நிறைந்திருந்தது.

எண்ணற்ற வருஷங்களுக்கு முன் கங்கைக் கரையில் இரு குடும்பங்கள் சுகமாக வசித்துக் கொண்டிருந்தன. குடிசைகளிலே வேதங்கள் எப்பொழுதும் இனிமையாய் ஒலித்துக்கொண்டிருக்கும். இரண்டு குடும்பங்களில் ஒரு குடும்பத்திற்கு கௌதமர் என்ற முனிவர் குருவாகவும், பெரியவராகவும் இருந்து வந்தார். அவரது மனைவியின் பெயர் சுநந்தா. இவர்களிருவருக்கும் ஒரே ஒரு பெண் குழந்தை, சுகேசி. கௌதமரிடத்தில் நூறு பசுக்கள் இருந்தன. சின்னஞ்சிறிய — ஒரே நாளில் உழுது முடித்துவிடக்கூடிய-ஒரு வயலும், பசுக்கள் மேய்வதற்கான சின்னஞ்சிறிய புற்றறையும் அவருக்

குச் சொந்தமாக இருந்தன. அவரது வயலில் சின்னஞ்சிறிய நீரோடைகளும் ஓடிக்கொண்டிருந்தன.

இன்னொரு குடும்பம் ஸதவர்ணர் என்ற முனிவருடைய தலைமையில் வசித்துக்கொண்டு வந்தது. ஸதவர்ணருக்கு ஆரண்யகன் என்ற சொந்தக் குழந்தையும், சுமேரு என்ற வளர்ப்புக் குழந்தையும், விசாகா என்ற மனைவியும் இருந்தனர். ஸ்தவர்ணரிடத்தில் தொண்ணூற்று ஒன்பது பசுக்களும், நாலு மனிதர்களுக்குப் பன்னிரண்டு மாதம் வரக்கூடிய உணவளிக்கும் வயலும், பசுக்களை மேய்ப்பதற்குத் தனியான புல்வெளியும் இருந்தன. காட்டிலிருந்து கனிகளும் மலர்களும் கொண்டு வருவதற்கு வேண்டிய சக்தியும் இருந்தது.

எல்லாரும் உலாவுவதற்குத் திறந்த வெளிகளும், மலைகளும் அங்கே கணக்கின்றி இருந்தன. ஆடிப் பாடுவதற்குப் பரந்த பூமியும் அகன்ற வானமும் இருந்தன. காற்றும் நீரும் ஒளியும் அங்கு வசித்த மனிதர்களின் உடலை நோயின்றிப் பாதுகாத்து வந்தன. உள்ளம் எங்கு அரசனாக விளங்கி வருகின்றதோ அங்கே இயற்கையழகு வாழ்க்கையின் இரகசியத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

மலைகளின்மேல் ஓய்வுக்காகத் தங்கியிருக்கும் மேகங்களைப் பார்த்து மகிழ்ந்தவாறே ஆரண்யகன், சுகேஷி, சுமேரு ஆகிய மூவரும் அடிக்கடி திறந்த வெளிகளில் திரிந்து கொண்டு கிடப்பார்கள். கங்கையின் தடையில்லாப் பிரவாகத்தைப் பார்த்தவாறே அவர்கள் ஸ்தம்பித்து கங்கையை பார்த்துக்கொண்டே நின்று விடுவதும் உண்டு. அவர்களுடைய பசுக்கள் எங்கு பார்த்தாலும் சுதந்திரமாக மேய்ந்து கொண்டிருக்கும். அடர்ந்த காட்டிலே நீண்ட மரக் கிளைகளின்மேல் உட்கார்ந்து எப்பொழுது பார்த்தாலும் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டு கவலையற்றுத் திரிவார்கள் இம்மூவரும். மகிழ்ச்சி மயமான அவர்கள் வாழ்க்கையில் உலோபமோ கோபமோ, பகைமையோ பொறாமையோ இன்னும் புகுந்திருக்கவில்லை.

தாமரை இலைகளால் மூடப்பட்ட சுகேஷியின் கோமள சரீரம் ஆரண்யகன், சுமேரு இவர்களுடைய உள்ளங்களில் காலை வானத்தின் விதவித வர்ணங்கள் போன்ற விதம் விதமான பாவங்களைத் தூண்டுவதுமட்டும் உண்டு. அழகு! பின் அது எந்த அழகாக இருந்தால்தான் என்ன? மேகங்களால் மூடப்பட்ட இமயமலையின் பொற்சிகரங்களின் அழகாக வேண்டுமானாலும் இருக்கலாம்; இலைகளால் மூடப்பெற்ற சண்பகமலரின் அழகாகவும் இருக்கலாம்; ரோஜா மொக்குகளின்மேல் தங்கியிருக்கும் பனித்துளிகளின் அழகாகவுமிருக்கலாம்; அல்லது அன்றலர்ந்த தாமரை போன்ற வாலிபத்தின் அழகாகவும் இருக்கலாம். எதுவாயிருந்தாலும் அழகு என்பது கற்பனை வகையைச் சேர்ந்தது. அது தீண்ட முடியாததாகையால் புனிதமானது, களங்கமற்றது என்ற நினைவுடன் சுமேரு, ஆரண்யகன், சுகேஷி ஆகிய மூவரும், மனதில் எவ்வித வேற்றுமையுமின்றி அலைந்து திரிந்து வந்தார்கள்.

அக்கம் பக்கத்திலிருந்த கிராமங்களிலும் இதே மாதிரியான வாழ்க்கைதான். "பணம்" என்ற பேச்சு அங்கு எங்கும் தலைகாட்டவே

யில்லை. புல்லை அதிகமாக வைத்திருப்பவர்கள் அதைக்கொடுத்து மற்றவர்களிடம் நெல்லைப் பெற்றுக்கொள்ளலாம்! பால் வேண்டுபவர்கள் நீரைக் கொடுத்துப் பாலைப் பெற்றுக் கொள்ளலாம். தர்ப்பையைக் கொடுத்து வெண்ணையைப் பெற்றுக் கொள்வது அங்குள்ள சகஜமான வழக்கம்.

மண்பாண்டம் நிறைய வைத்திருப்பவர்கள் அதை மற்றவர்கள் வீட்டில் கொடுத்துத் தின்பண்டங்களைப் பெற்றுக்கொள்வதுமுண்டு. குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்குமிடத்தில் களைத்து விட்டால் அந்தந்த இடங்களில் உண்டு அங்கேயே உறங்கி விடுவார்கள். அலைந்து திரிந்து கொண்டிருக்கும் போது சந்திரன் உதயமாகி விட்டால் வாலிபர்கள் அவ்விடத்திலேயே உட்கார்ந்து ஆனந்தமாக நிலவை ரசிக்க ஆரம்பித்து விடுவார்கள். அங்கு யாருடைய கண்ணிலாவது கண்ணீர் வந்தால் அது ஆனந்தக் கண்ணீராகத்தான் இருக்கும். அன்றலர்ந்த மலர்களின் மேல் வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கும். அங்கு குடிசைகளுக்குக் கதவுகளே கிடையாது. எந்தக் குடிசைக்கும் எல்லையே கிடையாது. நீதி என்பது தான் அங்குள்ள குடிசைகளுக்கு எல்லை. இவ்விதம் அப்பிரதேசம் முழுவதும் சாந்த மயமாக இருந்தது. அப்பிரதேசத்தில் கலியாணம் என்றால் யாருக்கும் தெரியாது. ஆனல் காதலை எல்லாரும் அறிவார்கள். அக்காதலால் கட்டுண்ட காதலர்கள் சாவு வந்தால் கூடப் பிரியமாட்டார்கள். இரு காதலர்களும் கூடவே இறப்பது அங்குள்ள வழக்கம். விதவா விவாகம் என்ற பிரச்னை அங்கு எழவேயில்லை. ஏனெனில் அங்கு விதவைகளே கிடையாது. அங்கு பிரம்மசாரியும்கூட இல்லை. ஏனெனில் காதல் ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவான—உரிமையான—பொருளாக இருந்து வந்தது. அங்கு மனிதரைக் கொல்லும் மருத்துவர்கள் கிடையாது. ஏனெனில் இயற்கையே அங்கு மக்களை உயிர்ப்பித்து வந்தது. வீண் பெருமை, உள் வஞ்சம், முதலிய எதுவும் அங்கு இருக்கவில்லை. பொருள்கள் இருந்தன; பொருள்களுக்கு விலை இருக்கவில்லை. வியாபாரம், விவகாரம் கிடையாது; கோவிலும் இல்லை. கதைகளும் இல்லை; அரசனும் இல்லை, அரசும் இல்லை; சட்டமும் இல்லை, தண்டனையுமில்லை. ஆனல் அன்பு மட்டும் இருந்தது. அன்பாலேயே பொருள் கொள்ளப் பட்டும் கொடுக்கப்பட்டும் வந்தது. அனைவரும் தத்தமக்கு அரசர்களாக விளங்கி வந்தார்கள். நீதிதான் அங்கு சட்டம். சத்தியமே அங்கு மரியாதை. நற்குணந்தான் அங்குள்ளவர்களுக்கு அறம். வீரமே அவர்களுக்கு மந்திரம். இவ்வித விசித்திரமான—அற்புதமான பிரதேசம்; பூமியில் சுவர்க்கத்தைப்போல விளங்கி வந்தது.

மேகங்கள் எப்பொழுதும் மலைகளை வளைத்துக் கொண்டே இருக்கும். எங்கு பார்த்தாலும் விதம் விதமான வர்ணங்கள் விதவிதமாகக் கலந்து புதுப்புது வர்ணங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

ஒருமுறை கங்கைக்கரையிலுள்ள ஒரு குன்றினருகில் ஆரண்யகனும் சுகேஷியும் உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

எல்லாத் திறந்த வெளிகளிலும் பூக்கள் மலர்ந்திருந்தன. மலைகள் மழை நீரால் கழுவப்பட்டுக்

குழந்தையின் உள்ளம் போலக் குற்றமற்று விளங்கிக் கொண்டிருந்தன. மரங்களின்மேல் நீல நிறம் படர்ந்திருந்தது. பறவைகள் இங்குமங்கும் பறந்து திரிந்து கொண்டிருந்தன. மேகங்கள் அவசர அவசரமாக எங்கோ சென்று கொண்டிருந்தன. இயற்கை செழிப்பாக இருந்தது. ஆனால் அது எந்த ருது என்று தெரியவில்லை. காதல் பெருகுவதற்கு எந்த ருது அவசியமோ அந்த ருது என்று வைத்துக்கொள்ளலாம்.

சுகேஷியின் தந்தம்போன்ற உடலின்மேல் அவளது கூந்தல் புரண்டு கொண்டிருந்தது. அவளது இடை, தாமரை இலைகளால் மூடப்பட்டிருந்தது. மலரால் செய்யப்பட்ட மகுடம் அவள் தலையில் மமதையுடன் விளங்கியது. அவள் காதில் சில மலர்களை ஆரண்யகன் தன்கையால் அணிவித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று மின்சாரத்தால் நடுக்கம் ஏற்படுவது போல் இருவருக்கும் ஒரே சமயத்தில், காரணம் சொல்லமுடியாத நடுக்கம் ஏற்பட்டது; மயிர் சிலிர்த்தது.

இருவரும் கண்களால் பேசிக் கொள்வதைப் போலக் கண் கொட்டாமல் சில விநாடிகள் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்.

ஆரண்யகன் மறுபடியும் அவள் தலையிலிருந்த மகுடத்தைச் சரிப்படுத்துவதில் முனைந்தான். இந்தச் சமயத்தில் மலைச் சிகரங்கள் மேகங்களை ஸ்பரிசித்துக் கொண்டிருந்தன. கொடிகள் மரங்களைத் தழுவிக் கொண்டிருந்தன. மயில்கள் தோகையை விரித்து ஆடிக் கொண்டிருந்தன.

அதற்குள் சுகேஷியின் பார்வை ஆரண்யகனின் கைமேல் விழுந்தது. ஆரண்யகன் எதையோ தன் கையில் மூடிக்கொண்டிருந்தான். மெதுவாகச் சிரித்து சுகேஷி தனது மிருதுவான கரங்களால் அவனது மூடியிருந்த கையைத் திறந்தாள்.

மேகங்களால் மறைக்கப்பட்ட சந்திரன், மேகங்கள் விலகியதும் பிரகாசிப்பதுபோல், ஆரண்யகன் கையைத் திறந்ததும் "இந்திர நீலமணி"யின் பச்சை நிறத்தால் அருகிலுள்ள பொருள்கள் யாவும் பச்சை நிறம் பெற்று விளங்கின.

"ஆரண்யகா! இது என்ன?" என்று கேட்டுக்கொண்டே அவ்விந்திர நீலமணியைத் தன் கையில் வாங்கினாள் சுகேஷி.

"சுகேஷி! இந்தக்கல் எனக்குக் கங்கை நதியின் ஆழ்ந்த பள்ளத்தாக்கு ஒன்றில் கிடைத்தது. இதன் நிறம் எவ்வளவு அற்புதமானது பார்த்தாயா?"

சுகேஷி இந்திர நீலமணியைப் பார்த்தவாறே இருந்தாள். அந்தக்கல் முன்னைவிட அழகாகத் தோன்றியது அவள் கையில்.

சுகேஷி அன்புடன் அம்மணியைத் தன் மார்பின்மேல் வைத்தாள். அற்புதமான பச்சையும் ஆனந்தமான நீலநிறமும் கலந்த அம்மணி அவளது மார்பகத்தை அழகாக அலங்கரித்தது.

ஆரண்யகன் இவ்வற்புதச் சௌந்தரியத்தைப் பார்த்தவாறே இருந்தான். சுகேஷி தாமரை இலைகளால் மறைக்கப்பட்டிருந்த தன் மார்பின் மேலிருந்த மலர் மாலைகளை விலக்கினாள். அதிகாலையில் தாமரையின் மலர்கின்ற மொட்டைப் போன்ற அவளது

யௌவனம் பின்னும் அதிகமாகப் பிரகாசிக்க ஆரம்பித்தது. வெள்ளை வெளேரென்று விளங்கும் இமயத்தின் சிகரத்தை நீலமேங்கள் மிகவும் அழகாகப் பொருந்தி இருக்கிறதே!'' என்று கூறினாள்.

''அம்மணி உன்னுடையது

அழகுபடுத்துவதுபோல் அவ்விந்திர நீலமணி சுகேஷியின் தந்தம் போன்ற தேகவசீகரத்தை அழகுபடுத்தியது.

இலேசாகச் சிரித்தவாறு சுகேஷி ஆரண்யகனைப் பார்த்து ''ஆரண்யகா! இம்மணி எனக்கு தான்!'' என்றான் ஆரண்யகன்.

இச்சமயத்தில் ஆரண்யகனை அழைத்துவர வேகமாக வந்து கொண்டிருந்த சுமேரு, திடீரென்று ஸ்தம்பித்து நின்று விட்டான். சுகேஷியின் வலது கையைத் தன் இதழ்களால் ஆரண்

யகன் அன்புடன் ஸ்பரிசித்துக் கொண்டிருந்ததைக் கண்டு விட்டான் சுமேரு.

அவன் திடுக்கிட்டான்.

அச்சமயம்தான் முதன்முதலில் அந்தப் பிரதேசத்தில் பொருமை என்ற குணம் உதித்தது.

அருகிலிருந்து ஒரு பெரிய பாறை தடாரென்று கீழே உருண்டது. அதன் சப்தத்தால் காடுகள் நடுங்கின, பறவைகள் பரதவித்தன, விலங்குகள் ஓடின, மலைகளில் எதிரொலி உண்டாயிற்று. அந்தச் சப்தத்தால் சுகேஷியும் ஆரண்யகனும் காதல் நித்திரையிலிருந்து விழித்துக் கொண்டார்கள். அவர்கள் பார்வைக்கு மலையிலிருந்து கீழே உருண்டு கொண்டிருந்த பெரிய பாருங்கல் ஒன்று தெரிந்தது. மலைமீது ஏறிக் கொண்டிருந்த சுமேரு அவர்கள் கண்களுக்குப் புலப்படவில்லை.

★

சுமேருவின் மனதில், அதிலிருந்து பொருமை ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான பள்ளத்தாக்குகளில் திரிந்து விதம் விதமான பொருள்களையும் மணிகளையும் அவன் திரட்ட ஆரம்பித்தான். தன் பசுக்களின் கழுத்தில் இப்போது அவன் விதம் விதமான மணிகளைக் கட்டியிருக்கிருன். ஆனல் அவனுக்கு எங்கும் அந்த இந்திர நீலமணிபோன்ற கல் கிடைக்கவேயில்லை.

ஒரு நாள் சுமேரு தன் குரு ஸதவர்ணரிடம் சென்று "குருதேவ்! நான் ஆரண்யங்களைச் சுற்றிப் பார்த்துவர விரும்புகிறேன்!" என்று கூறினன்.

மிகவும் இனிய குரலில் குருதேவர் சுமேருவைப் பார்த்துக் கேட்டார்.

"மகனே! எப்பொழுதிலிருந்து இத் தனிமையை விரும்ப ஆரம்பித்தாய்?"

"அற்புதமான இளங்காலை போன்ற சுகேஷி ஆரண்யகனுடன் திரிகிருள்!" என்று பதிலளித்தான் சுமேரு.

குருதேவர் இலேசாகச் சிரித்தார்.

"மகனே! எங்கு மனிதர்கள் காதலைப் பொருமையுடன் பார்க்கிருர்களோ, காதலர்களைப் பொருமை நிறைந்த கண்களுடன் பார்க்கிருர்களோ அந்த இடத்தில் நரகத்தின் நாற்றம் வீச ஆரம்பிக்கும். அங்கு யௌவனத்தில் இன்பத்திற்குப் பதிலாக இடைஞ்சல்கள் ஏற்படும். புனிதமான காதலிற்கு மாருக காமமே அப்பிரதேசத்தில் தோன்றும்! ஆகையால் மகனே! நீயும் உனக்கேற்ற துணைவியைத் தேடி வாழ்க்கை நடத்துவாயாக!" என்று புத்திமதி கூறினர் குருதேவர்.

"குருதேவா! நான் சுகேஷியையே விரும்புகிறேன்! ஆகவே அவளை எப்படியும் அடைந்தே தீருவேன். ஆரண்யகன் அவளுக்கு ஒரு இந்திர நீலமணியைக் கொடுத்தான். ஆனல் நான் நூறு மணிகள் கொடுத்தாவது அவளை அடைவேன்!" என்று கூறினன் சுமேரு.

"அப்படியானல் இப்பிரதேசத்தின் சுவர்க்கத்தன்மை இனி அழிந்து விடும்!" என்று பெருமூச்சு விட்டுக் கூறினர் குரு.

சுமேரு கடகடவென்று சிரித்தான். பிறகு சென்றுவிட்டான்.

காட்டின் ஒரு மூலையில் வசிக்க ஆரம்பித்தான்.

சுமேரு தனியாக வசிக்குமிடத்தில் இப்போது அநேக பெண்கள் விதவிதமான வர்ணமணிகளை வாங்கிச் செல்வதற்கு வருகிறார்கள். தாமரை போன்ற சிவந்த மணிகளும், விஷ்ணுவின் பீதாம்பரம்போன்ற இனிய மஞ்சள் நிறமான மணிகளும், வானம் போன்ற நீலமணிகளும் சுமேருவிடம் நிறைய இருக்கின்றன. கணக்கற்ற மக்கள், பசுக்கள், மோர், வெண்ணெய், பால் முதலியவற்றை ஏராளமாகக் கொடுத்து தமக்கு விருப்பமான மணிகளைப் பெற்றுக்கொண்டு செல்கிறார்கள். அங்குள்ள பெண்மணிகள் இப்போது காதில் மலர்களை அணிவதற்கு மாறாக மணிகளை அணிகின்றனர். எல்லாப் பெண்களுக்கும் மணிப் பைத்தியம் பிடித்திருக்கிறது. சுமேரு அங்கு புதிய சட்டம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறான். மக்கள் அனைவரும் தமக்குத் தெரிந்தோ தெரியாமலோ அவன் அதிகாரத்திற்குக்கீழ் வந்து கொண்டிருக்கிறார்கள். இது நாள் வரை மக்கள் தம் தம் தேவைகளுக்கு ஒப்ப கொடுக்கல் வாங்கல்களை நடத்தி வந்தார்கள். அப்பிரதேசத்திலிருந்த பொருள்கள் அனைத்தும் சமமான மதிப்புடையவைகளாக இருந்தன. ஆனால் சுமேருவோ மணிகளின் அழகு நிறம் இவைகளுக்கேற்பத் தனித் தனி மதிப்புகளைக் குறிப்பிட ஆரம்பித்தான். குறிப்பிட்ட மணிக்குக் குறிப்பிட்ட பொருள்தான் கொடுக்க வேண்டுமென்று சட்டம் விதித்தான் சுமேரு. நாளடைவில் அவனிடம் கணக்கற்ற பொருள்கள் குவிய ஆரம்பித்தன. ஒரு மணியை விரும்புகிறவர்களிடம் அம்மணிக்கென்று சுமேரு குறிப்பிட்ட பொருள் இல்லாவிட்டால் அம்மணி அவர்களுக்குக் கிடையாது. ஆகவே அநேகம்பேர் தாம் விரும்புகின்ற மணிகளுக்குக் குறிப்பிட்ட பொருள் கிடைக்காமல் தேடித் திரிந்தார்கள்.

ஒரு நாள் ஒரு வாலிபன் சுமேருவிடம் வந்து அரிசியைக் கொடுத்து வெண்ணெய்வேண்டுமென்று கேட்டான். அரிசிக்குப் பதிலாக வெண்ணெய் கொடுக்க மறுத்து விட்டான் சுமேரு.

“எனக்கு வெண்ணேயோ அரிசியோ எதுவும் தேவையில்லை!” என்று கர்ஜித்தான் சுமேரு.

“ஆனால் எனக்கு வெண்ணெய் தேவையாக இருக்கிறது! ஆகவே அதைத் தாங்கள் கொடுத்து விடுங்கள்!” என்றான் அந்த வாலிபன்.

“அவ்வெண்ணெய் என்னுடையது! அதை என்னால் எப்படிக் கொடுக்க முடியும்?” என்று கூறிச் சிரித்தான் சுமேரு.

இந்தப் பிரதேசத்தில் சுமேருவின் எண்ணங்களும், சொற்களும் அவ்வாலிபனுக்கு வியப்பை அளித்தன.

“வெண்ணெய்தான் தங்களுக்குத் தேவையில்லையே! பிறகு அதை வைத்துக்கொண்டு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?” என்று கேட்டான் அந்த வாலிபன்

“அதிகாரம் அடைவேன்!” என்று பதிலளித்தான் சுமேரு. அவன் சொற்களில் ஏளனம் கலந்திருந்தது.

மறுபடியும் வனங்கள் நடுங்கின. இப்புதிய எண்ணம் பூமியைக் களங்கப்படுத்திக் கொண்டிருந்தது.

"அதிகாரம் என்றால் என்ன?" என்று கேட்டான் அந்த அப்பாவி வாலிபன். அப்பொழுது வேறு திசையிலிருந்து அநேக ஆண் பெண்கள் சுமேருவின் குடிசையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். சிலரிடம் பசுக்கள் இருந்தன. சிலரிடம் அரிசி நிறைய இருந்தது. இன்னும் சிலரிடம் மலர்களும் மான்களும் இருந்தன. இன்னும் பலர் வெண்ணெயும் பாலும் வைத்துக் கொண்டிருந்தார்கள். சுமேரு சிறிது நேரம் அவர்கள் வந்து கொண்டிருந்த திக்கை நோக்கினான். பின்பு அந்த வாலிபனைப் பார்த்து கர்வத்துடன் "பார்த்தாயா! இதுதான் அதிகாரம் என்பது! எவ்வளவு மக்கள் இந்தப் பக்கம் வருகிறார்கள் பார்!" என்றான்.

மக்கள் கூட்டம் முழுவதும் சுமேருவின் குடிசைக்கு அருகில் வந்தது. "எனக்கு சிவந்த மணி வேண்டும்!" என்று சிலர் கூவினார்கள். "எனக்குப் பச்சைக் கல்லைக் கொடுங்கள்!" என்று வேறு சிலர் கூறினார்கள். சிலர் மஞ்சள் நிற மணிகள்மீது கருத்தை வைத்திருந்தார்கள். அதிகாரியைப் போன்ற தோரணையில் சுமேரு எல்லாரையும் பார்த்து "சப்தம் போடாதீர்கள்!" என்று கர்ஜித்தான்.

கூட்டத்தில் நிசப்தம் நிலவியது

சுமேரு உள்ளே சென்று கணக்கற்ற மணிகளைக் கொண்டு வந்தான். சூரியனின் பிரகாசத்தில் மணிகள் மிளிர்ந்தன.

"அது என்ன? அது என்ன? அந்தக்கல்லை எனக்குக் கொடுங்கள்!" என்று கூட்டத்திலிருந்தவர்கள் கூச்சலிட்டார்கள். கையில் கொண்டு வந்த மணிகளைக் கீழே வைத்தான் சுமேரு. பிறகு அவைகளிலிருந்து ஒரு கல்லை எடுத்து "பாருங்கள்! இதன் பெயர் 'சுவர்ணமணி' இதோ இந்த வெண்ணிறமான கல்லின் பெயர் 'ராஜமணி!' என்று கூறினான்.

"எனக்குச் சுவர்ணமணி கொடுங்கள்!"

"எனக்கு ராஜமணி வேண்டும்!"

"எனக்கு இரண்டும் வேண்டும்!" இவ்விதமான குரல்கள் கூட்டத்திலிருந்து கேட்டன.

"அவசரப் படாதீர்கள்!" என்று கூறினான் சுமேரு. மறுபடியும் நிசப்தம் நிலவியது.

"சுவர்ணமணி யார் யாருக்கு வேண்டும்?"

"எனக்கு!" "எங்களுக்கு!" என்ற குரல்களால் மறுபடியும் காடு முழுதும் எதிரொலித்தது. சுமேரு மனத்திருப்தியுடன் புன்னகை புரிந்தான். "அப்படியானால் இந்தப் பாத்திரத்தைப் பாருங்கள்! இவ்வித நூறு பாத்திரங்களைப் பாலால் நிரப்பிக் கொடுப்பவர்களுக்கு இந்தச் சுவர்ணமணி கிடைக்கும்!" என்று சுமேரு ஒரு மண்பாத்திரத்தைக் காண்பித்துக் கூறினான்.

எல்லோரும் ஸ்தம்பித்து நின்று விட்டார்கள். ஒருவன் பெரிய பாற்குடத்தைச் சுமேருவின் முன்னால் கொண்டு வந்து வைத்தான். சுமேரு மண்பாத்திரத்தால் நூறு முறை பாலை அளந்து இன்னொரு பெரிய பாத்திரத்தில் கொட்டினான். வந்தவன் சுவர்ணமணியைப் பெற்றுக்கொண்டு சென்று விட்டான். இவ்விதம் வியாபாரம் தொடர்ந்து நடந்தது. அனைவரும் தத்தமக்கு விருப்பமான மணிகளைக் குறிப்பிட்ட பொருள்

களைக் கொடுத்துப் பெற்றுக் கொண்டு சென்றார்கள்.

தூரத்திலிருந்து ஆரண்யகனும் சுகேஷியும் வந்து கொண்டிருந் தார்கள். மனிதக் கூட்டத்தின் தலைவனைப்போல விளங்கிய சுமே ருவையும் அவர்கள் பார்த்தார் கள். சுமேரு, முதலில் வந்த அந்த அப்பாவி வாலிபன் பக்கம் திரு ம்பி "வாலிபனே! என் அடிமை யாக இருக்க விரும்புகிறாயா?" என்று கேட்டான்.

"அடிமை என்றால் என்ன?"

"அதிகாரம் என்றால் என்ன என்பதைப் பார்த்தாய் அல்லவா?"

"ஆமாம்!"

"அப்பொழுது அடிமை என் றால் என்ன என்பதையும் பார்! இதோ இந்தப் பொருள்களை எல் லாம் உள்ளே கொண்டுபோய் வை! இந்தக் கற்களைச் சரியாக வை! இந்தத் தாமரை இலைகளைச் சரியாக அடுக்கி வை! அதோ அந்த இடத்தில் இந்தப் புலித் தோலைப் போட்டு வை!"

அந்த வாலிபன் சுமேருவின் கட்டளைப்படி எல்லாம் செய்ய ஆரம்பித்தான்.

சுமேரு மறுபடியும் கூட்டம் இருந்த பக்கம் திரும்பினான். ஜன ங்களைப் பார்த்து "நான் சொல்லு வதைப்போல் உரக்கச் சப்தமிட் டுச் சொல்லுங்கள்! அப்பொழுது தான் உங்களுக்கு சரியாக ஞாபக மிருக்கும். 'நூறு அரிசிப் பாத்தி ரங்களுக்கு மூன்று சுவர்ணமணி கள்!" என்று கூறினான்.

"நூறு அரிசிப் பாத்திரங்க ளுக்கு மூன்று சுவர்ணமணிகள்!" என்று கூட்டம் உரக்கக் கூவியது.

"நூறு குடம் பாலுக்குப் பத்து ராஜமணிகள்!" என்று கூறினான் சுமேரு. அதே சொற்கள் கூட் டத்திலிருந்து எதிரொலித்தன.

"ஐநூறு பசுக்களுக்கு ஒரு இந் திரமணி!" இச்சொற்களும் எதி ரொலித்தன.

"நூறு இந்திரநீலமணிகளுக்கு ஒரு பெண்!" இந்தச் சமயத்தில் சுகேஷியும் ஆரண்யகனும் அக் கூட்டத்தைக் கடந்து அப்பால் சென்று கொண்டிருந்தார்கள். 'நூறு இந்திரநீல மணிகளுக்கு ஒருபெண்மணி' என்றசொற்களைக் கேட்டு ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றார்கள்.

"நூறு இந்திரநீல மணிகளுக்கு ஒரு பெண்மணி!" என்று கூட்டம் கர்ஜித்தது.

புண்பட்ட இதயத்துடன் சுகே ஷியும் ஆரண்யகனும் சென்று விட்டார்கள்.

●

சுமேருக்கு இரவு முழுவதும் தூக் கமே வரவில்லை. அவனிடம் திரண்ட செல்வமிருந்தது. ஒரு அடிமையுமிருந்தான். இன்னும் பலர் அவன் அடிமையாவதற்குச் சித்தமாக இருந்தார்கள். இருந்த போதிலும் அவனால் சுகமாகத் தூங்க முடியவில்லை. நீலோற் பலம் போன்ற சுகேஷியின் கண் கள் அடிக்கடி அவன் நினைவிற்கு வந்து கொண்டிருந்தன.

மறு நாள் காலையில் அவன் தன் னிடமிருந்த விலை மதிப்பற்ற கற் கள் பலவற்றை எடுத்துக்கொண்டு ஆரண்யகனின் குடிசைக்குச் சென்றான்.

காலைக் கதிரவன் தாமரை இலை களின்மீது இருந்த நீர்த்துளிகளைப் பொன்துளிகளாக்கிக் கொண்டி

ருந்தான். தாமரை மொக்குகள் மெதுவாக மலர்ந்து கொண்டிருந்தன. அங்கு சுகேஷி நீர்க் குடத்தை ஏந்தியவாறு நின்று கொண்டிருந்தாள். தூரத்திலிருந்த திறந்த வெளியில் மான்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

தான் கொண்டு வந்திருந்த விலை மதிப்பற்ற கற்களை சுமேரு சுகேஷியின் காலடிகளில் வைத்தான். நீர் எடுத்துக் கொண்டு திரும்பிய சுகேஷி ஸ்தம்பித்தாள். வனந்திரம் முழுவதும் ஸ்தம்பித்தது. சுமேரு அதிக ஆவலுடன் அவளைப் பார்த்தவாறே நின்றுகொண்டிருந்தான்.

சுமேரு வாய்திறந்து பேச ஆரம்பித்தான். "சுந்தரீ! நான் உன் பின்னால் வந்திருக்கிறேன். இந்திர நீலமணியைக் காட்டிலும் அதிக மதிப்பு வாய்ந்த கற்களைக் கணக்கின்றி நான் உனக்காகக் கொண்டு வந்திருக்கிறேன். அவைகள் அனைத்தையும் கோர்த்து உனக்கு மாலையாக இடுவேன்!" என்று கூறினான் சுமேரு. அவன் நரம்புகளில் இப்போது ஒருவித போதை – காமபோதை போலும்! — இருந்தது.

"சுமேரு! காதலை நீ என்றாவது பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டாள் சுகேஷி.

சுமேரு சிலையைப்போல நின்று கொண்டிருந்தான். ஒன்றும் பேசவே இல்லை.

'காதலை நீ பார்த்திருக்கிறாயா?' என்று மறுபடியும் கேட்டாள் சுகேஷி.

"இல்லை!" என்று பதிலளித்தான் சுமேரு.

"அப்படியானால் பார்! இது தான் காதல் என்பது! அது உன்னால் அளவிட முடியாதது. அதிகாரத்தாலோ பொருளாலோ அடைய முடியாதது! அதுதான் காதல்!"

நேற்று அந்த வாலிபனிடம் அதிகாரம் என்றால் என்ன வென்பதைக் காட்டின செய்தி சுமேருவுக்கு நினைவிற்கு வந்தது! "இது தான் அதிகாரம் என்பது!" என்று அவன் அந்த வாலிபனிடம் கூறியிருந்தான். அதை ஏளனம் செய்து குத்திக் காட்டுவதுபோல் இருந்தது, சுகேஷி கூறிய "இது தான் காதல் என்பது!" என்ற சொற்கள்.

"சுமேரு! இதோ பார்! இந்தக் காதல் எங்கு பிறக்கிறது என்பதை!" என்று கூறியவாறு சுகேஷி எதிரில் தோன்றிய இயற்கைக் காட்சியைச் சுட்டிக் காட்டினாள்.

எதிரில் இருந்த தடாகத்தில் பாதி மலர்ந்த தாமரைகளை வண்டுகள் மொய்த்துக் கொண்டிருந்தன. திறந்த வெளிகளில் மயில்கள் தோகையை விரித்து நடனமாடிக் கொண்டிருந்தன. குயில்கள் மரக் கிளைகளில் கொஞ்சிக் கொண்டிருந்தன. மரங்கள், விலங்குகள், கொடிகள் முதலிய அனைத்தும் இயற்கையின் ஒளியால் மிளிர்ந்து கொண்டிருந்தன.

"பார்த்தாயா காதலின் சிருஷ்டியை!" என்று கூறி சுகேஷி அங்கிருந்து சென்று விட்டாள்.

●

மாலை வேளையில் வானம் நாணமடைந்த பெண்ணின் முகத்தைப் போலச் சிவந்திருந்தது. ஆரண்யகனும் சுகேஷியும் பச்

சைப் பசேலென்ற நிறந்த வெளி களைக் கடந்து தூரத்தில் தெரிந்து கொண்டிருந்க மலைத் தொடர் களின் மீது பார்வையைச் செலு த்தி நடந்து சென்று கொண்டி ருந்தார்கள். அவர்கள் இப்பிர தேசத்தை விட்டு எங்கோ சென்று கொண்டிருந்தார்கள். சுமேரு, சுகேஷியை அடைய முடியும் என்ற நம்பிக்கையை இழந்து விட் டிருந்தான். எனினும் சுகேஷி யின் நினைவு அவன் இதயத்தை விட்டு அகலவே இல்லை. ஆரண் யகனும்–சுகேஷியும் செல்வதைக் கண்டவுடன் அவன் அவர்களிடம் வந்து "நீங்கள் இருவரும் எங்கே செல்கின்றீர்கள் ?" என்று கேட் டேன்.

"எங்கு காதலின் சிருஷ்டி இருக்கிறதோ அங்கே. அதோ! தூரத்தில் பொன் மூலாம் பூசப் பட்ட அந்த இமாலயத்தின் சிக ரங்களுக்கு அப்பால்!" என்றான் ஆரண்யகன்.

"பிறகு இங்கு......"

"இங்கு என்ன? இங்கு இனி பூமி சுவர்க்க மயமாக இருக்காது! சூன்யமாக இருக்கும்! பூமியில் இன்பமிருக்காது! மனிதர்கள் அச்சமின்றி இருக்க மாட்டார் கள். இயற்கை கலையழகுடன் விளங்காது!"

"ஏன் அப்படி?" என்று நடுங் கிக் கொண்டே கேட்டான் சுமேரு.

"எங்கு காமம் இருக்கிறதோ அங்கு காதல் இருப்பதில்லை. பொருள்கள் அளக்கப்படும் இட த்தில் போகம் இருப்பதில்லை. மனிதர்கள் விலைக்கு வாங்கப்படு மிடத்தில் சுவர்க்கம் இருப்ப தில்லை. நீ பொருள் சம்பாதிக்க ஆரம்பித்தாய். ஆகவே இனி மனிதர்களிடத்திலிருந்து அன்பு அகன்று விடும். இங்கு மனிதர் கள் அன்பிற்குப் பதிலாக ஆண வத்தை, காமத்தை, தற்பெரு மையை, சமூக மகத்துவத்தை தலைமையைப் பூஜிப்பார்கள். காத லுக்காக இனிமேல் இங்கு யாரும் கலியாணம் செய்து கொள்ள மாட்டார்கள். இப்பூமியிலிருந்து இனி காதல் ருது நீங்கிவிடும். பிரி வின் கண்ணீர் பிராணிகளின் கண் களில் வழியாது. உண்மை வீரம் இருக்காது. அழகும், ஆனந்த மும் இருக்காது; பருவங்கள் தோன்ற மாட்டா; பருவ இன் பங்களும் மறைந்து விடும். உற் சவம், உல்லாசம், சிருங்காரம், ஒளி எதுவுமிருக்காது. வாழ்க்கை சாரமற்றிருக்கும். மனிதவாழ்வு யந்திரத்தைப்போல தானுக நட ந்து கொண்டுவரும். தாராளத் தன்மை முட்டாள் தனமாகக் கருதப்படும்; பைத்தியக் காரத் தனமாகக் கருதப்படும்; காமம் காதல் போர்வையைப் போர்த் துக் கொண்டு நடமாடும் மக் கள், சுமையாகக் கருதப் படுவார் கள். வஞ்சகம் சாமர்த்தியமாகக் கருதப்படும்......"

சுமேருவின் தலை சுழல ஆரம் பித்தது.

"இவைகளெல்லாம் எப்போது ஏற்படும்? அப்போது மனிதர் கள் எப்படி இருப்பார்கள்?" என்று கேட்டான் அவன்.

"சுமேரு! நீ எதை ஆரம்பித் தாயோ அது தொடர்ந்து நடந்து வரும். மனிதர்கள் மனித குண த்தை விட்டுப் பாம்பின் குணத்தை அடைவார்கள். இச்சகம் பேசி வஞ்சகம் செய்வார்கள்" என்று கூறிவிட்டு ஆரண்யகனும் சுகே ஷியும் நடக்க ஆரம்பித்தார்கள். சிறிது நேரத்திற்குள்ளாக அவர்

கள் வெகு தூரம் சென்று விட்டார்கள். பூமியில் மெதுவாக இருள் சூழ ஆரம்பித்தது. சுமேரு தடாலென்று கீழே உட்கார்ந்து விட்டான். தன் முகத்தை இரு கைகளில் புதைத்துக் கொண்டான்.

"ஓ உலகத் தந்தையே! ஸ்வர்க்கம் போன்ற இந்தப் பூமி இவ்வளவு மோசமாக நரகத்தினும் இழிவாகப் போய் விடுமா? அதுவும் கேவலம் என் அறியாமைக்காகவா? அப்படியானல் பூமி மறுபடியும் எப்போது சுவர்க்கமாக மாறும்?" என்று கதறினன் அவன்.

"பூமியின் நரகத்தைச் சுவர்க்கமாக்குவதற்கு மனிதன் தனது கொதிக்கின்ற இரத்தத்தைச் சமர்ப்பணம் செய்ய வேண்டும்! அன்று இந்தப் பூமி மறுபடியும் சுவர்க்கமாக மாறி விடும்!" என்று எங்கிருந்தோ அசரீரி கூறியது!

★

"ஒருவன் பொய் சொல்கிறன். அவன் அப்படிச் சொல்வதிலே இன்பம் கொடுப்பதை ஒரு கொள்கையாக வைக்கிறன். நாகரீக யுகத்திலே பொய் சொல்கிறவன் ஒரு அடிப்படையாகத் தோணுகிறன். அவன் இல்லாவிட்டால் ஒரு தேநீர் விருந்தின் குஷிக்கு உயிர் போய் விடும். அவன் இல்லாத தேநீர் விருந்தில் பேசப்படும் பேச்சு, பார்லிமெண்டுக் கட்டடங்களில் பேசப்படும் பேச்சைப் போல மந்தமாகத்தா னிருக்கும்."

புத்தக ஆராய்ச்சி

●

அம்பி. ஆசிரியர்: பாசரசு; வெளியீடு: பாசரசு காரியாலயம், 45-46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை; விலை: ரூ 1—0—0.

பிறரைப் பற்றியோ, பிறரது அபிப்பிராயங்களைப் பற்றியோ துளி கூடக் கவலைப் படாமல் தனது பிஞ்சு உள்ளத்திலே வெடித்தெழும் அரிய யோசனைகளையும், அபிப்பிராயங்களையும் தனது சொந்தப் பாணியில் கூசாமல் வெளியிடுகிறான், இந்தப் புத்தகத்தின் கதாநாயகனான அம்பி. பிறந்த நாள் முதல் யுத்தகாலப் பொருள்கள் வரை பலதரப்பட்ட விஷயங்களும் இந்த அம்பியின் அபிப்பிராயத் தாக்குதல்களுக்கு உட்பட்டு நிபந்தனையின்றிச் சரணகதியடைகின்றன. பள்ளிக்கூடத்தில் விடுமுறை விட வேண்டிய விதம் பற்றி அவனது அரிய யோசனையைக் கேளுங்கள்:

“வருஷத்தில் எட்டு மாதம் விடுமுறை; நான்கு மாதங்கள் பள்ளிக்கூடம். இது அமுலில் ஒரு மாதம் பள்ளிக்கூடம், இரண்டு மாதம் விடுமுறையாக மாறி மாறி வரவேண்டும். இதைத் தவிர சனி, ஞாயிறுகளில் மாமூல் லீவு விடவேண்டும். இதிலும் சில மாறுதல்கள் அவசியம். திங்கட்கிழமை பள்ளிகளைத் திறந்தால் சிறுவர்கள் சோர்வடைந்து விடுகிறார்கள். அவர்கள் மனதில் ஒரு வித அதிர்ச்சி சிறுவர்களுடைய சுகத்திற்குக் கேடு விளைவிக்கும். செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி இந்த ஐந்து நாட்களும் எப்படி அந்த உபாத்தியாயர்களிடம் அகப்பட்டுக் கொண்டு முழிப்பது? இந்த சங்கடத்தை நிவர்த்திக்க ஒரு யோசனை சொல்கிறேன். பள்ளிக்கூடங்களைத் திங்கட்கிழமையில் திறப்பதைவிட வெள்ளிக்கிழமைகளில் திறந்தால் நல்லது. வெள்ளிக்கிழமைகளில் கொஞ்சம் சிரமப் பட்டுப் போய் விட்டோமானால் உடனே சனிமுதல் வியாழன் வரையில் லீவு கிடைத்து விடும்.”......

இத்தகைய யோசனைகளும் அபிப்பிராயங்களும் யாருக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நிச்சயமாய் அம்பிகளுக்குப் பிடிக்கும். சுருங்கச் சொன்னால் அம்பிகளுக்குக் கேற்ற ஒரு அரிய ‘டானிக்’ இது.

●

பதிவிரதை. ஆசிரியர்: கே. ஸ்ரீ. பிரசுரம்: பேசும் படம் வெளியீடு, ராயப்பேட்டை, சென்னை; விலை: 1—0—0

பலமற்றஅஸ்திவாரம்- நம்பமுடியாத சம்பவங்களின் கோர்வை — மயக்கும் வார்த்தை வர்ண ஜாலங்கள் — விறு விறுப்பான நடை இவைகளால் உருப்பெற்றிருக்கும் சினிமா நவீனம் இது.

— “உமாபதி”

ஏழு பருவங்கள்

அ. கிருஷ்ணசாமி நாயுடு

இயற்றமிழ் இலக்கியங்களில் பெண் மக்களின் பருவங்கள் ஏழாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை:— பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்பன. இப்பெயர்கள் அனைத்தும் பருவம் குறியாமல் பொதுவாகப் பெண்மக்களைக் குறித்துத் தமிழிலக்கியங்களில் வழங்கப் படுகின்றன. எனினும், உலா என்னும் நூலைச் செய்தவர் ஒவ்வொருவரும், இவ்வேழு வகைப் பருவங்களையும் தனித் தனியாக எடுத்து, உலா என்னும் நூலில் பாடியிருக்கின்றனர். இவ்வுலா நூலார் பெண் மக்களின் பருவங்களைக் குறித்தனரே யல்லாமல், அப்பருவங்களின் வயதை ஒன்றும் வரையறை செய்யவில்லை. என்றாலும் அப்பருவங்களின் வயதை வரையறை செய்த நிகண்டு முதலிய நூலாரின் கொள்கைகளை மனதில் வைத்துக்கொண்டே உலா நூல் இயற்றி யிருக்கின்றனர்.

பிங்கல நிகண்டு என்னும் பழைய நூலில் ஆடவர் வகை என்னும் பிரிவில் 216-ம் சூத்திரத்தில் பெண் மக்களின் பருவப் பெயர்களையும், அப்பருவங்களுக் குரிய வயதையும் வரையறை செய்துள்ளது. அவை வருமாறு:

5-வயது முதல் 9-வயது வரை
பேதைப் பருவம்.

9-வயது முதல் 11-வயது வரை
பெதும்பைப் பருவம்.

11-வயது முதல் 13-வயது வரை
மங்கைப் பருவம்.

13-வயது முதல் 19-வயது வரை
மடந்தைப் பருவம்.

19-வயது முதல் 25-வயது வரை
அரிவைப் பருவம்.

25-வயது முதல் 31-வயது வரை
தெரிவைப் பருவம்.

31-வயது முதல் 40-வயது வரை
பேரிளம்பெண் பருவம்.

இங்ஙனம் பெண் மக்களின் வயதை வரையறை செய்து, அவ் வயதுகளுக் கேற்ற பருவப் பெயர்களையும் மிகவும் ஆராய்ந்து வைத்திருக்க வேண்டும். எக்காரணங்களால் இவ்வாறு பருவங்களைப் பிரித்து வயதுகளை வரையறை செய்தனர் என்பது விளங்கவேயில்லை. எவரும் இதுகாறும் ஆராய்ச்சி செய்தாரும் அல்லர். ஆனால், உலா என்னும் நூலை இயற்றிய ஆசிரியர் அனைவரும், அன்றுமுதல் இன்றுவரை ஒரே விதமாகப் பாடியுள்ளார்.

முதன் முதல் உலா நூல் இயற்றிய ஒட்டக் கூத்தப் புலவர். இவ்வேழுவகைப் பருவம் உள்ள பெண்மக்கள் அனைவரும், குலோத்துங்க சோழன் முதலானவர் பவனிவரும் பொழுது, அரசனுடைய அழகில் காமுற்று மதி மயங்கினர் என்றே பாடி யுள்ளார்.

ஒட்டக் கூத்தருக்குப் பின்பு தோன்றிய ஒண்தமிழ்ப் புலவர்

பலர், இவ்வேழுவகைப் பெண் மக்களும் அரசரைக் காமுறுதல் தகாது என்று கருதிக், கடவுளைக் காமுற்றதாக உலா நூல்கள் பாடினர். அவ்வகையில் சேர்ந்தனவே திருவெங்கையுலா, திருவேங்கடவுலா முதவியன.

அரசரைப் பற்றியோ, கடவுளைப் பற்றியோ பாடிய எந்த உலா நூலின் ஆசிரியரும், அவ்வேழு வகைப் பெண்களும் அரசரையோ, கடவுளையோ காமுற்று மயங்கினர் என்பதில், எள்ளளவும் கருத்து வேறுபாடு கொண்டிலர். காமம் உருத பேதைப் பருவப் பெண்ணும், காமம் கடந்த பேரிளம் பெண்ணும், காமுற்று மயங்குதல் இயற்கைக்கு மாறுபாடு என்பதை ஒரு சிறிதும் எண்ணினரல்லர். அன்றியும், அரசரோ, கடவுளோ யார் பவனி வந்தாலும் அவரைப் பார்த்துக் காமுற்று மயங்குதல் மங்கையரின் மாண்பிற்கே மிகவும் இழிவென்பது இம்மியும் எண்ணினரல்லர்.

இங்ஙனம் பெண்மக்கள் மற்றவரை—அரசரைக்—கண்டு காமுற்று மயங்கினர் என்று பாடுவதற்கு முதன் முதலில் வழி காட்டியவர் முத்தொள்ளாயிரம் என்னும் நூலின் ஆசிரியர் ஆவார்.

முத்தொள்ளாயிரம் என்னும் நூலுக்கு முன்புள்ள சங்க இலக்கியங்களில், ஒன்றிலேனும், எங்கேனும் தமிழ்ப் பெண் மக்கள் தம் கணவரைத் தவிர, மற்றெவரையும் காமுற்றதாக, ஒரு சிறு குறிப்பும் கூடக் காண முடியாது. மேலும், தமிழ்ப் பெண் மக்கள் கணவனையன்றிக் கடவுளையும் கைதொழாதவர். "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்பது பொய்யாமொழி. அதற்கிலக்கியமாகக் கண்ணகியே சான்று.

கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிந்திருந்த பொழுது தேவந்தி என்னும் தோழி கண்ணகியைப் பார்த்துச் சொன்னதாவது: கண்ணகியே! சோம குண்டம், சூரிய குண்டம் என்னும் தீர்த்தங்களில் முழுகிக் காமவேள்கோட்டம் சென்று வழிபடுவாய். உன் கணவன் விரைவில் வந்து உன்னை அடைவான்" என்று சொன்னதற்குக் கண்ணகி கணவனைத் தவிர, வேறு யாரையும் வழிபடுதல் முறைமையன்று என எண்ணிக்கொண்டு. 'நான் அவ்வாறு தீர்த்தங்களில் முழுகிக் கடவுளரை வழி படுதல் பெருமையல்ல' என்றனள். இதனை மிகவும் சுருங்கிய மொழியில் ஆசிரியர் இளங்கோவடிகள்.

"பீடு அன்று என இருந்தாள்" என்கின்றனர். எனவே, முத்தொள்ளாயிரமோ உலா நூல்களோ இலக்கியத்தின் கலைச்சுவைகள் நிரம்பியுள்ளன என்று பெருமை பாராட்டலாம். ஆனல் அக்கலைச் சுவைகள் மகளிர் மாண்புகளைக் குறைப்பனவாகும். மகளிரின் கற்பிற்குக் கறை செய்வனவாகும்.

உலா நூல் என்ப துலகினில்
மகளிர்க்கு

நிலாவினின் கறைபோல் நின்ற
கறையாம்.

என்று 'மகளிர் மாண்பு' என்னும் நூல் சொல்லு கின்றது.

பெண் மக்களின் ஏழு பருவப் பெயர்களையும் முன்னோர் வைத்த வாறே அமைத்து, அப்பருவங்களில் இயற்கையாக நிகழும் குணம், செயல்களுக் கேற்ற

வண்ணம், "மகளிர் மாண்பு" என்னும் நூல் கூறுகின்றது. இதுகாறும் உலா நூலாசிரியர் கூறியதற்கு மாறாகப் புத்தம் புதிய கருத்துக்களைக் கொண்டெழுந்ததே 'மகளிர் மாண்பு' என்னும் நூலாகும். ஒவ்வொரு பருவத்தின் இலக்கணத்தையும் "மகளிர் மாண்பு" கூறுகின்றது.

1. பேதை

மனையறக் குணங்கள் மனதில்
விதைத்தும்
தனியரும் புறாத தகைமையள்
பேதை

2. பெதும்பை

பூப்பு நிகழும் புதுக்குறி கிளைத்து
மீப்புறம் திகழும் மேனியள்
பெதும்பை

3. மங்கை

பூப்பு நிகழ்ந்து புதுமணம்
பெறும் வரைக்
காப்பினுள் நிற்கும் காரிகை
மங்கை

4. மடந்தை

மக்கட் பிறப்பின் மாண்பயன்
இதுவென
ஒக்க திருமணம் உவந்தனள்
மடந்தை

5. அரிவை

கண்ணவ னுடனே காமத்தில்
மூழ்கி
மண்ணக வாழ்வில்
மகிழ்பவள் அரிவை

6. தெரிவை

மக்களைப் பெற்று மனையறம்
காத்து
மிக்க காமத்து மீள்பவள்
தெரிவை

7. பேரிளம்பெண்

நீரறல் பூப்பு நீங்கிக் கணவ
னுடன்
பேரறம் செய்பவள்
பேரிளம் பெண்ணே.

இங்ஙனம் ஒவ்வொரு பருவத்தின் இலக்கணத்தைத் தலைப்பாகக் கொண்டு மகளிர் மாண்பு என்னும் நூல் 2000 வரிகளில் அகவற்பாவாகத் தெளிவான நடையில் எழுதப் பட்டுள்ளது. மேலும் பலவகைப் பாக்களும் பாவினங்களும் அந்நூலில் கலந்து அழகு செய்கின்றன.

சகீனா

கே. சி. எஸ். அருணாசலம்

[ஷாஜகானின் அந்தப் புரத்திலே, பால் நிலவு வேளையிலே அவன் மனைவி மும்தாஜும் தோழி சகினாவும்]

மும்தாஜ் : சகினா! என்றுமில்லாத இன்பத்தை இன்று என் மனம் அடைகிறது. இன்றைய இனிய இரவிலே வெண்ணில விலே நமது மாளிகையும் நகரும் எப்படித் திகழ்கின்றன பார்.

சகினா : ஆம் மஹாராணி! நமது மாளிகையிலே பதிந்துள்ள பளிங்குக் கற்களிலே தோயும் நிலவுக் கதிர்களின் தோற்றம் அமுத வெள்ளமாகத் திகழ்கிறது.

மும் : களங்கமற்ற நீல வானத்தின் காட்சி ஆஹா! விட்டொளிரும் நட்சத்திரங்கள் சுவர்க்கத்தில் ஏற்றிய தீபங்களைப் போலத் திகழ்கின்றன.

சகினா : இன்று பௌர்ணமியல்லவா? நாளை முதல் தேய் பிறைக்காலம்.

மும் : அதனால்தான் பூரண நிலை பெற்ற சந்திரனது இன்றைய பேரழகு, அந்திம காலத்திற்கு முன்னே பேரொளிவிடும் தீபச் சுடர் போலப் பொங்கிப் பெருகுகின்றது.

சகினா : ஆம்!......... மனித வாழ்வின் பேரழகு இளமையிலே தான் இலங்குகிறது. பருவ காலங்களின் பேரின்பம் வசந்தத்திலே திகழ்கிறது.

மும் : இரவின் இனிமையும் எழிலும் நிலவின் காலத்திலேதான் அல்லவா?

சகினா : ஆம்! மஹாராணி.

மும் : கொடிய துன்பத்திற்குப் பின்னே வந்த பேரின்பத்தைப் போல, தீயுமிழந்த சூரியனுக்குப் பின்னே சந்திரன் தோன்றுகிறான்.

சகினா : கொடிய வெப்பத்தினாலே தான் நிலவின் தண்மையை நாம் அறிகின்றோம்.

மும் : சகினா! இந்தப் பொன் கோப்பையிலே திராக்ஷை ரசத்தை ஊற்று. பின், இந்தத் திராக்ஷை ரஸத்திலும் இனிமையான "நிலவே நிலவே" என்னும் பாட்டைப் பாடு. எங்கே? எழில் மிகுந்த இவ் வேளைக்கேற்ற அப்பாட்டைப் பாடு.

(கோப்பையில் சகீனு திராக்ஷை ரசம் ஊற்றுகிறள்.)

சகீனு : தங்களுக்கு விருப்பமானல்.........

மும் : பாடு. சகினு...ம்... இனிக்கும் அந்தப் பாட்டை என் அகங் குளிரப் பாடு.

சகீனு : அந்தப் பாட்டில்தான் உங்களுக்கேன் இத்தனை மோகம்?

மும் : உன்னிசையைக் கேட்டு என் கண்கள் அயர்கின்றன.

சகீனு : இதோ மஹாராணி!

[ஆனந்தமான இசை—தில்நுபா வாத்தியத்தில். மும்தாஜ் உறங்கிய பின் ஷாஜகானின் பள்ளியறையில் சகீனு பாதாக்ஷை ஒலி கேட்கிறது.]

சகீனு : மஹாராஜா!

ஷா : ச.........!

சகீனு : மகாராஜா!

ஷா : யார் சகினுவா?

சகீனு: ஏன் மஹராஜ். நான்தான்.

ஷா : நீதானு......... இது என்ன விந்தை?

சகீனு : விந்தையா? என்ன?

ஷா : சகினு? எங்கே மும்தாஜ்!

சகீனு : மஹாராணி நிலாமுற்றத்திலுள்ள பள்ளியறையிலே தூங்குகிறுர்கள்.

ஷா : (வியப்பு) நிலா முற்றத்திலே தூங்குகிறுளா? ஆனல் இந்த நள்ளிரவு வேளையிலே என் பள்ளியறையிலே நீயேன் தனியாய் நிற்கிறுய்?

சகீனு : தாங்கள்.........

ஷா : சகினு! இது என்ன என்றும் இல்லாத புதுமை. ஒரு நாளும் இல்லாத திருநாளாக ஒப்பற்ற ராஜ அலங்காரங்களுடன் திகழ்கின்றுய்?

சகி : ஆம் மஹாராஜா. இன்று என் வாழ்விலோர் திருநாள் தான்.

ஷா : திருநாளா? எனக்கொன்றும் புரியவில்லையே.

சகி : தங்களுக்காகவே எதிர் நோக்கி நிற்கிறேன்.

ஷா : எனக்காகவா? ஏன்?

சகி : தேன் ததும்பும் புது மலர்... வண்ண வண்ண நிறங்களுடன் ஒய்யாரமாக ஒசிந்தாடி நிற்பதில்லையா?

ஷா : சகினு, என்ன சொல்லுகிறுய்?

சகி : பண்ணிசைத்து வரும் வண்டுக்காக அன்றலர்ந்த மலர்.......

ஷா : இந்தப் புதிர்களெல்லாம் வேண்டியதில்லை.

சகி : வெளிப்படையாகச் சொன்னல்.........

ஷா : மனதில் உள்ளதைச் சொன்னல் கோபமா? இல்லை. தாராளமாகச் சொல்.

சகி : தாங்க முடியாத ஒரு பேராசையை, நீண்ட நாளாய் என் நெஞ்சில் வளரும் ஒன்றைத் தங்களிடம் முறையிட வேண்டுமென்று.......

ஷா : நீண்ட நாளாய் உன் நெஞ்சில் வளரும் பேராசை. அது என்ன சகினு?

சகி : மஹாராஜா...... மொகலாய சாம்ராஜ்யத்திலே வளர்பிறை

யாக வளரும் தங்களது பெரும் புகழ் போல் என் இதயத்திலே காரணம் அறியாமல், கட்டுக்கு அடங்காமல் பொங்கிவரும் காதலைப்பற்றி......

ஷா : காதலைப் பற்றியா? என்னிடத்திலா? சகினு! இது என்ன?

சகி : ஆம், மஹாராஜா. என் பேதை மனம் என்னையும் மீறிப் பேதலித்து விட்டது.

ஷா : புதுக் கமல முகம் காட்டி, புன்னகையின் எழில் காட்டி, நீலத்துகில் உடுத்தி, நீள் விழிக்கு மை தீட்டி, தேன் நிலவு வேளையிலே தேவ மோஹனி போல் என் முன்னே, காதற் கதைகள் பேசவா இங்கு நிற்கிருய்?

சகி : ஆம்......அரசே!

ஷா : ஒரு பணிப் பெண்ணின் காதலுக்கும் ஷாஜஹானுக்கும் என்ன தொடர்பு?

சகி : சக்ரவர்த்தியின் மீதே கொண்ட காதலானல்? இது தவருனது முறையற்றது என்றறிவேன். ஆனல் அடக்கியாளச் சக்தியற்றவளாகத் தவிக்கிறேன்.

ஷா : நான் என்ன கனவு காணுகின்றேனு? சகினு!

சகி : கனவானுல்தான் என்ன? அயர்ந்த கண்களுக்கு ஆழ்ந்த துயிலைப் போல, கோடையின் வெம்மைக்குப் பனித் தென்றலைப் போலத் தங்களது நினைவு என் உள்ளத்தை இனிமை செய்கிறது.

ஷா : மும்தாஜை நிலாமுற்றத்திலே துயில விட்டு, தனியாய்ப் பள்ளியறையிலே நின்று என்னிடத்திலே இன்பக் கதை பேசுகிருய். சகினு! உன்னைக் கள்ளமில்லாதவள், கனிவு நிறைந்தவள் என்றெல்லாம் மும்தாஜ் புகழ்வாளே. அவளை இவ்வாறு வஞ்சிக்கலாமா?

சகி : கள்ளமில்லாத நெஞ்சென்ருல், கனிவு நிறைந் நெஞ்சென்ருல் அதிலே காதலுக்கும் இடம் இல்லாமலா போகும்?

ஷா : இது வஞ்சனை என்று உனக்குப் படவில்லையா?

சகி : நெஞ்சறியச் செய்யும் வஞ்சனைதான். ஆனல் நான், என்ன செய்வேன். எழில் நிறைந்த புது மலர் தன் இரு மருங்கும் குலுங்க, என் உள்ளத்தில் ஓடிய காதல் என்னும் சின்னஞ்சிறு அருவி ஜீவ நதியாகப் பரிணமித்து விட்டது. அதிலே இன்று கோடை வெள்ளமும் பெருக்கெடுத்து விட்டதே.

ஷா : இளம் பெண்ணின் ஆசைப் பெருக்கம் கோடை வெள்ளமாக இருக்கலாம். ஆனல்...?

சகி : ஆனல்......?

ஷா : கோடை வெள்ளம் எப்பொழுதுமே வரம்படங்கிச் செல்வதில்லை சகினு. நெறியற்று ஓடுவதுதான் கோடைப் பெருக்கின் இயல்பு.

சகி : என் காதல்—என் நெஞ்சிலே பொங்கும் மாசற்ற பேரன்பு, நெறியற்றதா? ஏன் அவ்வாறு சொல்கிறீர்கள்? மஹராஜ்! வைர மணிக் குவியல் இடையே நான் பிறக்கவில்லையே அதனுலா? அரச மரபிலே பிறவாமல் அடிமையாகப் பிறந்தேனே அந்தக் குற்றத்திற்காகவா?

ஷா : அல்ல சகினு, சேற்றிலே

பிறந்ததற்காக மனிதன் செந்தாமரையை வெறுப்பதில்லை.

சகி: இதை அறிந்தும் என் மேல் தங்களுக்கு எவ்வளவு பராமுகம். கேவலம் மனிதன் கற்பித்துக் கொண்ட அந்தஸ்தில் எவ்வளவு அபிமானம்!

ஷா: உனது இளமையும், அழகும், ஆசையும் உன் அமைதியை அழித்து விட்டன.

சகி: என்னதான் இளமை இருக்கட்டும். தனக்கு உரிய பொருளை, தான் விரும்பும் அன்பைப் பெருத இளமை இருந்து என்ன பயன்? ஊழிக் காற்றில் சிக்கிய முல்லைக் கொடிக்கு அமைதி ஏது?

ஷா: ஆசை பிறந்ததும் அமைதி அழிந்து விடுவது நேர்மையாகுமா சகிஞ?

சகி: ஆனல் ஆசைக்கு அறிவு அடிமையாகி விட்டால்?

ஷா: உன் விருப்பம் நியாயமானதா என்பதைச் சிந்திக்க வேண்டாமா?

சகி: மஹாராஜா! நவரத்தின அணிகள் உமிழும் பல் வேறு வர்ண ஒளி முன் தவழ எனது மணிமேகலையை நிலத்திலே படாமல் தாங்கியவாறு பணிப் பெண்களின் சூழ காலிலே பொன் சிலம்பு பண்ணிசைக்க, அன்ன நடை நடக்கும் அரசியாவதற்காக நான் தங்களைக் காதலிக்கவில்லை. பெருமை மிகுந்த மொகலாய சாம்ராஜ்யத்தின் புகழ் மணக்கும் மயிலாசனத்திலே தங்களோடு பங்கு கொள்வதற்காக நான் தங்களைக் காதலிக்க விரும்பவில்லை.

ஷா: (இடைமறித்து, இரங்கியவாறு) ச...கி...ஞ!

சகி: அடிமையிலும் அடிமையாய் அவலம் நிறைந்த வாழ்க்கையே எனக்குப் போதும். தங்களது அன்பின் தண்மை கிடைக்கப் பெறுவேனுயில் நரகமும் எனக்குப் பொன்னுலகமாகும். ஆனல், அதற்காக தங்கள் அழகிலே, ஆண்மையிலே, அருங்குணத்திலே என் கன்னி உள்ளம் கொண்ட காதலை அங்கீகரியுங்கள்.

ஷா: சகிஞ! காதல் கட்டின்றி வானெங்கும் பறக்கும் வானம்பாடியல்ல. அது வரம்புள்ள பொய்கையிலே தவழும் அன்னப் பறவை. என் இதயத்தை உனக்கு எப்படி உரிமையாக்குவேன்?

சகி: அப்படியென்ருல்?

ஷா: ஆண்டவன் முன்னிலையில் ஷாஜஹான் மும்தாஜின் செம் மலர்க் கரங்களைப் பற்றியவன் என்பதை நீ மறந்து விட்டாயா?

சகி: ஜீவநதிக்குப் பின்னல் ஓடி வந்த சிற்றருவியை நீலப் பெருங்கடல் மறுத்து விடுகிறதா?

ஷா: சகிஞ! என்றுமே இயலாத ஒரு முடிவுக்காக நீ போரிடுகிருய்.

சகி: அந்தப் போராட்டம் வீண் தானு? பாலைவனத்தில் எறிந்த திராக்ஷைக் கொத்தைப் போன்றது தானு இனி என் வாழ்வு? என் உயிரின் துடிப்புக்குப் பதிலே இல்லையா?

ஷா: உனது நன்மைக்காகவே என்னை மறந்துவிடு சகிஞ.

சகி: என்ன சொன்னீர்கள்?

மறந்து விடுவதா? மழையை மறந்த பயிரை, ஒளியின் மாட்சி மறந்த மலரை உலகிலே எங்கு கண்டீர்கள்? நல்லது மஹராஜ்! மொகலாயப் பேரரசராகிய ஷாஜகான் மீது கள்ளமற்ற காதல் கொண்டாள் ஒரு அபலை. ஆனால் மலைச்சிகரத்தில் மோதிய மெல்லிய முகில் போல் அவள் வாழ்வு சிதறி விட்டதாக முடிவு செய்து கொள்ளுங்கள்.

ஷா : (உளம் கசிந்து) சகினு! எல்லையற்ற பெருங் கடலினுள்ளேயும் கூட, எத்தனையோ காதங்களுக்கு ஒரு முறைதான் தூய நீரைக் காணலாம். அது போல லக்ஷக் கணக்கான மனித சமுதாயத்தின் இடையிலே இன்று உன் உள்ளத்திலேதான் மாசற்ற பேரன்பைச் சந்திக்கிறேன். உனது கண்ணீர் எனக்கு உரியதாகட்டும். உனது தூய அன்பு எனக்கு உரியதாகட்டும். ஆனால் உனது இன்ப உணர்ச்சி நிராசை அடையத்தான் வேண்டும் சகினு.

சகி : ஆகையால் காதலின் ஜீவ இன்பத்தை.........

ஷா : (இடைமறித்து) அது நியாயமற்றது என்பதற்காக மறுக்கின்றேன். ஆனால் தூய்மை நிறைந்ததாய், போற்றத் தக்கதாய் உனது உள்ளத்திலே பிறந்த பேரன்பை—காதலை—மனமாறப் பணிகின்றேன்.

சகி : ஆஹா! என்ன தவம் செய்தேன். மஹராஜ்! அதுவே போதும், அதுவே போதும். கரிய முகில் கும்பற்கள் உதய சூரியனின் ஒளி முத்தத்தாலே விண்ணுலகப் பொன் மலர்களாவதுபோல தங்கள் அன்பின் உவப்பிலேயே என் வாழ்வு ஒளிபெற்றது. ஆஹா! நானே பாக்கியவதி.

[மும்தாஜின் பிரவேசம்—கலீரென்று பாதசரம் ஒலிக்கிறது.]

மும் : (கோபமாக) சகினு!

ஷா : (வியப்போடு) மும்தாஜ்!

மும் : (சினமும் வெறுப்பும்) இதெல்லாம் என்ன?

சகி : மஹாராணீ!

மும் : மஹாராணீ... என்ன தைரியம்? உடன் பிறந்தே கொல்லும் விஷ நோயினும் கொடியவள் நீ சகினு.

ஷா : பதருதே மும்தாஜ்!

மும் : இது என்ன காட்சி மஹாராஜா? நள்ளிரவிலே பள்ளியறையிலே...

ஷா : அமைதி கொள். மும்தாஜ் சினம் கொள்வது சரியானதல்ல.

மும் : சக்கரவர்த்தியின் சயன அறையிலே நடக்கும் இந்த வேடிக்கை முற்றிலும் சரியானது. இல்லை?

சகி : மஹாராணீ நான்தான்......

மும் : நிறுத்து. அழகிய நிலவைப் பற்றி இனிக்கப் பாடி, நான் துயின்ற பின் அரசரை வரவேற்று உன் ஆசைக் காதலைக் கூற உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தமிருக்க வேண்டும். அடி வஞ்சனைக்காரி! உன் கட்டழகு காட்டி கண் வலையை வீசி, இந்தக் கள்ளத்தனம் செய்வதற்கா இத்தனை நாள் காத்திருந்தாய்?

சகி: கள்ளத்தனம் செய்வதற்காக நான் காத்திருக்கவில்லை மஹாராணீ.

மும்: பின்னே அந்தப்புரத்திலே அரசர் தனிப்பட்ட போது காதல் வர்ணனை செய்யக் காத்திருந்தாயா?

சகி: சக்ரவர்த்தியின் மீது எனக்குள்ள காதலை அவரிடத்தில் தனிமையில்தானே வெளியிட முடியும்?

மும்: (பொங்கி) சக்கரவர்த்தியின் மீதுள்ள உன் காதலையா? சகினா! என் முன்னு சொல்லுகிறாய். உன் கேவலமான நிலைமை என்ன? அரசரின்......

சகி: மஹாராணீ! முடவனுக்குக் கொம்புத் தேன் கிடைக்காது போகலாம். ஆனால் அவன் அதன்மேல் கொள்ளும் ஆசையைத் தடுக்க முடியுமா?

ஷா: மும்தாஜ்! வஞ்சனையும் மாயமும் ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை. வீணே என் பதட்டம்?

மும்: நான் யாவும் கேட்டேன். மஹாராஜ்! என் முன்னேயே அவள் என்ன என்ன பேசுகிறாள். எவ்வளவு கர்வத்துடன் தன் காதலைப்பற்றி...... மஹாராஜா.

சகி: மன்னிக்க வேண்டும். பச்சை மயிலுக்குத்தான் காதல் உரிமை என்று எனக்குப் படவில்லை. மாடப் புறுவுக்கும் உண்டு.

மும்: கேவலம் அடிமையான உனக்கு, ஒரு பிச்சைக்காரிக்கு இப்படிப் பேச எவ்வளவு துணிவிருக்க வேண்டும்?

சகி: மஹாராணீ! நான் பிச்சைக்காரிதான். ஆனால் நான் கையேந்தி நிற்பது தாங்கள் வீசும் பொன் பிச்சைக்கல்ல. சக்ரவர்த்தியின் கருணை சமுத்திரமான உள்ளத்திலே பொங்கித் தெறிக்கும் அன்புக்காக.

மும்: (கேலியாக) உண்மைதான். அந்தக் கருணைக் கடலின் காதலைப் பற்றித்தான் இந்த சாம்ராஜ்யத்தின் கனகமணிக் கட்டிலையும் பற்ற முடியும் அல்லவா?

சகி: இல்லை. மஹாராணி! ஒருக்காலும் இல்லை. சக்ரவர்த்தியின்பால் நான் கொண்ட காதல் சாம்ராஜ்ய பீடத்திற்காக அல்ல. என் ஆத்ம சாந்திக்காக.

மும்: ஆத்ம சாந்திக்கா? இதோ...

[மும்தாஜ் சகீனாவைப் பளீரென அறைந்து விடுகிறாள்]

ஷா: மும்தாஜ்...... மும்தாஜ்...... ஆஹா! என்ன செய்து விட்டாய் மும்தாஜ்!

மும்: என்ன செய்து விட்டேன்?

ஷா: சகினா உனக்கு உடலால் தான் அடிமை. உள்ளத்தால் அல்ல.

மும்: பார்க்கலாம். உப்பைத் தின்றதை மறந்த துரோகி. போ! போ வெளியே...... என் கண்ணுக் கெட்டாது எங்கோ தொலைந்து போ. இதுவரை எனக்கு உழைத்தாய், நீ உயிர்ப்பிச்சை பெற்றாய்.

சகி: வைரத்தை வைரமே வெட்டி விட்டது. ஆண்டவன் முன்னிலையிலே ஆண்டையும் அடிமையும் இல்லை. தூய அன்பின்

பிரவாகத்தின் முன்னும் இந்தப் பேதாபேதம் என்றும் இல்லே.

மும் : போகிருயா இல்லேயா?

சகி : மஹாராணி! என் ஆன்மா சாந்தியடைந்து விட்டது. இனி என்னேக் கொதிக்கும் எண்ணேக் கொப்பறையில் இட்டாலும் எனக்கு அது குளிர்ந்த

[இசை சாந்தமாக]

ஷா : சகிஞ! மும்தாஜ் அழகின் நிலேக்களம். நீ அன்பின் திருக் கோயில், பெருமை மிகுந்த மொகலாயப் பேரரசிற்கும், என் இனிய மும்தாஜின் ஹிருதயத்திற்கும் சர்வாதிகாரியாகிய நான், உனது மாசில்லா அன்பின் வெள்ளத்தின்



அருவியாகவே இலங்கும். (சற்று தூரத்தில்) இதோ நான் செல்லுகிறேன்.

ஷா : (பெருந்துயர் பொங்க) சகினு... சகினு... நில் எங்கே செல்லுகிருய்?

சகி : (இன்னும் தூரத்தில்) யமுனை நதியின் வெள்ளத்தில் வீழ்ந்த சிறு துரும்பு எங்கு போகுமென்று சொல்வது மஹாராஜா?

முன்னே தலே வணங்கி விட்டேன்! சகிஞ! அமுதத் துளி ததும்ப தேவ உலகிலே மலர்ந்த அமர மலர் மனிதனின் கைகளேக் கடந்து நிற்பது போல, உனது தூய காதலும் என் கை கடந்து நிற்கிறது. சகினு! அமுத ஸ்பரிசத்தினுலே அழியாத் தன்மை பெற்ற தேவ மலர்போல் என் உயிரிலும் உணர்விலும் நீ அமரத்வம் பெற்று விட்டாய்!

திருச்சி வானெலி நிலேயத்தாரின் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

சூட்டோட்டம்

ஆர். கே. விஸ்வநாதன்

சூடு என்பது யாது என்று நெடுநாள் வரை விஞ்ஞானிகளுக்குத் தெரியவில்லை. நீரைப்போல இதுவும் ஒரு பொருள் என்றும் அது ஓடுவது போல இதுவும் ஓடுகிறது என்றும் நினைத்து வந்தார்கள். சூடு ஓடுவது உண்மை தான். ஆனால் அது நீரைப்போல ஒரு பொருள் அல்ல என்று சமீபத்தில்தான் தெரிய வந்தது. இவ்வுண்மையைக் கண்டு பிடித்தவர் "ரம்போர்டு" என்னும் விஞ்ஞானி. இவர் சூடு, இயக்கத்தினல் உண்டாகிறது என்று காட்டினர். சூடு இயக்கத்தின் விளைவு என்றால் இயங்குவது எவை என்று கேள்வி பிறந்தது. பொருள்களெல்லாம் அணுக்களால் ஆனவை என்பது நெடுநாள் முன்னரே அறியப்பட்ட உண்மை. சூட்டிற்குக் காரணம் இவ்வணுக்களின் இயக்கம் தான் என்று அறிந்தார்கள். பலவிதப் பொருள்களின் அணுக்கள் மற்ற குணங்களில் வேறு பட்ட போதிலும் இதில் வேறு படவில்லை. எனவே நிரந்தரமான இயக்கம் எல்லா அணுக்களுக்கும் உள்ள பொதுவான பண்பு என்று தெரிகிறது. இவ்வியக்கத்தைப் பொருத்து பொருளின் வெப்பநிலை (Temperature) அமைகிறது. அணுக்களின் இயக்கம் அதிகமாக இருக்கும் போது வெப்பநிலை உயர்ந்தும் குறைவாக இருக்கும் போது வெப்பநிலை குறைந்தும் இருப்பது தெரிய வந்தது. வெப்ப நிலை உயர்வாக இருக்குமிடங்களிலிருந்து வெப்ப நிலை குறைவாக இருக்குமிடங்களுக்கு இவ்வியக்கம் பரவுவதைத் தான் சூட்டோட்டம் என்கிறோம். நீரோட்டத்துக்கு மட்ட வேற்றுமை காரணமாயிருப்பது போல சூட்டோட்டத்துக்கு வெப்பநிலை வேற்றுமை காரணமாக இருக்கிறது.

பொருள்களின் வெப்ப நிலையை அறியப் பல கருவிகளை இயற்றி இருக்கின்றார்கள். அவற்றில் ஒன்று தான் "தெர்மாமீடர்." ஒருவருக்குக் காய்ச்சலாக இருக்கும் போது வைத்தியர் இக்கருவியை அவர் வாயில்வைத்துப் பார்ப்பார். நோயாளியின் உடல் உஷ்ணத்தினால் இக்கருவியிலுள்ள ரசத்தின் பருமன் அதிகரிக்கின்றது. இவ்வதிகரிப்பைக் கொண்டு நோயாளியின் வெப்பநிலை அறியப்படுகிறது. இதைக் குறிக்கும் போது இவ்வளவு டிகிரீ (Degree) வெப்ப நிலை என்று சொல்லுவது வழக்கம். இதில் இரண்டு வகை கணக்குகளே பெரிதும் கையாளப்படுகின்றன. ஒன்றுக்கு சென்டிகிரேடு (Centigrade) கணக்கு என்றும் மற்றொன்றுக்கு பாரன்ஹீட் கணக்கு (Farenheit) என்றும் பெயர். காய்ச்சல் இல்லாமல் இருக்கும் போது ஒருவருக்கு 98-6 டிகிரி பாரன்ஹீட் இருக்கும். ஒரு பொருளின் பருமன் சூட்டினால் அதிர்ச்சியடைவது தான்

எல்லா தெர்மாமீடர்களிலும் முக்கிய தத்துவமாக இருக்கிறது. சோதனைச் சாலைகளில் காற்றின் அதிர்ச்சியை பயன் படுத்திய தெர்மாமீடர்கள் திருத்தமான அளவைகளைக் காணுவதற்கு உபயோகப் படும். சூட்டினல் ஏற்படும் மற்ற விளைவுகளைப் பயன் படுத்திய கருவிகளைக் கொண்டும் வெப்ப நிலை அளக்கப்படும். உதாரணமாக சூட்டிற்கும் மின்சாரத்துக்கும் உள்ள தொடர்பைப் பயன் படுத்திய கருவிகள் அனேகமிருக்கின்றன.

சூடு எவ்வாறு பொருள்களில் ஓடுகிறது என்று இப்போது பார்ப்போம். ஒரு இரும்புக் கம்பி முனையை நெருப்பிலே இட்டு மற்றொரு முனையைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தால் என்ன ஏற்படுகிறது. சிறிது நேரத்திற்குள் கம்பியின் வெப்பநிலை உயர்ந்து அது கையினல் பிடிக்க முடியாமல் சூடேறி விடுவதைப்பார்க்கிறோம். நெருப்பில் இட்ட முனையின் வெப்பநிலை அதிகரித்து அங்கிருந்து வெப்பநிலை குறைவாயுள்ள மற்ற முனைக்கு சூடு ஓடிவருகிறது. எல்லாக் கம்பிகளிலும் சூடு மிக எளிதாக ஓடி வரும். ஆனல் சில உலோகக் கம்பிகளில் வெகு சீக்கிரத்தில் ஓடி வரும். மற்ற உலோகங்களைக் காட்டிலும் வெள்ளியில் சூட்டோட்டம் சடுதியில் உண்டாகும். உலோகங்களில் ஓடுவது போல கண்ணடி, மரம், மண் முதலிய பொருள்களில் சூடு எளிதாக ஓடாது. திடப் பொருள்களில் சூடு ஓடும் விதத்தை உகைத்தல் (Conduction) என்று கூறுவார்கள்.

திரவங்களிலும் வாயுக்களிலும் மேற் சொன்ன முறையில் ஓடும் சூட்டின் அளவு மிகமிகக் குறைவாக இருக்கும். இங்கே வேறு வழியில் சூட்டோட்டம் உண்டாகும். ஒரு கண்ணடிப் பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு அதில் சிறிது சாயத்தூளை போட்டு நீரைக்காய்ச்சினல் என்ன ஆகிறது என்று கவனிக்கவும். நெருப்புக்குச் சமீபத்திலுள்ள தண்ணீர் சூடேறி விரிந்து மேலேறுவதை உடன் செல்லும் சாயத்தூள்களின் இயக்கத்தைக் கொண்டு பார்க்கலாம். உடனே மேற்பரப்பிலுள்ள குளிர்ந்த தண்ணீர் கீழ் நோக்கி இறங்கி ஓடிவருவதைப் பார்க்கலாம். தண்ணீர் சூடேற சூடேற இவ்வாருன மேல் நோக்கிச் செல்லும் அருவிகளும் கீழ் நோக்கி இறங்கும் அருவிகளும் தோன்றிக் கொண்டே இருக்கும். நம் வீடுகளிலுள்ள காற்று நாம் சுவாசிப்பதினல் சூடேறி மேலெழும்புகிறது. ஜன்னல்களின் வழியாக குளிர்ந்த காற்று வீடுகளினுள்ளே நுழைகிறது. இங்கும் காற்று அருவிகள் ஏற்படுவதினல் தான் வீட்டிலுள்ள காற்று எப்போதும் சுவாசிக்கத் தக்கதாய்த் தூய்மையாய் இருக்கிறது. சூட்டோட்டத்தினல் உண்டாகும் காற்று அருவிகள் நன்ருக ஓடுவதற்கு வீடுகளில் தரைக்கு அருகில் பெரிய ஜன்னல்களும் கூரைக்கு அருகே சிறிய ஜன்னல்களும் வைக்க வேண்டும். இம்மாதிரி சூடு பரவுவதை விரவுதல் (Convection) என்று கூறுவார்கள்.

சிலசமயம் சூடு ஒரு விதப்பொருளின் உதவியில்லாமலும் பாய்ந்து செல்லும். இம்முறையில் சூட்டோட்டம் ஏற்பட்டால் அதற்கு கிரணித்தல் (Radiation) என்று பெயர். சூரியனிடமிருந்து சுமார் ஒன்பது கோடி மைல் தூரத்திலுள்ள நம்மை நோக்கி ஓடிவரும்

சூட்டை இம்முறையினுல் தான் பெறுகிருேம். சூரியனின் சூடு பூமியை அடையுமுன்னே பல மைல்கள் வரை பவனத்தினுள்ளே ஊடுருவி வரவேண்டியிருந்தாலும் பவனம் அதனுல் சூடேறுவதில்லே.

இம்மூன்று முறைகளிலும் சூட்டோட்டம் ஏற்படும் விதத்தை ஓர் உபமானத்தினுல் காட்டி விட்டு அவற்றின் வித்தியாசங்களே கவனிப்போம். கூட்டமாக நிற்கும் மக்களுக்கு ஒருவர் பழங்களே வினியோகிக்க வேண்டியிருப்பதாகக் கொள்வோம். இதையும் மூன்று வகைகளிலே செய்யலாம். வினியோகிப்பவருக்கு அருகில் நிற்கும் மக்களிடம் பழங்களே எடுத்துக் கொடுத்து, அவற்றை முறையே கைமாறும்படி செய்து கூட்டத்தார் ஒவ்வொருவரும் தத்தம் இடங்களிலிருந்தே பழத்தைப் பெறும்படி செய்யலாம். இது ஒருவகை. இது உகைத்தலேப் போன்றது. கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் தாமே நேரில் வினியோகிப்பவரிடம் சென்று பழத்தைப் பெற்று மறுபடியும் கூட்டத்தில் சென்று கலந்து விடலாம். இது விரவுதல் போன்றது. வினியோகிப்பவர் பழங்களே எடுத்துக் கூட்டத்தார் ஒவ்வொருவரையும் நோக்கி பழத்தை மற்றவர் கையில் சிக்காமல் வீசி எறிந்து வழங்கலாம். இது கிரணித்தலேப் போன்றது. பொருள்களெல்லாம் அணுக்களால் ஆனவை என்று பார்த்தோமல்லவா. நெருப்பில் உலோகக் கம்பியின் ஒரு முனேயை இட்டபோது அங்குள்ள அணுக்களின் இயக்கம் சூட்டினுல் அதிகரிக்கின்றது. அவை முன்னிலும் வேகமாக இயங்க ஆரம்பிக்கின்றன. இதனுல் அடுத்துள்ள அணுக்களேயும் வேகமாக இயங்கச்செய்கின்றன. அவையும் வேகமாக இயங்கி அவற்றைத் தொட்டுக்கொண்டிருக்கும் மற்ற அணுக்களேயும் வேகமாக இயங்கச் செய்கின்றன. இவ்வாருக ஒரு வித இயக்கம் சூடுண்ட முனேயிலிருந்து குளிர்ந்த முனேக்குப் பரவுவதினுல் சூட்டோட்டம் உண்டாகிறது. இதுதான் உகைத்தல் என்னும் முறை. தண்ணீரைக் காய்ச்சிய போது நெருப்புக்கு அருகிலுள்ள தண்ணீர் அணுக்கள் சூடேறி இடம் பெயர்ந்து குளிர்ந்த இடங்களுக்கு ஓடுகின்றன. இவ்வாறு சூட்டோட்டம் ஏற்படுவதை விரவுதல் என்று கூறுகிருேம். மூன்ருவது முறையில் சூட்டோட்டத்துக்குப்பொருளே வேண்டியதில்லே. அப்படி அது செல்லும் பாதையில் பொருள் இருந்தாலும் சூடேறுவதில்லே. இம்முறைக்குத்தான் கிரணித்தல் என்று பெயர்.

இக்கிரணித்தல் முறையை ஆராய்ந்ததின் பயனுக சூட்டிற்கும் ஒளிக்கும் உண்டான தொடர்பு தெரிய வந்தது. சூரியனிடமிருந்து நாம் அடையும் சூடும் ஒளியும் கிரணங்களாகவே நம்மை அடைகின்றன. இக்கிரணங்கள் விசும்பில் அலேகளாகப் பரவுகின்றன. அலேகளில் பலவகை உண்டு. சிற்றலேகளுமுண்டு. பெரிய அலேகளுமுண்டு. சூட்டலேகளின் நீளம் ஒளி அலேகளேக் காட்டிலும் பன் மடங்கு அதிகம். பல நிற ஒளி அலேகள் வெவ்வேறு நீளங்கள் கொண்டிருக்கும். ஒரு பொருளேச் சூடேற்றினுல் அதனின்று முதலில் சூட்டலேகள் கிளம்பும். வெப்ப நிலே உயர உயர அதற்குத் தகுந்தாற்போல் அதனின்று பல நிற ஒளி அலேகள் வெளிப்படும். இவ்வலேகளேக் கொண்டு பொருளின் வெப்ப நிலேயை நிர்ணயித்து விடலாம்.

சூரியன் முதலிய நக்ஷத்திரங்களின் வெப்ப நிலையை இவ்வாறுதான் நிர்ணயித்தார்கள். ஒரு நக்ஷத்திரம் சிவப்பாகத் தோன்றினால் அதன் வெப்ப நிலை இரண்டாயிரம் டிகிரி சென்டிகிரேடு இருக்கும் என்றும், ஆரஞ்சு நிறமாகத் தோன்றினால் நாலாயிரம் டிகிரி இருக்கும் என்றும், மஞ்சளாகத் தோன்றினால் ஆறுயிரம் டிகிரி இருக்கும் என்றும், வெண்மையாக தோன்றினால் பதினாயிரம் டிகிரி இருக்கும் என்றும் சோதனை வாயிலாக அறிந்தார்கள். இவ்வாறு செய்த சோதனைகளிலிருந்து சூரியனின் வெப்ப நிலை ஆராயிரம் டிகிரி இருக்க வேண்டு என்று ஊகிக்கப்பட்டது. இரும்பு உருகி ஓடிவரும்போது அதன் வெப்ப நிலை சுமார் இரண்டாயிரம் டிகிரி இருக்கும். இதிலிருந்து சூரியனின் வெப்பநிலை எத்தகையதாக இருக்கும் என்று ஊகிக்கலாம்.

ஒளி அலைகளைப் பற்றின ஆராய்ச்சிகள் செய்யப்பட்டபோது ஒளி, மின் — காந்த இயலாக இருப்பது தெரிய வந்தது. ரேடியோ நிலையங்களில் அயல்நாடுகளுக்கு சமாசாரங்களை அனுப்புவதற்கு உபயோகப்படுவது மின் காந்த அலைகள் (Electro magnetic waves) தான். சூட்டலைகள், ஒளியலைகள், ரேடியோ அலைகள் எல்லாம்ஒரே வகை அலைகள்தான் என்று கண்டு பிடித்தார்கள். இவை எல்லாம் நீளத்தில் தொடர்ச்சியாக அமைந்துள்ளன. ரேடியோ அலைகள் சாதாரணமாய் பல அடிகள் நீளம் கொண்டிருக்கும். சூட்டலைகள் சுமாராக அங்குலத்தில் பதினாயிரத்தில் ஒரு பங்கு நீளம் கொண்டிருக்கும். அது ஒளி அலைகள் அங்குலத்தில் அறு பதினாயிரத்தில் ஒரு பங்கு நீளம் கொண்டிருக்கும். இவை ஒவ்வொன்றின் வேற்றுமையும் அலை நீளத்தில் ஏற்பட்ட வேற்றுமைதான் என்று அறிந்தார்கள்.

சூட்டலைகள் ரேடியோ அலைகள் இரண்டும் ஒரே வகையைச் சேர்ந்தவை என்று பார்த்தவுடன் ரேடியோ அலைகளைக் கொண்டு சூட்டைப் பெறலாமா என்று சோதனைகள் செய்யலானார்கள். நீளம் மிகக் குறைவாயுள்ள ரேடியோ அலைகளைக் கொண்டு சமாசாரம் அனுப்பும் நிலையங்களில், இவ்வலைகளை உற்பத்தி செய்யும் கருவிகளுக்கு அருகில் நின்றவர்களுக்குக்காய்ச்சல் உண்டாவதைக்கவனித்தார்கள். இதன் காரணத்தை ஆராய்ந்தபோது இவ்வலைகள் தாக்கினதின் பயனாகவே காய்ச்சல் உண்டாயிற்று என்று அறியப்பட்டது. உடனே இவ்விளைவை வைத்தியத் துறையில் பயன் படுத்தலானார்கள். நோயாளிகளுக்கு ரேடியோ அலைகளினால் காய்ச்சல் காணும்படி செய்து சில வகை வியாதிகளைச் சொஸ்தப் படுத்தி வருகின்றார்கள். தற்காலம் இவ்வலைகள் தொழிற்சாலைகளிலும் பயன்பட்டு வருகின்றன. இதில் அனேக சௌகரியங்கள் இருப்பது தெரிய வந்தது. சாதாரணமாக நாம் ஒரு பொருளை சூடு செய்யும்போது ஆரம்பத்தில் அதன்மீது உறைக்கும் வெளிப்புறமே முதலில் சூடேறுகிறது. ஆனால் ரேடியோ அலைகளைக் கொண்டு சூடேற்று விக்கப்படும் பொருளின் உட்பக்கம்தான் முதலில் சூடேறும். மேலும் இவற்றைக் கொண்டு சிறிது நேரத்திலேயே எஃகையும் உருக வைக்கும் சூட்டை பெற்று விடலாம். இதில் செலவும் குறைவு. பெருவாரியாகப் பண்டங்களைத் தயாரிப்பதற்கு செலவுதான் முக்கியம்.

உதாரணமாக வங்கம் பூசிய (Tin plate) தகடைத், தயாரிக்கும் தொழிற்சாலைகளில் இவ்வலைகளைக் கொண்டு சூடு பெறுவதில் உண்டான சௌகரியத்தைப் பார்ப்போம். முதன் முதலில் இதைத் தயாரிப்பதற்கு எஃகு தகடை உருக்கிய வங்கத்தில் முழுக்கி எடுத்து வந்தார்கள். வங்கத்தை உருக்குவதில் செலவு அதிகம். நேரமும் ஆகிறது. இதை உணர்ந்து மின்சாரத்தைக் கொண்டு வங்கப் பூச்சைப் பெறுகிறார்கள். இம்முறையில் வங்கம் தகட்டின் ஒத்தாற்போல படிவதில்லை. இதனால் தகடு சீக்கிரத்தில் துருப் பிடித்து விடுகிறது. ரேடியோ அலைகளைக் கொண்டு வங்கத்தை தக்கவாறு உருக்கி பூச்சு சீராக ஏற்படுமாறு செய்து வருகிறார்கள். அமெரிக்காவிலுள்ள எல்லா ரேடியோ நிலயங்களும் உற்பத்தி செய்யும் அலைகளைவிட அங்குள்ள தகர தகடு தொழிற்சாலைகளில் தான் அதிகமாக ரேடியோ அலைகள் உற்பத்திசெய்யப்படுகின்றன என்றால் இவ்வலைகளின் உபயோகத்தை ஊகிக்கலாம். மேலும் ரப்பரைப் பதனிடுவதற்கும், மரப் பலகைகளைப் பதனிடுவதற்கும், இதுபோல எண்ணற்ற காரியங்களுக்கும் இவ்வலைகள் சூட்டலைகளாகப் பயன்பட்டு வருகின்றன.

★

கலைப் பெண்

“தனக்குள்ளே சிந்தித்து ஆராய்ச்சி நடத்தும் கலைதான் பொலிவு பெற முடியும்; வெளியிலிருந்து பிச்சை வாங்குவதாலல்ல. கலையைப் புற அழகை வைத்துத்தராசிட—மதிப்பிட—முடியாது; மதிப்பிடக் கூடாது. கலைப்பெண் ஒரு திரை; பிரதிபலிக்கிற கண்ணாடி அல்ல. வெளி யுலகம் செய்ய முடியாததைக் கலை உலகம் செய்துவிட முடியும். கலைப் பெண்ணானவள் ஒரு சிறு நூலைக் கொண்டு சந்திரனை இழுத்து விடும் மகத்தான சக்தியைப் படைத்தவள். அவளுடைய வடிவழகின் பூர்ணத்வத்திலே, கேவலம் மனிதனுடைய வடிவு அரை குறையானதுதான். அவள் தன்னைச் சுற்றி எழுப்பியிருக்கிற கோயிலினுள்ளே மனிதன் எழுப்பியிருக்கிற கட்டடங்களெல்லாம் முடிக்கப் பெறாதவை! இயற்கையின் கண்ணுக் கெதிரே சட்ட திட்டங்களோ, எல்லை யிறுதியோ கிடையாது. ஆனால் கலைப் பெண்ணே அற்புதங்கள் இயற்றக் கூடியவள். குளிர் காலத்திலே மரங்களைப் பூக்க வைக்கும் சக்தி அவளுக்குண்டு; உலர்ந்து சூடேறிப் போன கட்டாந் தரையிலே பனியை அள்ளி அள்ளி விடுவாள் அவள். அவள் ஆணையிட்டால் போதும், மூடுபனி தன்னுடைய வெள்ளிய விரல்களை ஜுன் மாசத்துக் கொடிய உஷ்ணத்திலே அலக்ஷ்யமாக வைக்கும் விந்தையை இயற்றுவாள். கலைப் பெண்ணின் மகத்துவம் அப்படிப்பட்டது!”

சோகம்!

மு.பெரியசாமி

என் உயிரின் இன்னுருவே!

தங்கக் கரம் கொண்டு தனித்தமிழில் நீபதித்த
அன்புக் கடிதம் கிடைத்தது ; அருங்கனியே,

உங்கள் ஊர்க் குயிலெல்லாம் உரத்த குரலெடுத்து
துன்பப்பண் இசைப்பதாய்ச் சோகமொழி கூறியுளாய்

எங்கள் நகரென்ன இன்பம் நிறைந்துளதோ!
நன்செய்ப் பயிர்ப்பரப்பு நல்லமழை காணுது

அங்கம் நிறமிழந்து அல்லல்உறும் காட்சி
துன்பத்தின் எல்லை; துயரத்தின் மேல்உச்சி

பொதிய மலைக்காற்று புத்துயிர் அளிக்குமெனில்
புயற்காற்ருய் உன்னைப் புண்செய்யும் பொருள்கேட்டாய்!

மதியின் ஒளிவெள்ளம் மனத்திற்கு இன்பமெனில்
மணற்பாலை போல்உன்னை மாய்க்கும் வகைகேட்டாய்!

அதிமதுரம் போலும்என் அன்னை உவந்தளிக்கும்
உணவு கசக்கிறதே உண்மை அறிவாயா?

சுதிஅமையா வீணை ; சுடரில்லாத் திருவிளக்கு
அதுபோல என்வாழ்வும் அலங்கோலம் ஆகுதடி!

கன்னடக் கதை:

அஞ்சனம்

மூலஆசிரியர்: ஸி. கே. வெங்கட்ட்ராமையர் எம். ஏ.
மொழிபெயர்ப்பு: ஜெயலட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன்

புருஷோத்தமராயரின் வீட்டில் ஒரே கோலாகலம். அவர் மனைவி லக்ஷ்மி அன்று டென்னிஸ் பந்தயத்தில் ஜெயித்து விட்டு அப்பொழுதுதான் வீட்டிற்கு வந்திருந்தாள். மறு நாள் வரலக்ஷ்மி பண்டிகை. ஆதலால், அந்தப் பண்டிகைக்கு முதல் நாள் தான் ஆட்டத்தில் வெற்றி பெற்றதில் அவளுக்கு அதிக சந்தோஷம். ஆட்டத்தில் புகழும், கர்வமும் கொண்டிருந்தவளைத் தான் தோற்கடித்ததில் லக்ஷ்மிக்கு மிகமிகப் பெருமை. லக்ஷ்மியின் ஆப்த சிநேகிதிகள் பலர் அவள் வீட்டிற்கு வந்து தங்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். இந்த வைபவம் இரவு எட்டரை மணி வரைக்கும் நடைபெற்றது.

வீடு அதுவரையிலும் ஒரே சிரிப்பும் கொம்மாளமுமாய் இருந்தது. ஒருவர் "பாருங்கள் லக்ஷ்மியம்மா! உங்கள்மேல் பக்தியால் அஞ்ஞானிகளான பெண்களின் கண்ணுக்கு, நீங்கள் அஞ்சனம் தீட்டிய மாதிரி ஆயிற்று" என்றார். மற்றொருவர் "அடாடா! எதிர்ப்புறம் ஆடிய அந்தம்மாளின் பாடு ரொம்பத் திண்டாட்டமாய்ப் போய் விட்டது" என்றார். இன்னும் ஒருவர் "நாளைக்கு வரலக்ஷ்மி பண்டிகை. இன்று லக்ஷ்மியம்மாள் டென்னிஸ் விளையாட்டில் ஜெயித்திருக்கிறார். லக்ஷ்மி தேவியின் பண்டிகைக்கு நாம் ஜயலக்ஷ்மியையே வீட்டிற்கு அழைத்து வந்த மாதிரி ஆயிற்று" என்றார். இதே மாதிரி கிளம்பிய விதவிதமான புகழ் மொழிகளைக் கேட்டு லக்ஷ்மியம்மாளும் அவள் குழந்தைகளும் மகிழ்ந்தனர்.

மற்றோர்புரம் சமையற்காரன் சாமண்ணா இரண்டொரு ரூபாய் சம்பளம் கூடுதலாகக் கேட்பதற்கு இதுதான் நல்ல சமயம் என்று எண்ணமிடலானான். லக்ஷ்மியம்மாள் தன்னைப் புகழ்ந்தவர்கள் அனைவருக்கும் அவரவர்களின் பேச்சுக்கும் அந்தஸ்திற்கும் தகுந்தபடி பதில்கூறி, மஞ்சள் குங்குமம் கொடுத்து அனுப்பி வைத்தாள்.

சற்று நேரத்தில் புருஷோத்தமராயர் வீட்டிற்கு வந்தார். பூர்வீகச் சொத்து அவருக்குத் தமது கிராமத்தில் ஏராளமாக இருந்தது. சம்பாதிக்க வேண்டிய அவசியமே இல்லை. அப்படி இருந்தும் காலத்தைக் கழிப்பது சிரமமாகத் தோன்றாமல் இருப்பதற்காகவும், முன்பு தாம் சென்னையில் வைத்திய பரீக்ஷையில் தேறியது வீண் போகாமல் இருப்பதற்காகவும் அவர் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுப் பெங்களூரில் சொந்தத்தில் ஒரு வைத்திய சாலையை ஏற்படுத்தி வெகு காலமாக அதை நிர்வகித்து வந்தார். அன்று அவர் மற்ற நாட்களைவிட சீக்கிரமே வீட்டிற்கு வந்தது, காரியம் சீக்கிரம் முடிந்துவிட்டதினால் அல்ல. அவருடைய மனதை அரித்துக்கொண்டிருந்த கவலையினால் எப்பொழு

தும்போல் மனது வைத்துக் காரியம் செய்யமுடியாமல் போனதே!

அவர் வீட்டின் அருகில் வரும்போது வீட்டினுள்ளிருந்து சிரிப்பின் பிரவாகம் பிரவகித்துக் கொண்டிருந்தது. லக்ஷ்மியம்மாள் அளவு கடந்த ஆனந்தத்தினுல் பூரித்துப்போனவளாய்க்குழந்தைகளை என்றைக்கும்விட அதிகமாகவே கொஞ்சிய வண்ணம், குழந்தைகளுடன்கூட தானும் ஒரு குழந்தைபோல் குலாவிக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில்தான் புருஷோத்தமராயர் வீட்டிற்குள் நுழைந்தார். குழந்தைகள் எல்லாம் ஒரே மூச்சில் "அண்ணு! அண்ணு! இன்றைக்கு அம்மா விளையாட்டில் கெலித்து விட்டாள் அண்ணு! நீயே கேளேன் அண்ணு! வேண்டுமாஞல்" என்று உறக்கக் கூவினுர்கள். ராயர், சந்தோஷம் உத்சாகம் எதையும் வெளிப்படுத்தாமல் "அப்படியா சந்தோஷம்!" என்ருர் வறண்ட குரலில். லக்ஷ்மியம்மாளும் "நான் 'டென்னிஸ் மாட்ச்'சில் ஜெயித்தது உங்களுக்கு அதற்குள்ளாகவே தெரிந்து விட்டதாக்கும்? அதுதான் இவ்வளவு சீக்கிரம் வீட்டிற்கு வந்து விட்டீர்கள். இவ்வளவு சீக்கிரம் யார் சொல்லி விட்டார்களோ தெரியாதே!" என்று சொல்லிச் சிரித்தாள்.

லக்ஷ்மி தான் விளையாட்டில் ஜெயித்த செய்தி பெங்களூரில் மூலைமுடுக்குகளிலெல்லாம் பரவி இருக்கும் என்று நினைத்தாளோ என்னவோ! ராயர் யந்திரத்தால் செய்த பொம்மைபோல் "எப்படியோ தெரிந்தது, சந்தோஷம்" என்று சொல்லிவிட்டுக் கூடத்திலிருந்து தன் அறைக்குச் சென்று விட்டார். அவர் பதிலில் சமாதானமில்லாமல் லக்ஷ்மியம்மாள், ராயரைப் பின் தொடர்ந்தாள். ராயர் நாற்காலியில் அமர்வதற்கு முன்பே அவள் "என் பாக்யம் அப்படி! எத்தனைப்பேர் என்னைப் புகழ்ந்தார்கள் வெற்றி பெற்றதற்கு? ஆனுல் நீங்கள் அதைப் பற்றிச் சட்டையே செய்யவில்லை போலிருக்கிறது. ஒரு வார்த்தை அதைப்பற்றிக் கேட்கவில்லை. எல்லாம் என் கிரகசாரம்" என்ருள்.

ராயர் ஒரு பெருமூச்சு விட்டு "கவலை தேங்கிய என் மனதிற்கு இதெல்லாம் ஒன்றும் பிடிக்கவில்லை லக்ஷ்மி. இவ்வளவிற்கும் சுகமாக இருப்பவர்களைப் பற்றி விசாரிக்க வேண்டியதில்லையே!" என்று சொல்லிச் சிரித்துவிட்டு "நீதான் ஜெயபேரிகை அடித்துவிட்டு வந்திருக்கிருயே! நானும் சந்தோஷம் சந்தோஷம் என்று மூன்று தடவை சொன்னேன். குழந்தைகளுடன் இரண்டுதடவை சொன்னேன். உன்னுடன் ஒரு தடவை; மூன்று தடவை சொன்னேன். பிறகு இன்னும் சந்தோஷ வார்த்தை சொல்லவில்லை என்ருல் என்ன அர்த்தம்?" என்று கேட்டார்.

லக்ஷ்மி சிரித்து விட்டு "இல்லை, டாக்டர் வேலை செய்கிறபொழுது உங்கள் நோயாளிகளின் இதயத் துடிப்பை எண்ணுவது, நாடி அடிப்பதை எண்ணுவது, இவைகளைப்போல், சந்தோஷம் சந்தோஷம் என்ற பேச்சும் எண்ணிக்கைக் கணக்காகி விட்டதுபோலிருக்கிறது. ஐயோ கடவுளே! ஊக்கம் இன்றி உற்சாகம் இன்றி சந்தோஷம், சந்தோஷம் என்று மூன்றல்ல முப்பதுதடவை சொன்னுல்தான் என்ன? புரோகிதர் ஆகாயத்தைச் சுட்டிக்காட்டி அருந்ததியைப் பார்த்தாயா என்

ருல், கலியாணப்பெண் நிலத்தைப் பார்த்த வண்ணம் "பார்த்தேன் அருந்ததியை". என்ருல் அருந்ததி நக்ஷத்திரத்தைப் பார்த்த மாதிரி ஆகுமா? நீங்களே சொல்லுங்களேன்! நீங்களும் சந்தோஷம், சந்தோஷம், சந்தோஷம் என்று மூன்று தடவை சொன்னீர்கள், சொப்பனம் கண்டு திடுக்கிட்டு விழித்துக் கொள்வதுபோல்! அப்போது மனது எங்கே இருந்ததோ! போகட்டும் இந்தப் பேச்சுக் கிடக்கிறது, இதெல்லாம் அவரவர்களின் அக்கரையை ஆசையைப் பொருத்தது. சரி இப்போது, சாப்பிட எழுந்திருங்கள். அதிருக்கட்டும்! தோடு கொண்டு வந்தீர்களா? நாளைக்கு வரலக்ஷ்மி பண்டிகையாயிற்றே! அதற்காகத்தான் கேட்டேன்" என்ருள். ராயர் சட்டைப் பையிலிருந்து, தோட்டை எடுத்துக் கொடுத்தார். லக்ஷ்மியம்மாளின் முகம் ஆனந்தத்தால் ஒரு பெரிய தாமரைப் பூப் போல் மலர்ந்தது.

லக்ஷ்மியம்மாள் சந்தோஷத்துடன் "எனக்குத் தெரியுமே? நீங்கள் தோடு வாங்கிக்கொண்டுதான் வருவீர்கள் என்று. பழைய ஜதையை விற்பதற்கு நான் ஒத்துக் கொண்டிருந்தால், அதனுல் வரும் பணத்திலிருந்து உங்கள் சுமை கொஞ்சம் இறங்கி இருக்கும்" என்ருள்.

புருஷோத்தமராயர் "உண்மை, நீ ஒத்துக்கொண்டால் இன்னுரு சங்கதியில்கூட, என் மனதிலுள்ள பாரம் பூராவும் குறைந்து விடும். ஆனுல் நீ ஒத்துக்கொள்ள வேண்டுமே!" என்ருர்.

லக்ஷ்மி சிரித்த வண்ணம் "உங்கள் மனதிற்கு என்ன பாரம் வந்து விட்டது? அது குறையும் பக்ஷத்தில் நான் ஒப்பாமல் போவேனு? அதென்ன சொல்லுங்கள் பார்ப்போம்" என்ருள்.

ராயர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு "அதுதான் நமது ரங்கு விஷயம். அவன் சேஷையாவின் வீட்டிலிருந்து இந்த ஊருக்கு வந்த பிறகு அவனை ஹாஸ்டலில்விட வேண்டுமென்று நீ பிடிவாதம் பிடிக்கிருய். அவனைவிடச் சிறியவர்கள் இரண்டொருவர் ஹாஸ்டலில் இருக்கிருர்கள் என்று கேள்விப்பட்ட பொழுது நீ சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். ஆனுல் அவர்கள் எல்லாம் வேற்றூர் வாசிகள். வேறு வழியின்றி ஹாஸ்டலில் வசிக்கிருர்கள். ரங்கு இன்னும் சிறுவன். ஒரு நாள்கூட என்னை விட்டுப் பிரிந்திருந்ததில்லை. இப்படி இருக்க, இதே ஊரில் நாம் வசிக்கும் பொழுது அவனை ஹாஸ்டலில் விட்டு வைப்பது எனக்கு அவமானம். இவ்விதம் செய்த பிறகு என்னுல் நாலுபேர் எதிரில் தலை நிமிர்ந்து நடக்க இயலாது. என் மனமே இதனுல் புண்பட்டு விட்டது. சக்களத்தி பையனை வீட்டில் வைத்துக் கொள்ளாததினுல் வரக்கூடிய நிந்தனையும் உன்னைச் சேரும்" என்ருர்.

லக்ஷ்மியம்மாள் "உங்கள் செல்வக் குமாரன் என்ன 'ராமனைப் போல் காட்டிற்கா போக வேண்டியிருக்கிறது? உங்கள் பிள்ளைக்கும், நம் குழந்தைகளுக்கும் ஒத்து வருவதில்லை. எவ்வளவோ தடவை இந்தத் தர்க்கம் நடந்திருக்கிறது.

இனி வேண்டாம். உங்கள் பிள்ளையை ஹாஸ்டலில் விட்டு விடுங்கள். இல்லாவிட்டால் எங்களை வேறு வீட்டில் வைத்துவிட்டு நீங்கள் இருவரும் கொஞ்சிக் குலாவுங்கள்" என்ருள்.

ராயர் பெருமூச்செறிந்தவாறு "லக்ஷ்மி, நீ இப்படி வித்தியாச மாகப் பேசுவது கொஞ்சம்கூட நன்ருக இல்லே. அவன் இன்னும் குழந்தை. ஒரு நாள்கூட என்னே விட்டு இருந்ததில்லே. இப்பொழுது அவனுடைய மாமா வீட்டிற்கு அவனே அனுப்பி இருப்பதே எனக்கு எப்படியோ இருக்குது. அதெல்லாம் இருக்கட்டும் சொந்த வீடு இருந்தும், அவனே ஹாஸ்டலுக்கு அனுப்ப எனக்கு அவமானமாக இருக்கிறது. இப்படி வித்தியாசமாய் நினேப்பது நல்லதல்ல" என்று வாதித்தார்.

லக்ஷ்மியம்மாளின் உள்ளம் இளகவில்லே. அவள் ரோஷத்துடன் "வித்தியாசமாய் நினேக்க வேண்டிய இடத்தில் வித்தியாசமாய் நினேக்க வேண்டியதுதான். வெளி மனிதர்களே எல்லாம் நமக்குச் சேர்ந்தவர்கள் மாதிரி நினேப்பது எப்படியோ யார் கண்டார்கள்?" என்ருள்.

ராயருக்கு ஓரளவு கோபம் வந்து விட்டது. அவர் "நான் கலியாணம் செய்து கொள்வதற்கு முன் நீயும் வேற்று மனுஷி தானே" என்ருர். லக்ஷ்மியம்மாள் அழ ஆரம்பித்தாள். துயரத்தின் வேகம் சற்று குறைந்ததும், தழதழத்த குரலில் "எது தவறு.........எது சரி.........என்ற உணர்வே உங்களுக்கு இல்லே. உங்கள் கண்ணுக்கு யாராவது புண்ணியசாலிகள், அஞ்சனம் தான் தீட்ட வேண்டும்" என்ருள்

"நான் வேண்டுவதும் அது தான்! யாராவது புண்ணியசாலிகள் உன் கண்ணுக்கும்தான் அதைத் தீட்ட வேண்டும்!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

அவர் பேச்சை முடிக்குமுன் அவருடைய நண்பர் வக்கீல் கோவிந்தராவ் வாசற் கதவண்டை வந்து "என்ன ராயரே, உன் மிஸஸ் இன்று டென்னிஸ் மாச்சில் ஜெயித்தாராம். நீ என்னடா என்ருல் அவர் கண்ணுக்கு அஞ்சனம் தீட்டப்படாதா என்கிருய். என்னவோ சீறி விழுகிருயே என்?" என்று கேட்டவாறு உள்ளே வந்தார். அவர் அறையில் நுழைந்தவுடன் லக்ஷ்மியம்மாள் அறையிலிருந்து வெளிப்பட்டாள்.

"என்ன சமர்த்துடா நீ! இன்று அவரை அழவைத்திருக்கிருயே. வெடிந்தால் பண்டிகை. அவர் அழுது கொண்டிருந்த மாதிரி இருந்ததே. அது என்ன அழுகையா, இல்லே ஆனந்த பாஷ்பமா?" என்ருர் கோவிந்தராவ்.

ராயர் அருவருப்புடன் "குடித்தனம் என்ருல் ஏதாவது இருந்து தானே தீரும்?" என்ருர்.

"அதென்னவோ, அவருக்கு அஞ்சனம் தீட்ட வேண்டும், யாராவது புண்ணியசாலிகள் வர வேண்டும் என்று என்னவெல்லாமோ இறைந்து சொல்லிக் கொண்டிருந்தாயே அதென்ன?" என்ருர்.

புருஷோத்தமராவ் அச்சமயம் உண்மையைச் சொல்வது உசிதம் அல்ல என்று உணர்ந்து, ஒன்றும் இல்லே; இவளுக்கு இந்த டென்னீஸ் கின்னீஸ் எல்லாம் ஆடுவதில் உயிர். ஆனல் எனக்கு அது சம்மதம் இல்லே. இந்த மதிமயக்கம் ஏன் என்று எனக்குத் தோன்றிற்று. அவள் கண்ணிற்கு யாராவது அஞ்சனம் தீட்டப்படாதா என்றேன்" என்ருர்.

கோவிந்தராவ் கலகலவென்று சிரித்தவாறே "இது ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி அப்பா. அஞ்

சனம் தீட்ட வேண்டியது அவருடைய கண்ணுக்கு இல்லை; உன் கண்ணுக்குத்தான், தெரிந்ததாப்பா! உலகமே நாகரிகத்தில் வாயுவேக மனோவேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. பெண்கள் தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஸ்தானங்களைப் பெறுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி இருக்கையில் நீ வந்து உன் வீட்டுக்காரியைச் சமையல் அறையில் ஊறுகாய் போட்டுக்கொண்டு உட்கார்ந்திரு என்று இம்சிக்கிறாயே. என் வீட்டுக்காரி டென்னிஸ் ஆடினால் போதுமென்று நான் பாடுபடுகிறேன். அவள் ஒரு சங்கீதப் பித்துக்குள்ளி.

அவள் 'உங்கள் கண்ணுக்கு அஞ்சனம்தான் தீட்ட வேண்டும். நான் டென்னிஸ் ஆடிவிட்டு வந்தால் உங்களுக்கு என்ன பெருமையோ! நாம் இருவரும் சேர்ந்து காயன சமாஜத்து சங்கீதக் கச்சேரிகளுக்காவது போய் வந்தால் கலா போஷணையாவது ஆகும். என்னை மாத்திரம் அனுப்பிவிட்டு நீங்கள் நின்று விடுகிறீர்கள்! உங்கள் கண்ணுக்கு யாராவது அஞ்சனம் தீட்டப்படாதா' என்கிறாள். நல்ல உலகமப்பா இது. மண்கால் ஜலத்திற்கு ஆகாது. மரக்கால் தீக்காகாது. உன் வீட்டுக்காரி டென்னிஸில் வெற்றிபெற்றது எனக்கென்னவோ பரம சந்தோஷம். அதை அவருக்குத் தெரிவித்துவிடு அப்பா. இனிமேலாவது புத்திசாலியாக இருந்துகொண்டு அவருடைய டென்னிஸ் விளையாட்டுக்கு ஊக்கம் அளி. அவர் இன்னும் பெரிய பெரிய மாட்சுகளில் ஜெயபேரிகை அடிக்கட்டும். அவருடைய டென்னிஸ் விளையாட்டு ஜயபேரிகையின் மூலம் உனக்குண்டாகும் கௌரவத்தைப் போல் உன் கொய்னா சீசாக்களின் மூலம் கௌரவம் கிட்டாது. நான் மைசூருக்குப் போக வேண்டும், நேரமாகி விட்டது. உனக்கொரு அஞ்சன (மை)ச்சிமிழ் வாங்கி வரட்டுமா?'' என்று சிரித்தபடி கேட்டுக் கொண்டே புறப்பட்டுப் போய் விட்டார். ராயர் 'பூதத்தைப்போல் வந்து தூமகேதுவைப்போல் போய் விட்டான். எவ்வளவு குஷியாக இருக்கிறான்! இருந்தால் இப்படி இருக்க வேண்டும். இந்தப் பாக்கியம் எனக்கு இல்லையே' என்று எண்ணினார்.

★

அன்று இரவு வீட்டில் எல்லாரும் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாலும், புருஷோத்தமராயர் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தார் படுக்கையில். மனதில் என்னவோ யோசனைகளும், கவலைகளும், அவரை அலக்கழித்தன. தன்னைவிட வயதானவர்கள் எவ்வளவோ பேர் இரண்டாம் கலியாணம் செய்து கொண்டு சுகமாகவும் சந்தோஷமாகவும் இருந்தாலும் தமக்கு மாத்திரம் அந்த பாக்கியம் இல்லாமல் போய் விட்டதே என்று சங்கடம். பணம் இருப்பவர்களுக்குச் சுகம் உண்டு என்பது வெறும் பகற்கனவு என்று தர்க்கம். லக்ஷ்மியம்மாளுக்கு ரங்குவின் மீதிருந்த துவேஷ புத்திக்காக ஆத்திரம். அவ்வளவு வித்தியாசம் பாராட்டுபவள், தான் வீட்டில் இல்லாத பொழுது அவனை இன்னும் எத்தனை பாடு படுத்திக் கொண்டிருந்தாளோ, என்ற சந்தேகம். அவரது மூத்த மனைவி சாவதற்கு முந்திய நாள் ரங்குவைத் தன்னிடத்தில் ஒப்படைத்து 'குழந்தையைக் காப்

பாற்றுங்கள். இருவரும் சுக மாக இருங்கள். எனக்கு லபிதம் இல்லை' என்று கண்ணீர் உதிர்த் ததுபற்றிய நினைவு அலைகளின் மோதல். இத்தனையும் ஒன்றுகூடி புருஷோத்தமராயரின் இதயத் தையே முறுக்கிப் பிழிய ஆரம்பித் தன.

எவ்வளவு முயன்றும் தூக்கம் வரவில்லை. கடியாரம் மணி அடிக் கும் பொழுதெல்லாம் 'இனித் தூங்கிவிட வேண்டும்' என்று தீர்மானம் செய்து கொள்வார். மறுக்ஷணம் வித விதமான சிந்தனை அலைகள் மோதி அவரது தீர்மா னம், மனக்கோட்டையைச் சிதற அடித்துவிடும். கடைசியில் விடி யற்காலம் மூன்று மணிசுமாருக்கு சற்று தூக்கம் வந்தது. ஐந்து மணிக்கெல்லாம் விழிப்பு உண்டா யிற்று. அவ்வளவு சீக்கிரம் என் றும் எழுந்திருக்காதவர், காலை வேளையில் என்றுமே காற்று வாங் கப் போகாதவர், பசவங் குடியி லிருந்து லால்பாக் வரைக்கும் சென்று, அங்கிருந்து முன்னுக் கும் சரசரவென்று போக ஆரம் பித்தார். உடல் என்னவோ முன் னால் போய்க் கொண்டிருந்தது. ஆனால் மனது கவலையுற்றிருந்த தால், தான் எவ்வளவு வேகமாக நடந்து கொண்டிருக்கிறோம் என் றுவது அல்லது தான் எவ்வளவு தூரம் நடந்து வந்து விட்டோம் என்றுவது அவர் மனம் சிந்திக்க வில்லை.

ராயர் பைத்தியக்கார ஆஸ்பத் திரி அருகில் வந்த பொழுது அந்தக் கட்டிடத்தையே உற்றுப் பார்த் துக் கொண்டு, 'நானும் ஒருநாள் இங்கே வந்து இருக்க வேண்டி வருமோ என்னவோ! அந்த நன் னாள் எவ்வளவு சீக்கிரம் வரு கிறதோ அவ்வளவுக்கும் நன்மை. மூளை கெட்டுப்போன பிறகாவது மனம் நிம்மதியாய் இருக்கும்' என்று எண்ணிக்கொண்டார். பின்னால் நடந்தவைகளை ஒவ்வொன் ருய் நினைக்கையில் ஒரு நாள் தான் சும்மா பேச வைப்பதற்காக "என்னடா ரங்கு! இன்று ரொம்ப சீக்கிரம் எழுந்திருந்து விட்டாயே" என்றதற்கு அவன் "தப்பிதம், தப்பிதம் அப்பா" என்று பரி தாபகரமாகச் சொன்னதும், அத ற்குத்தான் சிரித்துக் கொண்டே "தப்பிதம், தப்பிதம் என்றால் என் னடா?" என்று கேட்டதற்கு அவன் அவன் இன்னும் பரிதாப கரமாக "இல்லை, இல்லை அப்பா, இனிமேல் இப்படிச் செய்வதே இல்லை!" என்று பதில் அளித்த தற்கும் காரணம் என்னவென்பது ராயரின் மனதிற்கு நன்றாகப் புரிந்தது. ராயர் அப்பொழுது "என்னைவிடப் பைத்தியம் இன் னொருவன் உண்டா? நான் இந் தக் கஷ்டத்தில் இருப்பதற்கு இப் பொழுதே தகுதிதான். வீட்டில் இம்சை அதிகரித்ததால், அந்தக் குழந்தை வார்த்தைக் கொருதரம் "தப்பிதம்" வார்த்தைக் கொரு தரம் "இனி ஒன்றும் தவறு செய்ய மாட்டேன்" என்று சொல்லும் நிலைமைக்கு வந்தும், "அது குழந்தையின் பயந்த சுபா வம்" என்று எண்ணி இருந்த நான் ஒரு பித்தன்தான்! தான் செய்வதெல்லாம் தவறுதான் என்று எண்ணும் நிலைமைக்கு அவன் வந்ததின் மூலகாரணத்தை ஊகித்து அறியாமல் போ னேன்.

வெளுத்ததெல்லாம் பால் என்று நம்புகிறவர்களின் கதி எல்லாம் இப்படித்தான் என்று எண்ணிக் கொண்டு, லக்ஷமியம்மாளின்மேல் ஏற்பட்ட ஆத்திரத்தால், நறநற வென்று பல்லைக் கடித்தார்.

சற்று நேரத்தில் முன்னிலும் அதிக வேகமாக நடக்கலானார். மூன்றே நிமிஷத்தில் இரண்டு பர்லாங்கு தூரம் நடந்தார். வலது புரம் மைல் கல் தோன்றிற்று. அங்கிருந்து முன்னுக்கு இரண்டு பர்லாங் தூரம் நடந்தார். அந்த வேளைக்கு ஷர்ட்டின் இடது தோள்ப்புரம் நுனியில் என்னவோ தொங்குவதுபோல் இருந்தது. ராயர் பார்த்துக் கொண்டார். தங்கச் சங்கிலியில் பிணைத்திருந்த இரண்டு பித்தான்களில் ஒன்று, பித்தான் ஓட்டையிலிருந்து கழன்று வந்து, ஷர்ட்டில் தொங்கிக் கொண்டிருந்தது. ராயர் 'இதுகூடவா என்னிடம் ஒத்துழைக்காமல் கழன்று வந்து விட்டது!' என்று எண்ணியவாறு முன்னால் நடக்க ஆரம்பித்தார்.

★

தொலைவிலிருந்த ஒரு கிராமத்திலிருந்து இரண்டு பெண்கள் ராயருக்கு எதிர்ப்புறமாக வந்து கொண்டிருந்தனர். ஒருவள் தலைமேல் அழகிய ஜவந்திப் பூக்கள் நிறைந்த கூடை! மற்றொருவள் தலைமீது கொள்ளுக்காய் நிறைந்த கூடை. பெங்களூருக்குப் போய் விற்று விட்டு வருவதற்காக அவர்கள் அவைகளைக் கொண்டுபோய்க் கொண்டிருந்தார்கள். அவ்விருவரில் ஒருவளின் வயது சுமார் நாற்பது இருக்கலாம். மற்றொருவளுக்கு இருபத்து இரண்டு இருக்கலாம். மாநிறம், சிவந்த முகம். அந்த முகத்தில் பிரகாசிக்கும் விசாலமான கண்கள். கடைந்தெடுத்த பதுமைபோன்ற வனப்பு வாய்ந்த தேகக்கட்டு. இவ்வாறு காட்சி அளித்த வெங்கடம்மாளைக் கண்டு புருஷோத்தம ராயர், தனது அப்பொழுதைய நிலைமையிலும், கணப்பொழுது நின்று அவளைப் பாதாதிகேசம் வரைக்கும் பார்த்து "எவ்வளவு அழகு! இவள் இன்னும் கொஞ்சம் கருப்பாக இருந்திருந்தால், கோயிலில் திறமை வாய்ந்த சிற்பியால் செதுக்கப் பட்டு வைத்த விக்கிரஹத்திற்கு உயிர் வந்து அது தான் நடந்து வருகிறதோ என்பது போல் இருக்கும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு முன்னால் போனார். இரண்டொரு பர்லாங்கு ரஸ்தாவின் ஓரமாகவே போனவர், பித்தான் சங்கிலியுடன் கீழே விழுந்து போயிருப்பதை உணர்ந்தார் ராயர். "நான் பைத்தியக்காரன் என்பதற்கு இரண்டாவது நிதர்சனம். தொங்கிக் கொண்டிருந்த சங்கிலியைக் கழற்றி வைத்துவிடவேண்டாமா? ஐயோ!" என்று திரும்பி, பித்தானைத் தேடிக் கொண்டே நடந்தார்.

புருஷோத்தம ராயர் நான்கு தெருவுகள் கூடும் இடத்தை நெருங்குகையில், அந்தப் பெண்கள் இருவரும் கூடைகளைச் சுமைதாங்கி மீது இறக்கி வைத்துவிட்டு கிழக்கை நோக்கிய வண்ணம் நின்றிருந்தனர். வெங்கடம்மாள் வெகு உற்சாகத்துடன் மெய் மறந்து "அடி அம்மா! பாருடீ ஹனுமக்கா! ஒவ்வொரு மோடமும் ஒரு அழகு! செக்கச் செவேருன்னு ரத்தமாட்டமா இருந்த மோடங்க, இப்போ தங்கத்திலே செஞ்ச பருத்திகளைப்போல் ஆகாயத்திலே மிதக்குது பாரு. எப்படி மின்னுது தேவலோகத்துத் தங்கப் பருத்திடீ! அடியம்மா இங்கத்திய தங்கத்துக்கு அந்த காந்தி கிடையாது. அந்தத் தங்கப் பருத்தியில் நூத்த நூல் பொடவையை ஒருதரமாவது உடுத்த முடிஞ்சா ஏழு ஜன்மத்

துக் கஷ்டத்தையும் பொருத்துக் கொள்ளலாம்'' என்ருள்.

ராயர் அந்த வார்த்தைகளைச் செவியுற்று "நகை நட்டுக்கும் தங்கம் வெள்ளிக்கும், ஆசைப் படுவது; கைக்கு அகப்பட்டவர் களை இம்சிப்பது, இது இரண்டும் தான், பெண்களின் குணங்களோ என்னவோ'' என்று எண்ணிக் கொண்டார். பிறகு வெங்க டம்மாள் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே, செல்வ ளைதக் கண்டு, தங்கப் பித்தான் கள் அவளுக்குக் கிடைத்திருக்கும் அதன் உளவு எங்கே தனக்குத் தெரிந்து விடுமோ என்று அவள் பதைபதைத்துக் கொண்டு திரும் பிப் பார்க்கிருளோ'' என்று ராய ரின் மனதிற்குப் பட்டது.

ராயர் வெங்கடம்மாளின் அருகில் வந்தும் அவள் அதைக் கவ னியாமல் மோடங்களைப் பார்த் துக் கொண்டிருக்கும் விதத்தைக் கண்டு பணத்தால்தான் சுகம் என்று எண்ணும் பைத்தியக்காரர் கள் எவ்வளவோ பேர் என்று நினைத்துக் கொண்டார். சிறுவய தில் எப்பொழுதோ படித்திருந்த காளிதாச கவியின் கவிதை நினை வுக்கு வரவே, அதன் (இயற்கை யின்) சொகுசை தூய உள்ளத் துடன் அவர் உண்மையாக அனுபவித்தார். ஆனாலும் மன திற்கு ஒன்றும் அமைதி ஏற்பட வில்லை.

ராயர் வெங்கடம்மாளை நோக்கி "உன் பெயர் என்னம்மா?'' என்று கேட்டார். "என் பெயரைப் பற்றி உமக்கு என்ன சுவாமி கிடக்கிறது? என் பெயர் வெங்கடம்மாள்.'' என்று பதில் அளித்தாள். ராயர் "வெங்க டம்மா, என் தங்கப் பித்தானைக் கொடுத்துவிடம்மா.'' என்றதும் புன் முறுவலுடன் வெங்கடம்மா "நல்ல பெரிய மனிதர் சுவாமீ நீங் ள்! உங்கள் பித்தான் என்னிடம், இருக்கிறதென்று கனவு கண்டீர் களா என்ன?'' என்ருள். ராயர் அன்று சுலபத்தில் கோபித்துக் கொள்ளும் நிலைமையில் இருந்தார். அவர் நிஜமாகவே கோபித்துக் கொண்டு "இத்தத் திருட்டு விளை யாட்டையெல்லாம் நான் அறி வேன். உன் திருட்டுத் தனம் எங்கே தெரிந்து விடுமோ என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தாய். தங்கப் பித் தான் அது. நல்ல வார்த்தையில் கொடுத்து விடு'' என்று இறைந் தார். வெங்கடம்மாள் சிரித்துக் கொண்டே "நான் மோடத்தின் அழகைப் பார்ப்பதற்காக, திரும் பித் திரும்பி நின்று நின்று வந்து கொண்டிருந்தேன். அங்கே பாருங்கள் சுவாமி! சூரிய பக வான் வெளிக்கிளம்ப இருக்கிருன். கீழே கருத்த மேகக் கூட்டங்கள். சிகப்புச் சாயத்தில் தோய்த்து எடுத்த மாதிரி பகவான் காண்கி ருன், ஆகாய தேவியின் குங்குமப் பொட்டுப் போல்'' என்று சூரிய னுக்குக் கை கூப்பினுள். ராயர் மெய்மறந்து நிமிஷ காலம் நின்று பிறகு "வெங்கடம்மா உன் பேச் சே விசித்திரம்'' என்ருர். வெங் கடம்மாள் "கேளுடீ கேள். நான் என்ன தெலுங்கிலேயா பேசினேன்? ஹனுமக்கா.''

"இவள் போக்கே விசித்திரம் சுவாமி. பிறத்தியார் குழந்தையை எடுத்து வளர்த்து வருகிருளே'' என்ருள் ஹனுமக்கா.

ராயர். "அதெல்லாம் எனக்கு எதற்கு? வெங்கடம்மா, என் பித் தான் வழியில் விழுந்து விட்டது. உனக்குக் கிடைத்திருக்கும். சும்

மா கொடுத்து விடு. வார்த்தையை வளர்ப்பதற்கு எனக்கு மனது சரியாக இல்லை......" என்றார். வெங்கடம்மாள் ஏதோ பேசலானாள். அவள் தன்னைப் பரிகாசம் செய்கிறாள் என்று பாவித்தவராய் ராயர் "என்ன சொன்னாய்?" என்று கர்ஜித்தார். "இதேன் இப்படிக் கோபிக்கிறீர் சுவாமீ. உங்கள் பித்தான் என் கைக்குக் கிடைத்திருக்கு. ஆனால் ஒன்று ...... இல்லை இரண்டு, நியாயம் கேளுங்கள்; அதன் பிறகு அந்தப் பித்தானைக் கொடுக்கிறேன். ஆனால் நீங்கள் மாத்திரம் மிரட்டினாலும், உருட்டினாலும், திக்கு முக்காடினாலும், பருப்பு வேகாது. இல்லை சுவாமீ. அந்த ஹனுமக்கா நான் பிறத்தியார் குழந்தையை அழைத்து வந்து, வளர்த்துகிறேன் என்ற காரணத்துக்காக என்னை விசித்திரப் பேர்வழி என்கிறாளே. பிளேக்கில் பூஜாரி ஐயா போயிட்டார். ஆஸ்தி பாஸ்தி இல்லை. கூலிவேலை செய்து பிள்ளையை வளர்த்துக் கொண்டிருந்தான். தாயில்லாக் குழந்தை பாவம். வீடு வாசல் இல்லாமல் கதறு கையில் ஒருவராவது அழைத்துக் கொள்ளவில்லை. அந்தக் குழந்தையை நான் ஏன் வளர்த்தப் படாது? எங்கள் வீட்டுக் குழந்தையைப் போல் வளர்க்கிறேன். இதில் விசித்திரம் என்ன வந்தது சுவாமீ?" என்றாள்.

தான் இருப்பது பூலோகம் தானா என்று ராயருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. அத்தகைய 'விசித்திரமான பெண்களும் இருக்கலாம் என்று யாராவது ஆணை இட்டுச் சொன்னாலும் அவர் நம்ப மாட்டார். ராயர் வியந்து, "உன் குழந்தைகளா?" என்றார். "இருக்கிறார்கள் சுவாமீ, ராம லக்ஷ்மணர்களைப்போல்! பெரியவனுக்குப் பதிமூன்று வயது. சின்னவனுக்குப் பதினொறு வயது. ஹனுமக்கா பிறத்தியார் குழந்தை என்றாளே அந்த பையன் ரொம்ப சீக்காய் இருந்தான். பிழைத்ததே அதிசயம். எங்கள் பக்கத்துக் கிராம வைத்தியர் மருந்து கொடுத்து வாசி செய்தார். கை வளையை விற்று அவருக்குப் பணம் கொடுத்தேன். அதொரு பெரிய கதை சுவாமி" என்றாள். ராயரின் மனம் மகிழ்ந்தது, "நீ ரொம்ப நல்லவள் வெங்கடம்மா. எனக்கு உன்னைப் போல் ஒரு தங்கை இருக்கப் படாதா, என்றிருக்கிறது" என்றார். வெங்கடம்மாள் அழுதே விட்டாள். அதன் பிறகு "எனக்கும் அண்ணன் கிடையாது. உடன் பிறந்தவர்கள் கிடையாது. எல்லாருக்கும் அண்ணா தம்பி அக்கா தங்கை எல்லாம் இருக்கிறார்கள். எனக்கு இல்லை" என்றாள். ராயரும் கண்ணீர் ததும்ப "வளையின் கதை என்ன, வெங்கடம்மா?" என்று கேட்டார்!

வெங்கடம்மாள் "அண்ணா! இந்தப் பையன் காயலாவாகப் படுத்து விட்டான். எங்களூரில் ஆஸ்பத்திரி இல்லை. கடுகு போட்டால் வெடிக்கும்படியானஜுரம். அன்றைக்குத் திங்கட்கிழமை. யாரும் வண்டி கொடுக்க மாட்டேன் என்றார்கள். எங்க வீட்டில் வண்டி இல்லை. எங்க எஜமானர் கால் பிசகியிருந்ததால் படுத்திருந்தார். மருந்து கொடுப்பதற்காக குழந்தையை எடுத்துக் கொண்டு பெங்களூர் டவுனுக்குப் புறப்பட்டேன். அங்கங்கே இளைப்பாறிக் கொண்டு போனாலும் போதுமென்றாகி விட்டது. புறப்படும் அவசரத்தில் பணம் கொண்டுவர மறந்து விட்டேன். வளையை வைத்துக் கொண்டு மருந்து

கொடுங்கள்சுவாமீ, என்று கெஞ்சினேன். வைத்தியர் ஒப்பவில்லை. "குழந்தை படுத்துக்கொண்டிருக்கட்டும். வளையை விற்றுவிட்டுப் பணம் கொண்டு வருகிறேன்." என்றேன். அந்த மகராஜன் அதற்கும் ஒத்துக் கொள்ளவில்லை.

'குழந்தையையும் கூட எடுத்துப் போ' என்றான். வெடிக்கிற வெய்யில். குழந்தையையும் எடுத்து கொண்டு இன்னும் இரண்டு ஷாப்புகளுக்குச் சென்று பார்த்தேன். வைத்தியர்கள் பூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போய் விட்டார்கள். சர்க்கார் ஆஸ்பத்திரிகளும் அந்த வேளையில் திறந்திருக்கவில்லை. எனக்கு ரொம்பவும் கோபம் வந்து விட்டது. ஒரு வண்டி பேசிக்கொண்டு குழந்தையுடன் நாட்டு வைத்தியரின் வீட்டுக்குப் போனேன். எங்களூருக்கு அடுத்த கிராமத்துக்குப் போனேன். அவர் பையனை ஜாக்கிரதையுடனும் தயவுடனும் பார்த்தார். பையனின் கண்ணுக்கு அஞ்சனம் தடவி தலைவலியைக் குறைய வைத்து கஷாயம் செய்து கொடுப்பதற்கான சாமான்களைத் தந்து, மாத்திரையும் தந்தார். நாட்டை சிருஷ்டித்த கடவுள் ரோகத்துக்கு மூலிகையும் சிருஷ்டிக்க வில்லையா? சீமை மருந்தே வேண்டாம் என்று எனக்கு ஆயிற்று. எங்கள் தெய்வத்துக்கு வேண்டிக் கொண்டேன். வண்டியில் வீட்டுக்குப் போனேன். வாடகையும் கொடுத்தேன். பையனுக்குகுணம் ஏற்பட்ட பிறகு வளையை விற்று நாட்டு வைத்தியருக்குப் பணம் கொடுத்தேன். அண்ணா! உங்களைப் போன்ற நல்லவர்கள் வைத்தியர்கள் ஆகவேண்டும். அந்த டாக்டரைப் போன்றவர்கள் வேண்டாம்" என்றாள்.

ராயர் தானும் டாக்டர் தான் என்பதை அறிவித்துக் கொள்ளாமல் "வெங்கடம்மா! எல்லா டாக்டர்களும் அப்படி இருக்க மாட்டார்கள் அம்மா" என்றார். வெங்கடம்மாள், "அது எனக்குத் தெரியும். இந்த ஹனுமக்கா கேட்கிறாள்: சம்பாதிப்பதற்காக உட்கார்ந்திருப்பவர் (டாக்டர்) வேறென்ன செய்ய முடியும் என்றும், முன்பின் அறியாத வேற்று மனிதர்களுக்கு இடம் ஏன் கொடுக்க வேண்டும் என்றும்? நேற்று......... இல்லை முந்தாம் நாள் மழையில் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு ஒரு பெண் வந்தாள். யாரானால் என்ன, அதுவும் ஒரு ஜீவன்தானே என்று நான் கூழுக்காய்ச்சி ஊத்தவில்லையா? சம்பாதனைக்காக வளர்க்கப்படும் இந்தப் பொன் மலர்களைக் கூட, ஆசைப் பட்டவர்களுக்கு நானே தொடுத்து எவ்வளவோ தடவை சூட்டவில்லையா?" என்றாள்.

ராயர் "வெங்கடம்மா! அதென்னவோ நியாயம் கேட்க வேண்டும் என்றாயே, அதென்ன நியாயம்?" என்றார். வெங்கடம்மாள், "சொல்கிறேன், அண்ணா! எனக்குத் தோன்றுகிறது, நாட்டு வைத்தியர் எங்கள் குழந்தையின் கண்ணுக்கு அஞ்சனம் போட்ட மாதிரி, கடவுள் பட்டண வாசிகள், கிராம வாசிகள் எல்லாருக்கும் அஞ்சனம் தீட்டி நரமனிதர்கள் எல்லாரும் ஒரே வீட்டு மக்கள் போல் செய்யப்படாதா என்று" என்றாள். ராயர் "நான் அவசரப் பட்டு விட்டேன், தப்பிதம் வெங்கடம்மா" என்றார். வெங்கடம்மாள் "அண்ணா, அண்ணா, உங்கள் புண்ணியம், அப்படிச் சொல்லப்படாது. நான் எந்த மாத்திரம்? நீங்கள் பெரிய

வர், தப்பிதம் என்று சொல்லப் படாது. என்னுடையது தான் தவறு. இனி இன்னொரு நியாயம். கேளுங்கள், அண்ணு! எங்க பசங் கள் இருவரும் பெரிய விஷமப் பயல்கள். சதா சண்டை அடிதடி. நான் சொன்னேன்'' நீங்கள் ராமலக்ஷ்மணரைப் போல் பிரியமாக இருக்க வேண்டும். நவ ராத்திரி பண்டிகைக்குப் போய் மகாராஜாவைப் பார்த்து நமஸ் கரித்து வரலாம் என்று. அவர் களிருவரும் சண்டையே பிடிக்கா மல் அன்னியோன்னியமாக இருக் கிருர்கள். நான் இதற்குள்ளா கவே பூ, பழம், கறிகாய் எல்லாம் விற்றுப் பணம் சேர்த்து வருகி றேன். பணம் இன்னும் கொஞ் சம் சேர வேண்டும். எங்க யஜ மானர், 'இந்தத் தடவை தசரா; வுக்கு வேண்டாம்; என் கடனை ஒழிப்பதற்கு அந்தப் பணத்தைக் கொடு' என்கிருர், திட்டுகிருர். நான் வார்த்தை தவறலாமா அண்ணு?'' என்ருள்.

ராயர் மகிழ்வுடன் "இல்லே வெங்கடம்மா, வார்த்தை பிறழா மல் குழந்தைகளே அழைத்துக் கொண்டு போ. பணத்தைக் கட னுக்குக் கொடுக்காதே'' என் ருர். வெங்கடம்மாள் "அது தான் சரி; நான் சொல்வதும் அது தான். என் கண்மணிகளே ரொம்ப அருமையாக வளர்த்திருக் கிறேன். என் யஜமானர் எங்கே வருத்தப்படுவாரோ என்று பயம். அந்தப் பயத்தை விட அவைகளின் மீதுள்ள பிரியமே அதிகம் எனக்கு. உங்களிடம் நான் பொய் சொல்ல மாட்டேன் என்ருள்.

குழந்தை ரங்குவின் தாயார் பிழைத்திருந்தால் அவனையும் சரி வரப் பராமரித்திருப்பாள் என்று ராயர் எண்ணியவராய் "வெங்க டம்மா! பெற்ற தாய்மார்கள் அப்படித்தான் இருக்க வேண்டு மம்மா. நம் குழந்தைகள் இல்லே. கடவுளின் குழந்தைகள் என்று பாவித்து பிரியமாக வளர்ப்பதே தர்மம்'' என்ருர்.

வெங்கடம்மாள் "அவைகள் ரெண்டும் தேவலோகக் குழந்தை கள் தான் அண்ணு. நான் அரு மையாக வளர்த்து வருகிறேன். சொர்க்கத்திலும் தேவதைகள் — பேஷ் என்று சொல்லும்படி வளர்க்க வேண்டுமென்று ஆசை. அவைகள் இரண்டும் என் சக்க ளத்தியின் குழந்தைகள். தாயில் லாக் குழந்தைகளே நான் சொந்தத் தாயார் போல் இருந்து, வளர்க்க வேண்டாமா அண்ணு?'' என் ருள்.

புருஷோத்தம ராயர் பதில் பேச வில்லே. ஆனுல் அவர் கண்களி லிருந்து இரண்டு துளி வெப்பமான கண்ணீர், அவர் கன்னத்தில் வடிந் தது!

★

"கலைஞன் சிருஷ்டிக்கிருன்; வாழ்வு அதைக் 'காப்பி' யடிக்கிறது! காப்பியடித்துத் தன் உருவைச் சமன் படுத்திக் கொள்ளுகிறது, ஒரு பிரசுர கர்த்தரைப் போல!''

நடிகை

கோமதி சுவாமிநாதன்

கிருஷ்ணன் தன்னுடைய லக்ஷியம் என்ற விதைக்கு, நல்ல உரமிட்டிருந்தான். நன்றாகத் தளிர்த்து முளைத்த செடி மொட்டுக் கட்டியது. அந்த மொட்டுகள் மலர்ந்து மனோகரமான வாசனையை அள்ளி வீசும் என்று அவன் காத்திருந்த போதுதான், திடீரென்று அந்தச் செடி வேறுடன் கீழே சாய்ந்து விட்டது. இப்போதெல்லாம் அவன் பழைய கிருஷ்ணன் அல்ல. லக்ஷியவாதியல்ல. வயிற்றுப் பிழைப்பிற்காக அவன் காரியவாதியாக மாறியிருந்தான்.

கையிலிருந்த சொற்ப துகையுடன் சாதாரண ஹோட்டல் ஒன்றில் ஓர் அரையை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். சிந்தனைக்கு வேகம் கொடுத்து ஓர் எழுத்தாளனாக மாறினான். அவன் எழுத்தில் நல்ல துடிதுடிப்பு இருந்தது. லக்ஷியம் த்வனித்தது. அவனுடைய காதற்கதைகள் அனேக பத்திரிகைகளில் இடம் பெற்றன. "கண்ணன்" என்னும் புனை பெயரில் பதுங்கித்தான் எழுதி வந்தான். தான் எழுதுவதெல்லாம் ஓர் போலி உணர்ச்சியின் எதிரொலிதான். வாழ்வில் காதலுக்கு இடம் இல்லை என்று அடிக்கடி நினைத்துக் கொள்வான். ஆனாலும் அவன் பேனா காதல் பாதையில்தான் சென்றது.

கூடிய சீக்கிரமே எழுத்தாளர்களுக்கு இயற்கையான வறுமைப் பிணி கிருஷ்ணனைப் பீடித்தது. அவன் கதைகளின் புகழ் எவ்வளவு தூரம் அதிகமானதோ அதே மாதிரி அவன் அனுபவித்த வறுமையின் கொடுமையும் அதிகமானது. நிலைமை மிக மோசமாகப்போய், அடுத்த வேளைக் காப்பிக்கு ஒரு அணா கையில் இல்லை என்று தெரிந்த போது அவன் மனம் விரக்தியடைந்து விட்டது. துண்டை உதறிப் போட்டுக் கொண்டு சமுத்திரமணலை நோக்கி நடந்தான்.

"'மிலிடரி லாரி, ஒரு யமன்' என்று பழிக்கின்றீர்களே. அதனால் கூட ஒருவனுடைய பசியை ஆற்ற முடியும்" என்று சொல்வது போல், பெருமிதத்துடன் ஒரு பெரிய மிலிடரி லாரி சிந்தனைப் புயலில் சிக்கி, ரஸ்தா ஓரத்தில் மெய்மறந்து நடந்து கொண்டிருந்த கிருஷ்ணனைப் போய் மோதியது. அந்த லாரியை ஓட்டிக்கொண்டுபோன ஓர் இந்திய

சிப்பாய், சற்று கருணைகொண்டு கிருஷ்ணனை உடனே ஜெனரல் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விட்டு விட்டு, தன் காரியத்தைப் பார்க்கப் போய்விட்டான்.

தனக்கு அடுத்த வேளை, அரைக் கப் காப்பிக்கு பதிலாக ஆஸ்பத் திரியில் ரொட்டியும், பாலும் கிடைக்கு மென்று, கிருஷ்ணன் கனவிற் கூட கருதியிருக்க மாட் டான். ஆனல் நினைப்பிற்கும் நடப்பிற்கும் இடை வெளியில் எவ்வளவோ தூரம் இருக்கின் றதே. அவனுக்கு அவ்வளவு பிர மாதமான அடிபடவில்லை. ஆனல், அவன் முகத்தின் இடதுபக்கம் பூராவும், தரையில் உராய்ந்து, காய மடைந்து நிரந்தர கோரமாய் விட் டது. ஆஸ்பத்திரிப் படுக்கையில் அவன் ஒருமாதம் இருக்கவேண் டும் என்று சொல்லிவிட்டார்கள்.

அந்த சமயத்தில்தான் அவ னுக்கு பிரபல சினிமா டைரக்டர் சூரிய பாபுவின் சிநேகம் கிடைத் தது. ஒரு ஆஸ்பத்திரிக் காக்ஷியை இயற்கையாகவே எடுக்க வேண் டும் என்று வந்த அவர் கிருஷ் ணனை ஓர் எழுத்தாளன் என்று தெரிந்து கொண்டார். அவன் மேல் அவருக்கு ஓர் வித தனி அன்பு ஏற்பட்டது. "மிஸ்டர் கிருஷ்ணன்! நீங்கள் ஆஸ்பத்திரியி லிருந்து வெளியே வந்ததும் என் கூடவே இருங்கள். சினிமாவிற்கு வசனம் எழுதிக்கொடுக்க நான் உங்களைத் தகுந்த சம்பளத்தில் வைத்துக் கொள்கிறேன்" என் ருர்.

கிருஷ்ணனின் ஆனந்தம் கரை புரண்டோடியது. ஆனல் அவன் சற்று யோசித்தான். மிலிட்டரி லாரி அவனுக்கு நல்ல அதிர்ஷ்டத் தைத்தான் கொடுத்தது. ஆனல் அதற்குப்பதிலாக அவன் அழகை – சௌந்தர்யத்தை – அபகரித்துக் கொண்டுவிட்டது. அவன் முகத் தில் ஏற்பட்ட காயங்கள் என் றைக்கும் அழியாத சின்னங்கள் ஆகிவிட்டன. 'அந்தச் சின்னங்க ளுடன், அழகிய சினிமா நக்ஷத் திரங்கள் முன்னல், தான் வசன கர்த்தா என்ற ஹோதாவில் போய் நின்ருல், ஏளனத்திற்கு இடமா கும்' என்றெல்லாம் அவன் சிந்தித் தான். கடைசியாக "மிஸ்டர் சூரியபாபு! உங்கள் உதவிக்கு மிக்க வந்தனம். ஆனல் ஓர் உடன் படிக்கைமேல், நான் உங்கள் உத வியை ஏற்றுக் கொள்கிறேன். புனைபெயரின் கீழ் வசனம் எழு தப்போகும் நான், ஒரு நாளும் செட்டிற்கு வரமாட்டேன். வச னத்தை எழுதி உங்கள் கையில் கொடுத்து விடுகிறேன். அதற்கு மேல் நீங்கள் ஸ்டுடியோவில் தேவையானதைச் செய்து கொள் ளுங்கள். என் வேண்டுகோளை நீங்கள் ஏற்றுக்கொண்டால் நான் உங்களுடன் ஒத்துழைக்கத் தயா ராக இருக்கிறேன்" என்ருன்.

அவன் உள்ளத்தைத் தெரிந்து கொண்ட சூரியபாபு, அவன் வார்த்தைகளுக்கு ஆக்ஷேபணையே சொல்லவில்லை. மறுநாளே, தாம் பரத்தில், ஓர் சௌகர்யமான இருப்பிடத்தைப் பார்த்து கிருஷ் ணனை அங்கு வசிக்கச் செய்தார். கிருஷ்ணன், தனக்கும், சூரிய பாபுவிற்கும் அன்யோன்யமான சினேகத்தை ஏற்படுத்திய மிலிட் டரி லாரியை மனமாற வாழ்த்தி ஞன். தன் முகத்தின் அழகை இழந்த துக்கத்தை, தன் பேனவை ஓட்டும் ஆனந்தத்தில் மறந்தான். சினிமா உலகில், அவன்யாரென்று ஒருவருக்கும் தெரியாது போன லும், அவன் வசனத்தின் இனிமை அபரிமிதமான புகழை அடைந் தது.

ஸ்டூடியோவில் கதையிலே முக்ய மான கட்டத்தை படம் பிடித்துக்கொண்டிருந்தார் சூரியபாபு. காதலன், காதலியைச் சந்திக்கிருன். அவர்கள் காதலுக்கு இடையூராக சமூகம், இன்னும் பல சில்லறை இடைஞ்சல்கள், எல்லாம் இருக்கின்றன. காதலன் மனம் உருகப்பேசும் இடம் அது. பிரசித்தி பெற்ற நக்ஷத்திரம் சவிதா தேவி கதாநாயகியாக நடிக்கின்ருள்.

டைரக்டர் சூரியபாபு, அந்தக் கட்டத்தை மிகவும் உணர்ச்சி ததும்ப எடுக்க வேண்டுமென்று விரும்பினர். கதாநாயகனை, தன் வசனத்தை இரண்டு மூன்று தடவை ஒத்திகை பார்க்கச்சொன்ஞர். கதாநாயகன் ஆரம்பித்தான் "என் அன்பே, நீ என் காதற் செடியில் அரும்பிய கலா புஷ்பம். உன்னை என் இதயக்கோயிலில் குடி கொண்டிருக்கும் ஆர்வத் தேவதைக்கு அர்ச்சிக்க விரும்புகிறேன். ஆனல், சமூகம் என்னும் தர்மகர்த்தா, எனக்கும் உனக்கும் இடையே நின்று, உன்னைச் செடியிலேயே அழிக்கச் சதி செய்கிறது" என்ருன்.

"மிஸ்டர்.........! இன்னும் கொஞ்சம் குழைவாகவும், உணர்ச்சி பொங்கவும் உங்கள் பேச்சு இருக்க வேண்டும். எங்கே! மறுபடியும் சொல்லுங்கள் பார்க்கலாம்" என்ருர் சூரியபாபு. இரண்டு மூன்று முறை அந்த வசனத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த கதாநாயகி சவிதா தேவி திடீரென்று அங்கேயே மூர்ச்சையாகி விட்டாள்.

ஸ்டூடியோ அல்லோல கல்லோலப்பட்டது. எல்லோருமாகச் சேர்ந்து சைத்யோபசாரங்கள் செய்ததின் பின் சவிதா தேவி, பிரக்ஞை வந்து கண்விழித்தாள்.

"டைரக்டர் சார்! இந்தப் படத்திற்கு வசன கர்த்தா யார்?" என்ருள். வசனகர்த்தா யாரோ ஒரு புதுப் பேர்வழி, என்று முக்கியமானவர்களுக்குத்தான் தெரியும். மற்றவர்களெல்லாம், சூரியபாபுவேதான் வசனம் எழுதுகிருர் என்று நினைத்திருந்தார்கள். இந்த ஏற்பாடெல்லாம், விளம்பரத்தை விரும்பாத கிருஷ்ணனின் வேண்டுகோளினல்தான். வசனத்தில் தான், சவிதா தேவிக்கு ஏதோ பிடிக்காத விஷயம் இருக்கவேண்டும் என்று நினைத்த டைரக்டர் "அது ஓர் புது ஆசாமி. உங்களுக்கு ஆக்ஷேபணையிருந்தால் வசனத்தை மாற்றி எழுத ஏற்பாடு செய்கிறேன்" என்ருர் இதமாக.

"ஆக்ஷேபணையா? இந்த வசனத்திற்கா? இந்தமாதிரி, இந்தக் காலத்தில் யார் எழுதுகிருர்கள்? டைரக்டர் சார்! இந்த வசனகர்த்தாவை உடனே பார்க்க வேண்டும். தயவு செய்து ஏற்பாடு செய்யுங்கள்" என்ருள் சவிதா தேவி; அவள் குரலில் ஓர் விதக் கண்டிப்பு த்வனித்தது.

சூரியபாபு யோசித்தார். கிருஷ்ணனுக்கு அவர் அளித்திருந்த வாக்குறுதி நினைவிற்கு வந்தது. சவிதா தேவியோ பிடிவாதக்காரி. ஆகையால் அவர் சற்று மலைத்தார். கடைசியில் "சவிதா! நாளைக்கு எப்படியும் அந்த வசன கர்த்தாவைக் கூட்டிக் கொண்டு வருகிறேன்." என்ருர்.

★

சூரிய பாபுவின் வேண்டுகோளுக்கு இணங்க முதலில், கிருஷ்ணன் மறுத்தான். ஆனல்

தன்னைப் பார்க்க விரும்பும் சவிதா தேவியை அவன் பார்க்க விரும்பினான். தன்னை முன் பின் அறிந்திராத சினிமா நக்ஷத்திற்கு தன்னைப் பார்க்க ஏன் அவ்வளவு ஆவல்? அவன் சிந்தனை ஓடவில்லை. சூரிய பாபுவின் கெஞ்சலான குரலைக் கேட்ட போது அவன் மனம் இளகியது. "அண்ணா! இந்தக் கோர முகத்துடன், நாலு பேர் முன்னிலையில் வர என்மனம் ஒப்பவில்லை. உங்கள் நடிகை நக்ஷத்திரம் மிகவும் வற்புறுத்தினால் அவளை இங்கு அழைத்து வாருங்கள். தயவு செய்து என் மேல் கோபித்துக் கொள்ளாதீர்கள்" என்றான் கிருஷ்ணன். அவன் குணத்தை நன்றாக அறிந்திருந்த சூரிய பாபு சரி என்று சொல்லிப் போனார்.

சூரிய பாபுவின் கார், தாம்பரத்திலுள்ள கிருஷ்ணனின் வாசஸ்தலத்தில் வந்து நின்றது. அவர் முதலில் இறங்கி சவிதா தேவி இறங்குவதற்கு வழியை விட்டார். இருவரும் உள்ளே போனார்கள். சவிதா தேவி அங்கு வருவாள் என்று கனவிலும் நினைக்காத கிருஷ்ணன் பிரமிப் படைந்தான். போர்டிகோவில் வந்த போதே அவளை எங்கேயோ பார்த்த ஞாப



கம் அவன் மனதில் உதித்தது. அதற்குள்ளாகவே சூரிய பாபு பிரமித்துப் போகும்படியாக ஓர் சந்தர்ப்பம் நடந்து விட்டது. "மிஸ்டர் கிருஷ்ணு"! என்று கத்திக் கொண்டு மூர்ச்சையாகி விட்டாள் சவிதா தேவி. அந்தக் குரல் அலிபாபாவின் மாயக்குகை யைத் திறக்கும் மந்திர வார்த்தை போல் கிருஷ்ணனின் சிந்தனைக் கோட்டையின் கதவைத் திறந் தது. சமயோஜிதமாக, கீழே விழப் போன சவிதாவை தாங்கிக் கொண்டான். சூரிய பாபு இன் னும்பிரமையின்பிடியிலிருந்து விடு தலை யடைய வில்லை. சாவதான மாக கிருஷ்ணன் சொன்னன். "அண்ணு! ஸ்ரீமதி சவிதா தேவி பூர்வாசிரமத்தில், என் கலாசாலைத் தோழி சகுந்தலா. சகுந்தலா தான் என்னைப் பார்க்க விரும்பி னுள் என்று தெரிந்திருந்தால் நாளு கவே வந்திருப்பேனே?" என்றுன். குழப்பத்திலிருந்து விடுபட்ட சூரியபாபு சவிதாவின் மூர்ச்சை யைத் தெளிவிக்க முன் வந்தார். சவிதா புன்சிரிப்புத் தவழ எதிரி லுள்ள சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

"மிஸ்டர் கிருஷ்ணன்! அன் றைக்கு. அந்த வசனங்களைக் கேட்டதிலிருந்து, அவைகளின் கர்த்தா நீங்கள் தான் என்று தீர் மானித்தேன். ஆனுலும் என் மனதில் ஓர் சந்தேகம் இருந்தது. நீங்கள் எப்படி சினிமாவிற்கு வசனம் எழுத வந்தீர்கள்'? என்ற கேள்வி என் சந்தேகத்தை அதிகப் படுத்தியது. தாங்கள் ஒரு பிரம் மச்சாரி என்று டைரக்டர் சார் சொன்னபோது நான் என் நம் பிக்கையையே இழந்து விட்டேன். இந்த வசனகர்த்தா வேறு ஆசாமி என்று எண்ணிக்கொண் டேன். ஆனுல் நான் ஒரு காலத் தில், யார் மீதில் என் அன்பு மாலை யைச் சூட்டி அவரால் நிராகரிக் கப் பட்டேனே, அவர் பேரி லேயே, அவர் லக்ஷிய வாசனை வீசும்படியாக எழுத சக்தி வாய்ந்த ஓர் எழுத்தாளரைப் பார்க்க வேண்டும் என்று மனது துடித்தது. நல்ல வேளையாக நீங் கள், என் நம்பிக்கையைச் சிதைக் காமல், அதை உண்மையாக்கி னீர்கள்."

இந்த இடத்தில், சவிதாதேவி சற்று சிரம பரிகாரம் செய்து கொள்ளப் பேச்சை நிறுத்தினுள். சூரிய பாபுவிற்கு அவள் பேசுவது ஒன்றும் புரியவில்லை. சிலைபோல் உட்கார்ந்திருந்த கிருஷ்ணனின் கண்களிலிருந்து முத்துப்போன்ற இருதுளி கண்ணீர் கிளம்பி கீழே விழுவோமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தன. சவிதா மேலும் தொடர்ந்தாள்.

"நான் உங்கள் வரலாறு முழு தையும் கேட்டுக்கொண்டேன். சூரிய பாபு எல்லாவற்றையும் சொன்னுர். உங்கள் அழகு, பூத உடலின் அழகு, மறைந்து விட் டதே என்று நான் வருத்தப்பட வில்லை. உங்கள் உள்ளத்தின் அழகு, இதயத்தின் சோபை, அந்தராத்மாவின் சௌந்தர்யம் எல்லாம், எதற்கும் நிகரற்றவை என்று எனக்குத்தெரியும். உங்கள் உள்ளக்கோவிலிலுள்ள காதல் தெய்வத்தினிடம் சரணுகதி அடைய இந்த நிமிடமும் தயாராக இருக்கிறேன். என்னை ஏற்றுக் கொள்வீர்களா? அல்லது, சினிமா நடிகை என்று தள்ளிவிடுவீர் களா? உங்களை அடையும் பாக் கியம் எனக்கு இந்த ஜன்மத்தில் கிட்டாவிட்டால், அடுத்த ஜன் மத்திலாவது கிடைக்க வேண்டும் என்று தவம் செய்வேன்."

உணர்ச்சிவெள்ளம் அவள் பேச்சைத் தடை செய்தது. அவளது சோகம் கலந்த மௌனம், அவள் உள்ளக் குமுறலை வெளிக் காட்டியது. நிலைமையை அறிந்த சூரியபாபு சமயோசிதமாக வெளியே நழுவினர். கிருஷ்ணன் மனதை விட்டுத்தழதழத்த குரலில் ''சகுந்தலா! இன்றைக்குத்தான் என் லக்ஷியம் நிறைவேறியது. என் இதயத்தில் உனக்குத்தான் இடம். நானல்லவா உன்னிடம் அன்புப்பிச்சை, பிரேமைப்பிச்சை கேட்டிருக்க வேண்டும். சகுந்தலா! நீ பெண்களிலேயே தனிப் பிறவி! என் லக்ஷியக்காதலி'' என்ருன்.

சகுந்தலா (மாஜி சவிதா தேவி!) கிருஷ்ணன் திருமணத்தை பிரமாதமாக நடத்திவைத்த பொறுப்பு ஸ்ரீமான் சூரியபாபுவைத்தான் சேரும். ஆனல் அவருக்கு ஒரு விஷயம் புரியவில்லை! அவருக்கு மாத்திரமா! இன்னும் எத்தனையோ பேருக்கும்தான்! அழகே உருவெடுத்துவந்த அவளுக்காக தவம் கிடந்த அனேக கோடீஸ்வரர்களையும் சௌந்தர்யவான்களையும் புறக்கணித்துவிட்டு அவள் ஏன் ஒரு சாதாரண வசனகர்த்தா, அதிலும், அழகெல்லாம் இழந்தவனை மணம் செய்து கொண்டாள் என்று தெரியவில்லை. அவர்கள் போலிக் கண்களுக்கு, அந்த உண்மைக் காதலின் ஆழம் தெரியாமற் போனதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை.

இன்று சகுந்தலா தேவி தமிழ் நாட்டில் தலை சிறந்த நடிகை. அவள் நடிப்பு அவள் கணவனின் கற்பனு சக்தி நிறைந்த வசனங்களினல் அதிகமாக சோபிக்கின்றது.

''காதல் என்பது கடும் பரீட்சை! அதில் முதலில் அடையும் தோல்விகள், பின்னல் ஊக்கத்துடன் அடையும் வெற்றிக்கு பலமான அஸ்திவாரம். காதலில்லாத வாழ்கை எல்லையற்ற பாலைவனம்'' என்று இப்போது சகுந்தலாவின் பங்களாத் தோட்டக் காரன், எண்பது வயதான முத்துகூடச் சொல்லுவான்.

★

தவறலாம்; ஆனல்

எவனும் ஒரு குற்றம் செய்து விடலாம்; ஆனல் அதைத் திரும்பத் திரும்பச் செய்கிறவன் முட்டாளைத் தவிர வேறு யார்?

— ஸிஸிரோ.

மண்ணாசை

"சுகி"

மூன்று ஆசைகளுக்குள்ளும் முதன்மை பெற்றது மண்ணாசை. உலகில் தோன்றிய அத்தனையும் முடிவில் மண்ணாகவே போகின்றது என்ற தத்துவப்படி பார்த்தால், பொன்னாசையும், பெண்ணாசையும் மண்ணாசையைவிட, எவ்வளவோ தாழ்ந்தது. முருகப்பனுக்கு பொன்னாசையோ, பெண்ணாசையோ கிடையாது. மண்ணாசையும், குழந்தைப் பாசமும் தவிர இந்த உலகில் வேறொன்றும் இல்லை அவனுக்கு.

இரண்டு வருஷங்களுக்கு முன்புதான் அவனுடைய பிள்ளை பள்ளிப் படிப்பை முடித்து விட்டு வந்தான். வயல், கலப்பை, தொழுவம் இதைக் கண்டாலே பையனுக்கு அருவருப்பு; வரம்பின்மேல் நடந்து செல்வது பையனுக்கு பகீரதப்பிரயத்தனம். கிராமத்தையும், வயல் வரப்புகளையும் விற்றுவிட்டு, டவுன் பக்கமாக வசிக்க வேண்டும். உத்யோக வாழ்வும், பட்டண நாகரீகமும், வாழ்க்கையின் லட்சியம் என்ற எண்ணத்தை விதையூன்றி வந்தான் தகப்பனிடம்.

அதை முளையிலேயே கிள்ளிவிட்டான் தகப்பன். படிப்புக்கும், நாகரிக வாழ்க்கைக்குமாக செலவழிந்தது போக முருகப்பனிடம் 500 ரூ. மிகுந்திருந்தது. தாயில்லாக் குழந்தை, ஒரே புத்திரன் என்றதால்அளவிற்கு மீறியபாசம் கொண்டிருந்தான் புத்திரனிடம். சென்ற இரண்டு மாதமாக அப்பனுக்கும் மகனுக்கும் ஒரே தாவா. கையிலுள்ள ரொக்கத்தைத் தந்தால், தான் ஒரு உத்யோகத்தைத் தேடிக் கொள்ளலாமென்று பையன் தலைகீழாக நின்றான். உத்யோக வேட்டைக்காக, பத்து முந்நூறுவரை ஏற்கெனவே பையன் பைசல் செய்துவிட்டான் பையன் பணத்தைச் செலவு செய்தது போக முருகப்பன் கற்றுக் கொண்டது 'நோ வேகன்ஸி' என்ற பதம் ஒன்றுதான்.

பையனுக்குக் கோபம். 'அப்பா நீங்கள் மண்ணில் கொண்டுபோய் பணத்தைப் போட்டால் அது மண்ணாகத்தான் போகும்' என்றான்.

'தம்பி, உலகமே மண்ணாக இருக்கும்போது, பணம் மட்டும் வேறு ஆகிவிடுமா? எல்லாம் மண்தான்.'

"எனக்கு இந்த விவசாயம் பிடிக்கவில்லை. எங்காவது ஹாயாக மாசா மாசம் சம்பளம் வாங்கிக்கொண்டு......'

பையனை மேலே பேசவிடாதபடி முருகப்பன் சொன்னான். 'தம்பி கிராமத்து மண்ணில் பிறந்து விட்டேன்; அதிலேயே வாழ்ந்து வரப் போகிறேன். நீ இவ்வளவு தூரம் படித்தது போதும். நீ செலவு செய்து 'வேலையில்லை வேலையில்லை' என்ற இடியோசைகளைக் கேட்டிருக்கிறாய். அந்தப் பணத்தை மண்ணில் போட்டிருந்தால் அது அப்படி உன்னைப் பார்த்துச் சொல்லியிருக்காது.'

'இந்த வேதாந்தம் உன்னேடே இருக்கட்டும். உழுது உழுது அழுது கொண்டிருக்க நான் விரும்பவில்லே.'

'நீ உத்யோகம் பார்க்கப்போக வேண்டாம். வீட்டோடு இரு.'

'நீ உழைத்துப் போட நான் சாப்பிடுகிறேன் என்று ஊர் தூற்றும்.'

'என்னதான் செய்யப் போகிருய்?

'டவுனைப் பார்த்துப் போகிறேன். அந்த 500 ரூபாயைக் கொடுத்தால் போதும்.'

'இல்லே. மேலக்காட்டில் ஒரு புஞ்சை இருக்கிறது. நல்ல மண். அதை வாங்கப்போகிறேன்.

'அது வெறும் பாழ்; கட்டாந் தரை; சுடுகாடு.'

பையன் சொன்னதைக் கேட்டு முருகப்பன் சிரித்தான். தேவ கானத்தை இசைக்கக்கூடிய இனிமையான வீணே, மீட்டுகிற வைணிகன் இல்லாமல் கிடப்பது போன்றிருந்தது அந்த நிலம். அதிலே இயற்கைத் தேவியின் சௌந்தர்யத் தாண்டவத்தைக் கற்பனேக் கண்ணுல் கண்டிருந்தான். பிரகிருதியின் யௌவனக் குதூகலச் சிரிப்பொலி அவன் காதில் கலகலத்துக்கொண்டிருந்தது. அந்தப் பூமி அத்தனேயும் பொன்விளேயும் பூமியாக அவன் கண்ணிற் பட்டது.

ஆனுல் அது பாழ்வெளி, கட்டாந்தரை, ஏன், சுடுகாடு இப்படியாக மகன் கண்ணில்ப்பட்டது.

பையனுக்கு பிரகிருதியின் கோர நகைப்புப் புலனுக, தந்தைக்கோ குமிண் சிரிப்பல்லவா புலனுயிற்று!

எது உண்மை? 'கிழவனும் மாமரமும்' என்ற கதையைப்பையன் படித்து பரீட்சையில் தேறி யிருக்கிருன். 'ஏனப்பா கிழவா, பழுத்த மாம்பழங்களைத் தின்ஞமல், ஏதோ மாங்கொட்டையை நட்டுக் கொண்டிருக்கிருய். அதனுல் உனக்கென்ன பலன்?' என்று ராஜா கேட்க, 'மகாராஜா யாரோ ஒருவன் மாங்கொட்டையை வைத்துப் பயிராக்கியதால்தான் இன்று பலன் கிடைத்தது. இந்த மரத்தின் பலன் எனக்குக் கிடைக்காவிட்டாலும் என் சந்ததிக்காவது கிடைக்கட்டுமே, கிடைக்க வேண்டுமே என்றதால் தான் நடுகிறேன் மகாராசா.' இந்தக் கதையின் பொருளும் கருத்தும் பையனுக்கு மனப் பாடம்.

ஆனுல், முருகப்பனுக்கு இக் கதை தெரியாது. அவனே கதையாக விளங்கினுன்.

தகப்பனுக்கும் பிள்ளேக்கும் பூமாதேவியால் மனஸ்தாபம் ஏற்பட்டது. பூமாதேவியை 'பூ' வென்று உதறித் தள்ளிவிட்டு உத்யோகம் தேடி பையன் பட்டணத்தின் பக்கம் போய்விட்டான்.

முருகப்பன் ரூ. 500 கொடுத்து புஞ்சை நிலத்தை வாங்கினுன். அதில் கொஞ்சம் மேட்டுப் பாங்கான பூமி. அதைக் குழியெடுக்க பத்து நூறு பிடித்தது. கவலேக் கிணற்று மராமத்துப் பார்த்ததில் ஐம்பது அறுபதுரூபாய் ஆயிற்று. மேல்ச் செலவுக்கெல்லாம், நஞ்சையில் விளேந்த லாபத்தைக் கொண்டு புஞ்சையைச் சீர்திருத்தி வந்தான். அன்ரு இன்ஞ யென்று ஆயிரத்துக்குமேல் தொட்டுத் தொட்டுப் பிடித்துவிட்டது.

பிள்ளேயாண்டான், தகப்ப

னுடைய மண்ணாசையைக் கண்டு நகைத்துக் கொண்டிருந்தான். பட்டணத்தில் அவனைப்போலவே அக்கிராமத்திலுள்ள சிலரும் பயித்தியக்காரப் பட்டம் சூட்டினார்கள்.

இரவும் பகலுமாக, மண்ணோடு போராடி அதைச் செப்பனிட்டு வளம் படுத்துவதிலேயே கண்ணாக இருந்தான் முருகப்பன். புல்லும் பூண்டுமாக பேயின் கோரச் சிரிப்புப்போலிருந்த இடத்தில் சாந்தம் நிலவிற்று. உரம் பரம்பட்டு, ஈர வாடை கண்ட இடத்தில் புடல், பாகல், வெண்டை, தளிர்விட ஆரம்பித்தன.

அங்கே தென்னம் பிள்ளைகளும் வைக்கப்பட்டிருந்தன. ஒரு பகுதியில் சோள நாற்று பச்சைக் கம்பளம்போல ஊசலாடிக் கொண்டிருந்தன. கேழ்வரகு, நாற்று நடுகை எல்லாம் முடிந்து விட்டது. உலக ஸ்மரணையே இல்லாமல் அந்தப் புஞ்சைக் காட்டையே சுற்றிச் சுற்றி வாழ்ந்து வரலானான். அவனுக்குப் பெண்ணாசையும் இல்லை; பொன்னாசையும் இல்லை. புஞ்சைத் தோட்டந்தான் எல்லா ஆசையுமாக உருவெடுத்தது.

கவலைப் பள்ளத்தை அடுத்து சின்ன ஓலைக் குடிசை. அங்கேயே சமையல் சாப்பாடு. நாய் நரி அடித்தாலும், பூச்சு பொட்டு கடித்தாலும் போச்சு என்று ஊரார் பேசிக் கொள்வார்கள். அடங்காத ஊதவாட்டையும், குளிர் காற்றும் அடைமழையும் வந்தபோது வீட்டுக்கு வந்துவிடுகிறது.

பயிர் பச்சை யெல்லாம் நன்கு, செழிப்பாகக் கிளைத்தோடின. செடிகளும் கொடிகளும் பின்னிக் கிடந்தன. தன் பிள்ளையை அழைத்து வந்து அதைக் காட்ட வேண்டுமென்று ஆசை. ஆனால் ஆசையில் மண்விழுந்தது.

பொதிப்பட்டமாக வளர்ந்த சோளம் கேழ்வரகு, பூவும் பிஞ்சுமாக வந்து நின்ற கறி காய்ச் செடிகள் எல்லாம் மழை முகத்திற்காக வானம் பார்த்து நின்றன. கிணற்றிலே தண்ணீர் போதவில்லை. அல்லும் பகலும் தண்ணீர் இறைத்து இறைத்து மாடும் அவனும் எலும்பாகப் போனதுதான் மிச்சம். கிணற்றில் ஒரு வெடி வைத்து, ஊற்றைப் பெருக்கிக் கொள்ள ஆசை துடிதுடித்தது. கையில் பணம் இல்லை. யாரிடமாவது கடன் கேட்டால் 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு; வரவர நீ மெலிந்து துரும்பாகி விட்டாய். உன் பிள்ளையோ கோபித்துக்கொண்டு போய்விட்டான். தரித்திரம் பிடித்த புஞ்சை. விட்டுவிடு' என்றார்களே யொழிய பைசா பெயரவில்லை.

வெயிலின் ஜுவாலை தாங்காமல் பயிர் பச்சைகள் காய்ந்தன. செடிகள் துவண்டு பூவும் பிஞ்சுமாகக்கருகிவிழுந்தன. அக்காட்சியைக்கண்டு மனம் இடிந்துபோய் விட்டான். மழலை பேசிய குழந்தையின் நாக்கைத் துண்டித்தது போன்றிருந்தது அக்காட்சி.

பொதிப்பட்டத்தில் காய்ந்து கருகிய சோளமும் கேழ்வரகும் மாட்டுக்கு நல்ல தீவனமாச்சே என்ற சந்தோஷத்தோடு சரி. ஆயிரம் ரூபாயில் 500-க்கு வட்டிப் பணம் கொடுக்க வேண்டும்; அதை நஞ்சை விளைச்சலிருந்து ஒருவகையாக சமாளித்துக்கொண்டான்.

பையன், பட்டணத்திலிருந்து

கிராமத்திற்கு வந்திருந்தான். அவன் முகத்தில் எப்படி விழிக்கிறது என்று தகப்பனுக்கு அச்சம். இருந்தாலும், பையன் சொன்னது தவறு. பூமிஒருநாளும் பொய்க்காது என்பதை நிரூபிக்க வேண்டுமென்ற ஆசைக் கனல் முருகப்பன் மனதில் கொழுந்து விட்டுக் கொண்டிருந்தது.

'அப்பா சுடுகாட்டைக் கட்டிக் கொண்டு கண்ட பலன் இதுதான். நீங்கள் கருத்துக் கயிராக மெலிந்தீர்கள். வேண்டாம் என்றான்'

தகப்பன் சொன்னான் 'தம்பி நீ தீர்க்கதரிசியாக இருக்கலாம்; ஆனால் அது பொன் விளையும் பூமிதான் என்று நான் கண்ணாரக் காண்பேன். நான் காண விட்டாலும் இந்த ஊரார்வது பார்க்கும்...' என்றான்.

ஏதோ சில தினங்கள் வீவில் வந்தபையன் இருந்துவிட்டு, மறுபடியும் உத்யோகம் பார்க்கப் பட்டணத்திற்குப் போய்விட்டான்.

மாசு மறுவற்ற நீலவர்ண ஆகாயத்தில் பஞ்சுப் பொதிகள்போல ஒட்டிக் கிடந்த மேகங்கள் மெதுவாக சூல்கொண்ட எருமைக் கூட்டங்கள்போல நகர்ந்து சென்றன. விசிம்பில் கார் ஓடிற்று.

பருவகாலம் ஆரம்பித்தது. பூமியின் காற்றுஓய்ந்து மழைக் காலத்தின் குளுமை பரவலாயிற்று. மறுபடியும் முருகப்பன் நஞ்சை நிலம் பண்படுத்தப்பட்டு ஈரமண் கட்டிகள் இடம் பெயர்ந்தன. நோயாளி நிமிர்ந்து நிற்பதுபோல மீண்டும் பூமாதேவியின் குமிண் சிரிப்புப் பிறந்தது. செடி கொடிகள் தாவி விளையாட ஆரம்பித்தன. காய்ந்து கருகிய தென்னம்பிள்ளைகள் கத்திபோன்ற குருத்துக்களை வானேங்கி நீட்டின. வாழை இலைகள் வளம்பெற விரிந்து 'வா வா' என்றன.

எங்கும் பசுமை. காய்கறியும் சரி தான்யப் பயிரும் சரி, தலை குனிந்து சென்ற வருஷத்தில் செய்த பாவத்திற்கு மன்னிப்புக் கூறுவதுபோல எழுந்து நின்றன. செவ்வந்திப் புஷ்பங்களின் சிரிப்பு என்ன, ரோஜாப் புஷ்பங்களின் மலர்நகை என்ன, மல்லிகையின் மணச்சிறப்பு என்ன, இதையெல்லாம் கண்டு அவன் அடைந்த பெருமிதம் சொல்லி முடியாது. இதோடு கிணற்றிற்கும் வெடி வைத்து இரண்டு கவலைத் தண்ணீர்க்கு வழி வைத்துவிட்டான். வானம் பொய்த்தாலும் இனி கிணறு பொய்க்காது.

ஆனால் சோதனைக் காலம் வந்தது. மனிதன் சாகும்போதுதான் அவன் இருந்ததின் பெருமை தெரிய ஆரம்பிக்கிறது. இறப்பில் தான் வாழ்வின் ரகஸியம் புலனாகிறது. மழையிலும் வெய்யிலிலும், கட்டுக்கு மீறிய உழைப்பால் முருகப்பனின் வயோதிக உடல் நோயுற்றது.

பையன், மனம் வருந்தி வீடு வந்து சேர்ந்தான். ஏதோ ஒரு தவறு உத்யோகத்தில் செய்துவிட்டான். 'வேலைக்கு வேண்டாம்; இனி எங்கும் உனக்கு உத்யோகமும் கிடையாது. போ' என்று சொல்லிவிட்டார்கள். அழமாட்டாத குறையாக, கிராமத்திற்கு வந்தான். வருகிற பாதையில்தான் அந்தத் தோட்டம் இருந்தது. கிளிகள் கொஞ்சிக் கொண்டிருந்தன. பசுமையும் செழிப்பும் அவனது கண்ணையும் கருத்தையும் விழுங்குவது போல் பிரமை ஏற்பட்டது.

அந்தத் தோட்டம் இப்போது முருகன் தோட்டம் என்ருயிற்று. முருகப் பெருமானின் மயிலின் கலாபம் போன்ற வர்ண விஸ்தாரங்கள் அங்கே மலர்ந்திருந்தன. பிரகிருதியின் மோகனப் புன்னகை செடிக்குள்ளே ஓடி ஒளிந்து விளையாடின. மெல்லிய பூங்காற்று உடம்பில் படுவதை உணர்ந்து தோட்டத்தை எட்டிப் பார்த்தான. பசுந் தளிர்கள் ஆடின. பூங்காற்று தளிர் நடையில், அவ்விடம் உலாவுவது மாயா ரூபிகளான தேவ மாதர்கள் நர்த்தனமாடுவது போன்றிருந்தது.

புதிதாய்ப்பொதி வந்த சோளப் பயிரின் வாசம் கம்மென்று மணந்தது. காற்றின் வாசனையை நுகர்ந்தபடியே வீட்டிற்கு வந்தான். வாடிய தகப்பனையும், வளர்ந்த தோட்டத்தையும் நினைத்துக் கதறினன்.

'அப்பா, எப்படி மெலிந்து போனீர்கள்?...' என்று கட்டித் தழுவினன்.

'தம்பி, அந்தப் பொன் விளையும் பூமிதான் என் சுடுகாடு.'

பையனுக்குத் தான் சொல்லிய வார்த்தையம்பு நினைவிற்குவந்தது. கண்கலங்க, 'அப்பா பூமாதேவியின் குமிண் சிரிப்பைக் கண்டாயே. குமரிபோல வளர்ந்து அவள் செய்யும் ஜாலங்களையெல்லாம் காணக் கொடுத்து வைக்குமா உனக்கு?...... அப்பா...... அப்பா...' என்று அழுது புலம்பினன்.

கிழவன், உடம்பு மெலிந்துவிட்டது; ஆனல் உள்ளம் வைரம் பாய்ந்த கட்டை. 'தம்பி நீ வேலைக்கு லாயக்கு இல்லை யென பூமாதேவி சொல்ல மாட்டாள். நான் கிராமத்து மண்ணில் பிறந்தேன்; தவழ்ந்தேன் மண்ணின்மேல் உழன்ற உடம்பு மண்ணுக்குள் போகிறது. இதில் என்ன வருத்தம், ஏன் துக்கப்பட வேண்டும்? மண்ணுக்காக வாழ்ந்தேன். மண்ணுகப் போகிறேன்.'

முருகப்பனுக்கு அதற்குமேல் பேச முடியவில்லை.

அதுதான் கடைசி மூச்சு!

சுசீலாவின் பை

தனம்

தீபாவளிக்கு முதல் நாள். சுசீலாவும் அவள் அப்பா, அம்மா முதலியோரும் சாமான்கள் வாங்கி வரக் காரில் புறப்பட்டனர். அன்று சுசீலாவுக்கு ஒரே சந்தோஷம். அவளுக்கு ஒரு ஊஞ்சலாடும் பொம்மையும், சுற்றிச் சுற்றி யோடும் ஒரு ரயில் வண்டியும் வாங்கித் தருவதாக அவள் அப்பா சொல்லியிருந்ததுதான் அதற்குக் காரணம். பொம்மை வாங்கினால் அதை எங்கே வைப்பது, பள்ளிக்கூடம் போனால் அதைக் கொண்டுபோய்த் தன் சினேகிதைகளிடம் எல்லாம் அதைக் காட்டலாமா என்றெல்லாம் நினைத்துக் கொண்டே வந்தாள் சுசீலா.

திடீரென்று "அப்பா, அப்பா காரை நிறுத்துங்கள்" என்று சத்தம் போட்டாள் சுசீலா. அப்பா காரை நிறுத்தினார்.

சுசீலா வெளியே குதித்து ஓடிச் சென்று பாதையில் கிடந்த ஒரு அழகான பையை எடுத்து வந்தாள். சுசீலாவின் அம்மா பாதையின் இரு புறமும் பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. கார் புறப்பட்டது.

சுசீலா அந்த அழகான தோல்ப் பையைத் திறந்தாள். இரண்டு மூன்று சிறிய பட்டுச் சட்டைகள் இருந்தன.

சுசீலா சட்டைகளைக் கையில் எடுத்

துப் பாத்து "அம்மா, அம்மா, இதைப் பாரம்மா. ஒரு பொம்மைக்கு வேண்டிய சட்டையெல்லாம் இருக்கிறது. என்ன அம்மா, அப்பா பட்டணத்திலிருந்து வாங்கி வந்த அந்தப் பெரிய 'லேடி' பொம்மைக்கு இது சரியாய் இருக்குமம்மா. வீட்டுக்குப் போயி அந்த பொம்மைக்கு இதையெல்லாம் போடலாமாம்மா?" என்றாள் ஆசையோடு.

அழகான பட்டுச் சட்டைகள்!

சுசீலாவின் அம்மா, "ஐயோ, பாவம். இதெல்லாம் யாருடையதோ தெரியவில்லை. இதைக் காணாமல் போட்டு விட்டு எப்படி வருந்துகிறார்களோ! இதை இதன் சொந்தக்காரர்களிடம் நாம் சேர்த்துவிட வேண்டும்" என்றாள்.

சுசீலாவின் முகம் சுண்டிப்போய் விட்டது. "ஏனம்மா இதையெல்லாம் நாமே வைத்துக் கொள்ளக் கூடாதா? வழியில் கண்டெடுத்தது தானே? இந்த அழகான சட்டையெல்லாம் போட்டால் என் பொம்மை எவ்வளவு அழகாக இருக்கும்மா?" என்று கேட்டாள்.



"நாம் அப்படி யெல்லாம் செய்யக் கூடாது. கண்டெடுத்ததுதான் என்ருலும் இது நம்முடையது அல்லவே. அதை நாமே வைத்துக் கொள்வது இன்னெருவர் பொருளைத் திடுவது போல் அல்லவா?" என்ருள், சுசீலாவின் அம்மா. சுசீலா ஒன்றும் பேசவில்லை.

இதற்குள் பொம்மைக் கடைக்கு முன் கார் வந்து நின்றது. ஊஞ்சலாடும் பொம்மை, ரயில் வண்டி, பலூன், ஊதல் முதலியவைகள் எல்லாம் வாங்கித் தந்தார் சுசீலாவின் அப்பா. பிறகு ஒரு ஜவுளிக் கடைக்குச் சென்று வேஷ்டி, புடவை எல்லாம் வாங்கிக் கொண்டு சுசீலாவுக்கும் சிலபட்டுச் சட்டைகள் வாங்கித் தந்தார்.

வழியில் ஓர் பத்திரிகை ஆபீஸில் நுழைந்து தங்களுக்கு ஒரு பை கிடைத்த விபரத்தை வெளியிட்டு உரியவர்கள் தங்கள் வீட்டுக்கு வந்து நேரில் அதைப் பெற்றுச் செல்லலாம் என்று விளம்பரம் செய்து விட்டு வீட்டுக்குத் திரும்பினர்கள்.

மூன்ரும்நாள் ஒரு ஸ்திரி கையில் ஒரு அழகான சிறு குழந்தையை எடுத்துக் கொண்டு சுசீலாவின் வீட்டிற்கு வந்து இறங்கினுள்.

சுசீலா ஓடிச் சென்று அந்த ஸ்திரியின் கையிலிருந்த குழந்தையை உற்றுப் பார்த்தாள்.

அந்தக் குழந்தையின் சின்ன முகமும், கைகால்களும் சுசீலாவுக்கு ரொம்பவும் பிடித்திருந்தன.

என்ன வெல்லாமோ கேள்வி கேட்டு, பையைக் காணமற் போட்டது அந்த அம்மாள்தான் என்று தெரிந்து கொண்டு ஓடிப் போய் விபரம் தெரிவித்து அம்மாளைக் கூட்டிவந்தாள் சுசீலா.

தன் பையைப் பெற்றுக் கொண்ட அந்த அம்மாள் அதிலி

ருந்த துணிகளை மட்டும் எடுத்துக் கொண்டு அந்த அழகான பையை சுசீலாவுக்கே கொடுத்து விட்டாள். கையிலிருந்த பிஸ்கோத்திலும் அவள் கை நிறையக் கொடுத்துவிட்டு அந்த அம்மாள் விடை பெற்றுச் சென்றாள்.

அந்த அம்மாள் சென்ற பிறகு, "இப்போது நாம் செய்தது ஒரு நல்ல காரியமல்லவா? அந்தப் பையை நாமே வைத்துக் கொண்டிருந்தால் அதைப் பார்க்கும் போதெல்லாம், 'ஐயோ, பாவம், அது யாருடையதோ, இதை யார் காணமல் போட்டுவிட்டு வருந்துகிறார்களோ' என்று மனசு சொல்லுமல்லவா? ஆனல் இப்போது நமக்கு ஒரு நல்ல சிநேகிதி கிடைத்தாள். அந்தப் பையும் உனக்குப் பரிசாகக் கிடைத்து விட்டதல்லவா?" என்றாள் சுசீலாவின் தாய்.

கையிலிருந்த பையின் அழகைக் கையில் தடவிப் பார்த்துக் கொண்டே, "ஆமாம்மா!" என்றாள் சுசீலா மகிழ்ச்சியோடு.

கன்றுக்குட்டி

பெ. தூரன்

'அம்மா அம்மா' கன்றுக் குட்டி
ஆரைக் கூப்பிட்டாய் கன்றுக் குட்டி
சும்மா சும்மா கத்தாதே
அம்மா சீக்கிரம் வந்திடுவாள்!
'அம்மா அம்மா' கன்றுக் குட்டி
ஆரைக் கூப்பிட்டாய் கன்றுக் குட்டி
பச்சைப் புல்லு நான் தருவேன்
பசியைப் போக்கிக் கொள்ளாயோ?
'அம்மா அம்மா' கன்றுக் குட்டி
ஆரைக் கூப்பிட்டாய் கன்றுக் குட்டி
அம்மா சீக்கிரம் வந்திடுவாள்
அன்பாய்ப் பாலும் தந்திடுவாள்.

செல்வம் பயல்

'சேது'

செல்வம்பய போரானுன்னு செறுக்கி யொருவளே — நான்
சேத்துவச்ச நாள்முதலா செமந்து துள்ளுரான்.
செறுக்கி யென்னே எந்த வூரு இன்னுகேக்குரான்
சிடுசிடுன்னு மொகத்தெக்காட்டி கடுகாப் பொறியரான்!

(1)

அந்தச் செறுக்கி அம்மணியும் அப்படித்தானே
அடிக்கவரும் பிடிக்கவரும் அந்தப் பயலோடே
அணேச்சி கிட்டுக் கூடவரும் அமக்கைத்தான் பாரேன்!
அவளுக்கிருக்கும் ராங்கித்திமிரு எத்தனே பாரேன்!

(2)

செறுக்கி நானும் பில்லறுத்து செமந்து தீக்குறேன்
நாலுகாசு வேனுமின்னு நான் திரியுரேன்
வெட்டவெயிலில் பில்லறுத்து வெந்து சாகுறேன்
சுள்ளிக் குச்சியைப் பொறுக்கிவாரேன் சோருக்கித் திங்க

(3)

அவுத்திக் கீரைத் தோட்டத்திலே அவனிருக்கிரான் — அவ
ஆடி அசஞ்சு அங்கேவரும் அமுத்தலேப் பாரேன்
புளியமர நிழலுலேதேம் பளேய தூட்டுரு — அதெக்
கொஞ்சிப்பய தின்னுகிட்டு கூத்தடிக்கிரான்!

(4)

புளி பொறுக்கி புளி யொடச்சு பொங்கித் திரியுரேன் -- பச்செப்
புல்லிருக்கும் கொளத்தெத் தேடிப் போய்த் திரியுரேன்
ஒஞ்சிருக்க நேரமில்லே ஓடித் திரியுறேன்
காடுகரம்பு திரிஞ்சு இந்த வயறு வளக்குறேன்

ஓடி ஆடித்திரியாமலே ஒக்காந்துகிட்டு
தெம்மாங்கு பாட்டுப் பாடி தினங் குதிக்கிரு
பளைய சோத்தெத் தின்னுபிட்டு பாக்குக் கடிக்கிரு
பயலேச் செறுக்கி பாத்துகிட்டு பல்லே இளிக்கிரு

(6)

பளையதில்லே எனக்குத் திங்க வயறு பதைக்குது
பாலுஞ் சோறும் திங்குருங்க பயலுஞ் செறிக்கியும்
பாக்கு வெத்திலே சருகுமில்லே பல்லுக் கிள்ளுது
கொட்டப் பாக்கு கொளுந்து வெத்திலே கும்மாளம் பாரேன்!

(7)

சுண்டக் குளம்புச் சோத்துக்கு நான் சுத்தியலேயறேன்
கண்ட கண்ட இடத்திலெல்லாம் கையை நீட்டுறேன்.
கலேச்சிகிட்டு திங்குருங்க கறியும் சோறையும்
நெனச்சுப் பாத்துத் தொலேயுதுன்னு விட்டுட்டு வாரேன்!

(8)

தவங்கிடந்து பெத்த புள்ளே தாண்டி நடக்குது — இப்ப
அவனெ மாலெ இட்ட செறுக்கி அமுல் நடத்தரு
போனுப்போவுது எம்புள்ளே தானே பொளச்சிட வேணும்
ஆண்டவனே அவனெ — அவளெக் காத்திட வேணும்

(9)

கண்ணுலங் கட்டி ரெண்டு வருசம் கண்டு முதலில்லே
காத்தாயித் தாயே மனசு வெச்சுக் காத்திட வேணும்
பேரன் பேத்தி எனக்கு ஏழு தந்திட வேணும்
பெரிய மனசு பண்ணுடாப்பா பெரியாண்டி முனியா!

19724

உங்கள் தினசரி உபயோகத்திற்கு

பனி மலைத் தென்றல் போன்று குளிர்ச்சி வாய்ந்ததும், அரிய மலர்களின் நறுமணம் போன்று களைப்பாற்றுவதுமான

டாடா ஓ-டி-கொலோன்

உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தை குளிரப்பண்ணுவதற்காயினும் சரி உகந்தது.

எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.

டாம்கோ விற்பனை இலாகா,

நெ. 4/117. திருச்சி ரோடு :: கோயமுத்தூர்.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

சிலப்பதிகாரம்

(புகார்க்காண்டம்)

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள்

எழுதிய உரையுடன் தயாராகிவிட்டது.

- ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருன சிலப்பதிகாரத்தின் இனிமையையும், நயத்தையும் எளிதில் எல்லோரும் இதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

- நமது கலை, நாகரிகம் இவற்றின் உயரிய பண்பாட்டுக்கு அத்தாட்சியாக இது விளங்குகிறது.

- தமிழ் அறிஞர்களான திரு எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களும், திரு. ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்களும் முறையே சிறப்பான முன்னுரை, மதிப்புரை தந்து, நூலின் சுவையை அனுபவிக்கச் செய்திருக்கிருர்கள்.

★

விலை ரூ. 5—0—0

விபரங்களுக்கு

புதுமலர் நிலையம்

திருச்சி ரோடு, : : கோயமுத்தூர்.

... ஆயுர்வேத ஔஷதங்
களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம்
செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181 Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி
24/25, சைனு பஜார் :: மதருஸ்

கோயமுத்தூர்

பைனான்சிங் கார்ப்பரேஷன்

பேங்கர்ஸ்.

ராஜ வீதி, கோயமுத்தூர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 9 - JAN 1947 MADRAS

★ செல்வத்தை சேகரித்து வைக்க சிறந்த வழி

லாபம் தரும் ஏலச்சீட்டுகள்

(ரூ. 10,000; ரூ. 7,500; ரூ. 5,000; ரூ. 2,500)

நடைபெற்று வருகின்றன.

புதிய செட்டும் விரைவில் ஆரம்பிக்கப்படும்

★ சந்தாதாரர்களுக்குத் தேவையானால் செலுத்தியுள்ள

தொகையில் ரூ. 100-க்கு 90 வீதம்

கடன் கொடுக்கப்படும்.

பேங்க் சம்பந்தமான சகல வரவு சிலவுகளும் நடத்தப்படும்.

விவரங்களுக்கு:—

N. R. லிங்கப்ப கவுடர்,

மேனேஜிங் பார்ட்டனர்,

கோயமுத்தூர் பைனான்சிங் கார்ப்பரேஷன்,

கோயமுத்தூர்.

குறைந்தபட்ச தியாகம் செய்து சேமிப்புகளைப் பெருக்குவது எப்படி—

AC-92-TM



பிரசினை: நான்கு தீக்குச்சிகளைக் கொண்டு, இரண்டு சதுரங்களை நான்கு சதுரங்களாக மாற்றவும்.

விடை:



அதிகப்படியான நான்கு தீக்குச்சிகளைப் படத்தில் காட்டியுள்ளபடி அமைக்கவும்.

டி நான்கு தீக்குச்சிகளை விவேகத்துடன் அமைப்பதனால், அவை எட்டுக் குச்சிகளின் வேலையைச் செய்யும்படிப் பண்ணலாம். அதுபோலவே, உம்மு,

டைய சேமிப்பைக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்பதை அறிவதனால், நீர் உம்முடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தில் அதிகபட்ச பலனைப் பெறக்கூடும். நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை வாங்கவும்—இவை சிறு சேமிப்புக்காரர்கள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பதற்காகவென்றே ஏற்படுத்தப்பட்ட சாதனமாகும்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்.

இவை முக்கியமான அனுகூலங்களாகும்:—

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவரா யிருந்தாலுஞ்சரி மைனரா யிருந்தாலுஞ்சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்க முடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவீதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மெண்ட் பத்திரத்தின் மேல் கிடைக்கக் கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம்டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வரப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபிஸுகளிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்!

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.



உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர்
கவர்ன்மெண்ட்
தயாரிப்பு.

கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-10 TM

நீங்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்

எங்கள் கூட்டுறவு முறையின் மூலம் உண்டாக்கப்படும் பெருவாரியான கைத்தறித் துணிகள் நேராகவே மதராஸிலும் மற்ற நகரங்களிலும் 40 கடைகளில் விற்பனை செய்யப் படுவதின் முக்கிய அனுகூலங்கள் :–

- பயிற்சியுள்ள நெசவாளர்களால் தயாரிக்கப்பட்ட ஆடைகள்.
- சாயம் போகாத நவநாகரிகமான சரக்குகள்.
- புத்தம் புதிய அளவில் வேண்டிய அளவு.

வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள், டவல்கள், பிரின்ட்ஸ், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், லுங்கிகள், கொசுவலைகள் முதலியன கிடைக்கும்.

மதராஸ் கோவாபரேடிவ்
கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரோவின்ஷியல் கோவாபரேடிவ் ஸொஸைடி லிட்., 6-A உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ்.

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ் லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஷ கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிரோம்.

நூற்றல்:

20 நெ.முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிரோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிரோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

உயர்த்ரமான :-

- சட்டைத் துணிகள்,
- கோட்டுத் துணிகள்,
- படுக்கை விரிப்புகள்,
- ஸ்நானத் துண்டுகள்

முதலியன

நூதன முறையில் கைத் தறியில்

உற்பத்தி செய்பவர்கள்.

TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,

(Incorporated in British India)

CANNANORE : : NORTH MALABAR.

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ.	5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ.	5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ.	2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ.	2,54,72,000
டிபாசிட்டுகள் 31–12–1944ல் இருந்தபடி	...	ரூ.	94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவ்தாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினுய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியக்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிலை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

கைதேர்ந்த வேலைக்காரருக் ·காக தயாரிக்கப்பட்டது

ஆப்டிகல் பைன்ஸ்

சரியான மேற்பரப்பு மழமழப்புக்கும் அளவு தவருது வெட்டுவதற்கும அஜாக்ஸ் ஆப்டிகல் பைனஸ் இன்றியமையாதவை. மூக்குக்கண்ணுடி வில்லைகளை தேய்த்து மழமழப்பாக்க அஜாக்ஸ் பைன்ஸ உபயோகிக்கப்படுவது மட்டுமின்றி தோல், சலவைக் கற்களை பட்டுப்போன்று மழமழப்பாக்கவும் உபயோகிக்கப்படுகின்றன.

அஜாக்ஸ் பிராடக்ட்ஸ் லிமிடெட்.

106, அரண்மனைக்காரத்தெரு. சென்னை.

மானேஜிங் ஏஜண்ட்ஸ்:

முருகப்பா & சன்ஸ், சென்னை.

தென்னிந்தியாவுக்கு ஸோல் விற்பனை ஏஜண்டுகள்:—

மார்ஷல் ஸன்ஸ் & கம்பெனி (இந்தியா) லிமிடெட்

தபால் பெட்டி நெ. 141 சென்னை.

10K-16

Telegrams :- "UMAYAL". Telephone :- 56 A.

UMAYAL WEAVING ESTT., LTD.,

Cannanore, N. Malabar.

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

BEDSPREADS
TABLE LINEN
FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS
DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS
TURKISH TOWELS
BATH GLOVES
BATH MATS
MUFFLERS ETC.

ENQUIRIES EARNESTLY SOLICITED.

ENCOURAGE HANDLOOM INDUSTRY.

"UMAYAL" FABRICS
AN ASSET TO EVERY HOME
EVERYTHING MADE TO ORDERS
POPULAR FABRICS
THROUGHOUT INDIA AND CEYLON.

Distributors for Mysore State :-
SRI UMAYAL STORES,
363, Avenue Road,
BANGALORE CITY.

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

நார்த் பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட் — திருவல்லிக்கேணி
மயிலாப்பூர் — தியாகராயநகர்
புரசவாக்கம் — மவுண்டுரோடு
எக்மோர்

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும்சப் ஆபீஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 68,71,800
செலுத்தப்பட்ட ,, ,, 48,90,215
ரிஸர்வ் நிதி ,, 55,00,000
டிபாஸிட்டுகள் 30—6—46 முடிய
ரூ. $17\frac{1}{2}$ கோடிக்கு அதிகம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் எற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's, Underwear Sport Shirts etc.,

S. BEEMIAH CHETTY

"WHITE SHOP"

Coimbatore.

★

நீங்கள் விரும்புவது

காமதேனு வனஸ்பதிதான். தவிர சௌகரியமான அளவுகளில், காற்று புகாத டின்களில் கிடைப்பதும் கூட. சிறிய, பெரிய குடும்பங்களுக்கேற்ற, 1 பவுண்ட், 10 பவுண்ட் டின்களிலும் விசேஷ தேவைக்கான 36 பவுண்ட் டின்களிலும் கிடைக்கிறது. இது பரிசுத்தமானது, கையால் தொடாதது. ஸீலிட்ட டின்களில் தான் விற்கப்படுகிறது. குறைந்த செலவில் நிறைந்த புஷ்டி. மணமும் இல்லாததால் பதார்த்தங்களின் சுய வாசனையைப் பாதிக்காது.

தயாரிப்பவர்கள்:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்,
மேட்டூர் அணை.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சி.

பூரண விற்பனையாளர்கள் :

தி அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்டிரிப்யூடர்ஸ் லிமிடெட்,
120, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

KAMADHENU
Vanaspati

FAS-
8219

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

[ஸ்தாபிதம் : 1906]

தமிழ் நாட்டின் தலை சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி. மக்கள் நல்வாழ்வே அடிப்படை லட்சியமாகக் கொண்டது. இன்ஷூர் செய்வதற்கோ, பிரதிநிதியாக இருப்பதற்கோ ஏற்ற கம்பெனி.

பொருளாதார புள்ளி விவரங்கள்:

1945-ல் புது பாலிஸிகளுடைய பிரிமியம்	17,48,590
பழைய பாலிஸிகளின் பிரிமியம்:	48,04,520
இன்ஷூர் செய்தவர்களின் நடைமுறையிலிருக்கும் மொத்த தொகை	13,98,54,180
மொத்தம் செலுத்தப்பட்ட தொகை:	1,16,24,880

இந்தியா வெங்கிலும், வெளியிலும், கிளைக் காரியாலயங்களும் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்,

எஸ்பிளனேட், சென்னை.

கோவை கிளை ஆபீஸ்:

அவிநாசிரோடு :: கோயமுத்தூர்

vasantham. Oct, 1946.

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.